# இளவேனில்



**கேசி தமிழ் மன்றம்**

இதழ் 26 - ஆடி 2024

Ilavenil - Casey Tamil Manram Inc - ISSN 2200-789X

# இளவேனில்

இதழ் 26 - ஆடி 2024
© கேசி தமிழ் மன்றம்

**ஆசிரியர் குழு**

சாந்தி சிவகுமார்
தாமரை மதியழகன்
ஜேகே
கேதா
ச. சத்தியன்
சரணியா சத்தியன்

**செயற்கை நுண்ணறிவு படங்கள் வடிவமைப்பு**

பிரவீணா சந்திரநாயகம்

**உள் வடிவமைப்பு**

சி.ஜெயானந்தன்

---

***Ilavenil***

*Issue 26 – July 2024*
*© Casey Tamil Manram Inc*
*ISSN 2200-789X*

***Editorial Team***

*Shanthi Sivakumar*
*Thamarai Mathiyalagan*
*JK*
*Ketha*
*S.Saththiyan*
*Saraniyah Saththiyan*

**AI Illustrations**

*Braveena Santhiranayakam*

***Design and Layout***

*S.Jeyananthan*

***editor@caseytamilmanram.org.au***

# பொருளடக்கம்


என் பாடசாலை, என் தெரிவு ........ 3

மாற்றத்திற்கு அஞ்சாதே ........ 5

ஒரு நாள் POWER CUT ........ 8

ஆசிரியர் தலையங்கம் - நம் குரல் ........ 11

Race to get the next best thing ........ 13

விளையாட்டுப் புத்தி ........ 17

தமிழ்த் திரை இசைக்கச்சேரி - புதிய பரிமாணம் ........ 21

ஏக்கம் ........ 26

நினைவலைகள் ........ 28

Harry Potter : Forbidden Forest ........ 32

விரல்களின் வேற்றுமை (நாடகம்) ........ 37

பரிமளாவும் Danielலும் ........ 45

உள நலனுக்கான உதவி ........ 49

மாற்றம் ஒன்றே மாறாதது ........ 52

பிள்ளை ........ 55

ஒப்பிட்டு உழல் நெஞ்சம் ........ 63



# என் பாடசாலை, என் தெரிவு



அர்ச்சனா ஆதவன்
(வயது—11)

CTM ஏற்பாடு செய்த தனியார் மற்றும் அரச பாடசாலைகள் பற்றிய ஒரு கலந்துரையாடலில் பங்கேற்க நான் அழைக்கப்பட்டேன். விவாதத்தில் என் எண்ணங்களை வெளிப்படுத்த எனக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. ஆகையால், அரசுப் பள்ளியில் படித்து, பின் தனியார் பள்ளிக்குச் சென்ற 11 வயதுச் சிறுமியான நான், இந்த இதழில் எனது பயணத்தை எழுத முடிவு செய்தேன்.


எனது பள்ளி வாழ்க்கை எனது வீட்டிற்கு மிக அருகில் உள்ள ஒரு அரசுப் பள்ளியில் தொடங்கியது. என்னைப் பொறுத்தவரையில் அரசுப் பள்ளியில் ஆச்சரியமூட்டும் வகையில் திறமையுடைய சிறப்பான ஆசிரியர்கள் இருந்ததுடன், பிற பாடத்திட்ட

நடவடிக்கைகளில் வாய்ப்புகளைப் பெறுவதற்கான அனைத்து வழிகளும் இருந்தன. ஒரே ஆசிரியர் எல்லாவற்றையும் கற்றுத் தந்ததால் அரசுப் பள்ளி எனக்கு என் கற்றலில் நம்பிக்கையை அளித்தது. எல்லாவற்றிலும் நமது பலவீனம் என்ன என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். என் வகுப்புத் தோழர்களாக நான் விரும்பும் நபர்களால் நான் சூழப்பட்டிருந்ததால், நாங்கள் கற்றுக்கொண்டிருந்த சூழல் பாதுகாப்பாக இருந்தது. நான் அரசு பள்ளியில் கொண்ட நட்பு மிகவும் சிறப்பானது, இன்று வரை நான் அவர்களுடன் தொடர்பில் இருக்கிறேன். நான் 4ஆம் ஆண்டு வரை அரசுப் பள்ளியில் படித்து வந்தேன், பின்னர் நான் ஒரு தனியார் பள்ளியில் சேர்ந்தேன்.

4ஆம் ஆண்டில், எனக்கு ஒரு தனியார் பள்ளியைக் குறித்த அறிமுகம் வழங்கப்பட்டது. அப்பள்ளியில் மாணவர்களுக்குக் கிடைத்த பல வாய்ப்புகளைக் கண்டு வியந்தேன். கச்சேரிகள், ஏபிஎஸ் விளையாட்டு மற்றும் கலை நிகழ்ச்சிகள் போன்ற பல்வேறு வழிகளில் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தும் வாய்ப்பு அவர்களுக்கு இருந்தது. இவை அங்கு கிடைக்கப்பெறும் வாய்ப்புக்களுள் ஒரு சில மட்டுமே. அத்தனியார் பாடசாலையில் எனது திறமைகளை ஒரே நேரத்தில் வளர்த்துக்கொள்ள முடியும் என்று நான் உணர்ந்தேன். உதாரணமாக கலை, விளையாட்டு மற்றும் கல்வி. ஒரு மதிப்புமிக்க தனியார் பள்ளியை எனது பெற்றோரின் வழிகாட்டுதலைப் பின்பற்றி தேர்ந்தெத்தது நான் எடுத்த சிறந்த முடிவாகும். அரசுப் பள்ளியை விட்டு நீங்குவது எளிதான முடிவாக இருக்கவில்லை. அந்த மாற்றம் தேவைதானா என்று முடிவு செய்ய பல நாட்கள் ஆனது. அரசுப் பள்ளியில் கல்வி பயின்றது பல அற்புதமான அனுபவங்களை எனக்கு அளித்திருந்தது. மேலும் எனக்கு அங்கே சிறந்த பல நண்பர்கள் இருந்தார்கள். நீண்டநாள் நண்பர்களை விட்டுப் பிரிவது கஷ்டமாக இருந்தது.

தனியார் பள்ளிக்குச் செல்வதற்காக, ஸ்கொலர்ஷிப் பரீட்சைக்கு ஆயத்தம் செய்வது மிகக் கடினமாக இருந்தது. எனது பாடசாலைப் பயணத்தில் எனது பெற்றோரின் வழிகாட்டலுடன் தொடர்வது கடினமாக இருந்தது. ஆனாலும் நான் விடாமல் நிறைய பயிற்சி செய்தேன். எப்படியாவது பரீட்சையில் சிறந்த புள்ளிகள் எடுக்க வேண்டும் என்று முயற்சி செய்தேன். தனியார் பள்ளிக்குச் செல்லும் வாய்ப்பு கிடைத்ததும் மிகவும் நிம்மதியாக இருந்தது. நான் தனியார் பள்ளிக்குச் சென்ற பின் பாரிய வித்தியாசத்தை உணர்ந்தேன். உதாரணமாக சிறிய அளவிலான வகுப்புக்கள், தனிப்பட்ட அக்கறை, பல்வேறு செயல்பாடுகள் மற்றும் அதிக வாய்ப்புகள். சரியான நேரத்தில் அல்லது முன்னதாகவே அதிக கற்றல் நடவடிக்கைகளைப் பெற முடிந்ததோடு வலைப்பந்து மற்றும் இசையில் எனது திறமைகளை வெளிப்படுத்த முடிந்தது. அங்கே கலை நிகழ்ச்சிகள் நடைபெறும். எனக்கும் அதில் தனியாக பங்கேற்க வாய்ப்புக் கொடுத்தார்கள். என்னுடைய முடிவில் நான் இன்று மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன்.

தனியார் பாடசாலையா அல்லது அரசுப் பாடசாலையா என்பது கடினமான தேர்வு, ஆனால் எதுவாக இருந்தாலும் எல்லாம் நல்லதுதான். உங்கள் பிள்ளைக்கு எது பொருத்தமானது என்பதை நீங்கள்தான் தேர்வு செய்ய வேண்டும். கல்வி அனைவருக்கும் முக்கியமான தேவையாக கருதப்படுகிறது. பாடசாலை என்பது மாணவர்கள் தங்கள் எதிர்காலத்தில் அவர்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் தகவல் மற்றும் திறன்களைப் பாதுகாக்கும் இடமாகும்.



பிரணேவ் கௌசிகன்
(வயது–9)

# மாற்றத்திற்கு அஞ்சாதே

“பிரணேவ் ! பிரணேவ் ! எழும்புடா”. எனது புதுப் பாடசாலையுடைய முதல் நாள் இன்று. *Serpell Primary School* தான் என்னுடைய புதிய பாடசாலை.

நாங்கள் Perthல் 9 வருடங்கள் இருந்து விட்டு, *Melbourne*ற்கு வந்தோம். நான் அங்கே

முதன் முதலாக உற்சாகத்துடனும், பதட்டத்துடனும், சந்தோசத்துடனும் பாடசாலை சென்றேன். எனது பழைய பாடசாலையின் பெயர் *Excelsior Primary School*. அது ஒரு பெரிய பாடசாலை. சுமார் 450 மாணவர்கள் படிக்கின்றனர். *Science lab, music room, oval* மற்றும் *art room* போன்ற பல வசதிகள் இருந்தன. எனக்கு அங்கே பல நண்பர்கள் இருந்தனர். நாங்கள் சேர்ந்து *soccer, footy* மற்றும் *two squares* விளையாடுவோம்.

*I was extremely smart in my class.* பல பல சான்றிதழ்கள் மற்றும் பரிசுகளை வென்றிருக்கின்றேன்.

"பிரணேவ்! இன்னும் எழும்பவில்லையா? நேரம் போகுது" என்று அம்மாவின் சத்தத்துடன் எழும்பினேன். எனக்கு அதே உணர்வுகள். ஆனால் சந்தோசத்திற்குப் பதிலாகக் கொஞ்சம் பயமாகவும் இருந்தது.

எப்படி வகுப்பிற்குச் செல்வது? எப்படி நண்பர்களை உருவாக்குவது? எங்கே உட்காருவது? என்ன விளையாடுவது? போன்ற பல கேள்விகளுடன் பாடசாலையுள் காலை வைத்தேன். இந்தப் பாடசாலை மிகப்பெரிய (*massive*) பாடசாலையாக இருந்தது. பெரிய *oval*. வெவ்வேறு வயதினருக்கு வெவ்வேறு மைதானங்கள் மற்றும் மாடிக் கட்டிடங்கள் என்பவற்றைக் கண்டு ஆச்சரியப்பட்டேன். அப்பத்தான் எனக்கு விளங்கியது, எனது பழைய பாடசாலை எறும்பைவிடச் சிறியது! என்னைப் போல பல மாணவர்கள் வந்துகொண்டு இருந்தனர். அவர்களுடைய சூரியன் போன்ற மஞ்சள் சட்டையும், ஆகாயம் போன்ற நீல காற்சட்டையும் மிக அழகாக இருந்தது. அது என்னைக் கவர்ந்துவிட்டது. எனது ஆசிரியர் என்னை என்னுடைய வகுப்பிற்கு அறிமுகப்படுத்தினார்.

எனக்குப் பக்கத்தில் உள்ள மாணவர்களுடன் கதைத்து நண்பர் ஆகினேன். அவர்கள் விளையாடும் basketball மற்றும் marbles எனக்குப் புதிதாக இருந்தது. ஆகையால் எனக்கு விளையாட முடியாமல் இருந்தது. இரண்டாவது நாளிலேயே *"you don't play well"* என்று சொல்லித் துரத்திவிட்டார்கள். அந்த நாள் ஒரு மணி நேர இடைவேளையில் ஒருத்தரும் இல்லாமல், பள்ளியை சுற்றி நடந்தேன். அன்று வீட்டிற்கு வந்ததும், "அப்பா... அப்பா... எனக்கு ஒரு *basket ball*ம் கொஞ்ச *marbles*ம் வாங்கித் தாரிங்களோ?" என்று கேட்டேன். அதற்கு "கட்டாயம் வாங்கித் தாரன்" என்று அப்பா சொன்னார். நான் சந்தோசத்துடன் நானும் *basketball* பழகி விளையாடலாம் என்று நினைக்கும் போது, அம்மா "இப்ப என்ன அவசரம்? வார இறுதியில் வாங்கித் தாரேன்" என்று குண்டைப் போட்டார். அப்பொழுது எனது உள்மனது புறுபுறுத்தது, "எனக்கு மட்டும்தானே அவசரம் விளங்கும்." ஒவ்வொரு இரவும் *basketball* கனவு வந்தது. கடைசியாக வார இறுதியும் வந்தது. பந்தும் கிடைத்தது. *basketball*ல் பயிற்சி எடுத்ததால் எனது நண்பர்கள் *"You're playing very well. Can you please join in our team"* என்று கேட்டனர். நான் அவர்களுடன் சந்தோசமாக விளையாடினேன். எனது தனிமை என்னை விட்டு ஓடியது.

எனது பழைய பள்ளியில் *music, library, science* என்பன ஆண்டு முழுவதும் படித்தேன். எனக்கு *science* மிகவும் பிடித்து இருந்தது. நான் *scientist* ஆக வேண்டும் என்று கனவு கண்டேன். ஆனால் இங்கே ஒரு வருடத்தில் ஒரு குழுவிற்கு *music*, ஒரு குழுவிற்கு *library* மற்றும் *science* என்று மாறி மாறி வரும். எனக்கும் *science*க்கும் இருந்த தூரம் கூடிவிட்டது.

எனது scientist கனவும் மறைந்துவிட்டது. நான் அங்கே musicல் recorder பழகினேன். இங்கே ukele பழகுகின்றேன். இங்கே வந்ததால் எனக்குப் புதிய skill கிடைத்ததாக சந்தோசப்பட்டேன்.


எனது பழைய பள்ளியில் நான் மிகவும் திறமைசாலியாக இருந்தேன். எல்லாத்திலும் முதலிடம் பெற்றேன். நிறைய சான்றிதழ்களும் பரிசில்களும் கிடைத்தன. இங்கே வந்தபோதுதான் தெரிந்தது, என்னைவிட திறமையான மாணவர்கள் இருக்கின்றார்கள் என்று, அவர்கள் நிறைய பரிசில்களை பெற்றனர். எனக்கு அது மிகவும் கவலையாக இருந்தது. எனது இடத்தை யாரோ பறித்துவிட்டது போல் இருந்தது. அந்த இடம் எனக்கு கிடைக்குமா? கிடைக்காதா? என்ற பயமும் கவலையும் வந்தது. பல நாள் முயற்சி செய்து அந்த இடத்தை அடைந்து விட்டேன். I am one of the best students in my class now.

எனது புதிய பள்ளி இப்போது, பழைய பள்ளியாக மாறிவிட்டது. எனக்கு நிறைய நண்பர்கள் இருக்கின்றனர். நான் best studentம் ஆகிவிட்டேன். எனது பாடசாலை நாட்கள் மிகவும் சந்தோசமாக கழிகின்றது. எனது பாடசாலை எனக்கு மிகவும் பிடிக்கும்.

***NEVER FEAR CHANGE***
***You will get what you want if you try hard.***



# ஒரு நாள் POWER CUT



வர்ஷனா ஜனந்தன்
(வயது–13)

இலங்கையில் பிறந்திருந்தாலும் இரண்டு மாதங்கள் மட்டுமே அங்கு வாழ்ந்து குடிபெயர்ந்து மத்திய கிழக்கு சென்று பின்னர் ஆஸ்திரேலியா வந்தடைந்தேன். அதனால் எனக்கு இலங்கை வாழ்க்கை முறை சரியாக தெரியாது, குறிப்பாக யாழ்ப்பாணக் கிராம வாழ்க்கை தெரிந்திருக்க வாய்ப்பில்லை. ஆனால் எனது அப்பா பிறந்த நாட்டில் அதிக தொடர்புகள் கொண்டவர். அவருக்கு சொந்த நாடே சொர்க்கம்.

எப்போதும் இலங்கை பற்றியும் தாம் வாழ்ந்த முறை பற்றியும் அடிக்கடி கூறிக் கொண்டேயிருப்பார். சில

வேளைகளில் சலிப்பாக இருந்தாலும் அவரின் கதைகளை ஆர்வமாகக் கேட்டிருக்கின்றேன். வேண்டாம் என்றாலும் சொல்லி முடிக்காமல் நிறுத்த மாட்டார். அவர் சிறு வயதில் வாழ்ந்த வாழ்க்கை முறைகள், பாடசாலையில் கல்வி கற்ற முறைகள், நண்பர்களுடன் சேர்ந்து விளையாடிய விளையாட்டுகள், அவர்களுக்கு இருந்த வசதிகள் என கேட்பதற்கு மிகவும் ஆச்சரியமாகவும் சுவாரசியமாகவும் இருந்தது. இப்படியெல்லாம் வாழமுடியுமா? என்ற கேள்விகளை நான் அடிக்கடி கேட்டிருப்பேன். அதை விட மின்சாரமே இல்லாமல் போர் சூழலில் வாழ்ந்த அனுபவங்கள் என்னால் நம்பவே முடியவில்லை. எத்தனையோ நாடுகளுக்குப் பயணம் செய்திருக்கிறார் பலதடவை. ஆனால் அப்பாவுக்கு அந்த யாழ்ப்பாண வாழ்க்கைதான் சொர்க்கம், ஆஸ்திரேலியா வாழ்க்கையும் சுத்தமாக பிடிக்காது. எனக்கு அது ஒரு அழகான கிராம வாழ்க்கை என்பது வடிவாகத் தெரிகிறது. விக்டோரியா கிராம வாழ்க்கை என்றாலும் கம்பளிக்குள்தான் வாழ்க்கை. எப்படி இருந்தாலும் என்னாலோ என் நண்பர்களாலோ இதை கற்பனை செய்து கூட பார்க்க முடியாது. அது அப்பாக்கு ஒரு அழகிய நிலா காலம். அம்மா இலங்கை தலைநகரில் வாழ்ந்தவர். அவர் வாழ்க்கை கொஞ்சம் வித்தியாசமானது. அவருக்கும் நிறைய சுவாரசியமான அனுபவங்கள் உண்டு.

அப்பா பாடசாலை வாழ்க்கை பற்றி சொன்ன கதைகள் என்றால், பழுதான கட்டிட வகுப்பறைகளிலும் மர நிழலிலும் படித்ததும், வீட்டுப்பாடம் செய்யாமல் ஆசிரியரிடமிருந்து கடுமையான தண்டனை பெற்றதும், பென்சில் வாங்கினால் அது முழுமையாக தேயுமட்டும் பாவித்ததும், மை முடிந்த பேனாவை சுடு தண்ணியில் போட்டு முடிந்தவரை பாவித்ததும், canteen இல் கல்பனிஷ் plain tea குடிச்சதும், கிணற்றிலே வாளியால் தண்ணீர் அள்ளி குடிச்சதும் என பல நம்பமுடியாத விடயங்கள் அடுக்கிக்கொண்டே போகலாம். ஆனாலும் பாடசாலை நுழைவாயிலில் ராணுவத்திடம் சாப்பாட்டு பெட்டியை திறந்து காட்டிச் செல்ல வேண்டும் என்பது மிகவும் வேதனையாக உணர்ந்தேன். அப்பாவின் பாடசாலை Hartley College. போரால் முழுமையாக பாதிக்கப்பட்ட பாடசாலை ஆகும். Tuition கிளாசில் monitor ஆக இருந்தபோது ஒரு மாணவன் சத்தம் போட்டதற்காக, தான் தென்னம் பாளையால் அடிவேண்டியதை சொல்லிச் சிரிப்பார். ஆனாலும் எமது பாடசாலை வாழ்வைவிட இலங்கைப் பாடசாலை வாழ்வு மிகவும் கட்டுக்கோப்பானது என்பதை உணர்கிறேன்.

நண்பர்களுடன் கோவிலடியிலும் குளத்தடியிலும் விளையாட்டு திடலிலும் இரவு வரை இருந்து கதைப்பதாக சொல்லுவார். அதனாலோ என்னவோ ஒவ்வொரு நாளும் மாலை கடுமையான சிரிப்பொலியுடன் பாடசாலை நண்பர்களுடன் வாட்ஸாப்பில் கதைப்பார். நாம் எங்கு சென்றாலும் அவருக்கு நண்பர்கள் உண்டு, தேடி வந்து உதவி செய்வார்கள். எல்லா இன நண்பர்களும். அவருக்கு நண்பர்கள் மிகமுக்கியம். தாங்க முடியாத பாசம், அப்பாடா. அது உண்மையில் google chat ஐ விட நல்ல விடயம்தான். எமக்குத்தான் கொடுத்து வைக்கவில்லை. தொழில்நுட்பம் உறவுகளை நலிவடைய செய்கிறது என்பதுதான் உண்மை.

அப்பா வீட்டில் வளங்கள் வீணடிப்பதை கடுமையாகக் கண்டிப்பார். நீரை கொஞ்சமாக வீணடித்தாலும் கோபப்படுவார். சூழலை நன்றாக நேசப்பவர். பனை மரம், அதன் பயன்கள் பற்றி நிறையவே கூறுவார். தேவையில்லாமல்light எரிய விடமாட்டார். ஒவ்வொரு பென்சிலும் புத்தகத்தாளையும் கவனமாகப் பாவிக்கச் சொல்லுவார். சில வேளைகளில் அப்பாக்கும் அம்மாக்கும் இதனால் சண்டை கூட வரும். சில

வேளைகளில் என்னடா இவர் இப்படி இருக்கிறார் என்று எண்ணத் தோன்றும் ஆனால் அவர் சொல்லுவது மிகவும் நியாயமானது. அவர்கள் வாழ்ந்த முறையும் அது. அதில் உண்மையும் உண்டு.

என்னதான் கஷ்டம் இருந்தாலும் மின்சாரம் இல்லாமல் வாழமுடியுமா அது எப்படி சாத்தியம் என்று என்னால் இன்றும் நம்ப முடியவில்லை. நாலு கரண்டி எண்ணை விளக்கிலே படித்தார்களாம். டிவி பார்க்க முடியாது. mobile phone இல்லை, washing machine இல்லை, fridge இல்லை, சுடுநீர் இல்லை, கம்ப்யூட்டர் இல்லை. வெளியுலக தொடர்பு இல்லை. எப்படி இந்த வாழ்க்கை சாத்தியம்? அதனால் அவர்களுக்கு விளையாட்டும் படிப்பும் மட்டும் தான் வாழ்க்கையாக இருந்தது. இதனாலோ என்னவோ எந்தக் கேள்வி கேட்டாலும் பதில் சொல்லக் கூடியவராக இருக்கிறார். இந்த எல்லா கேள்விக்கும் பதிலை மெல்பெர்னின் இருநாள் power cut ஓரளவுக்கு பதிலைக் கொடுத்திருந்தது.

திடீர் என்று ஏற்பட்ட மின்துண்டிப்பு எனக்கு ஒரு வித்தியாசமான அனுபவத்தை கொடுத்திருந்தது. மெழுகுதிரியும், அப்பா வைத்திருந்த சிறிய LED விளக்குகள் எமது வீட்டிற்கு வெளிச்சம் தந்தன. நான் பயந்தேன், ஆனால் மின் விளக்குகள் இல்லாமல் தினசரி வேலைகளைச் செய்ய வேடிக்கையாக இருந்தது. அமைதியான சூழல் ஏற்பட்டது, புதிய அனுபவம். பார்க்க youtubeம் இல்லை, டிவி இல்லை, ஒன்றும் இல்லை. வேறு வழியின்றி புத்தகம் எடுத்து படிக்கத் தொடங்கினேன். படிக்கப் படிக்க நன்றாக உணர்ந்தேன். மனம் ஒருநிலைப்பட்டது. எந்தவித சஞ்சலமும் இல்லை. கவனம் சிதறவில்லை. அற்புதமான உணர்வு. மின்சாரமற்ற மங்கிய ஒளியுலும் ஒரு அழகான வாழ்க்கை இருப்பதை உணர்ந்தேன். எனது அப்பாவின் குழந்தைப் பருவம் மற்றும் மின்சாரம் இல்லாத ஒரு தலைமுறையை அவர்கள் எப்படிக் கடந்தார்கள் என்பதையும் நான் இந்த மின்வெட்டின் மூலம் புரிந்து கொண்டேன். நாம் வாழும் வாழ்வும் அதன் நடைமுறையும் எம்மைச் சூழ உள்ளவற்றைப் பொறுத்தே அமைகின்றது. இதை நாம் காட்டு வாழ்க்கையில் இருந்து நகரவாழ்க்கை வரை அவதானிக்கலாம். வறுமை வாழ்க்கையில் இருந்து செல்வந்த வாழ்க்கை வரை அவதானிக்கலாம். கிடைக்காததை எண்ணி வருத்தப்படாமல் கிடைத்ததை கொண்டு சந்தோசமாக வாழ்வதே வாழ்க்கை என்பதே உண்மை. எமது பெற்றோரின் வாழ்க்கை மிகவும் சுவாரசியமானது, பல அனுபவங்களைக் கொடுத்திருக்கிறது.

மின்வெட்டின்போது மின்சாரத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்டேன். அது இல்லாமல் வாழ்வது இன்றைய காலத்தில் எவ்வளவு கடினமாக இருக்கும் என்பதையும் நான் அறிந்து கொண்டேன். இன்றைய காலத்தில் மின்சாரமும் தொலைபேசியும் சுவாசிக்கும் உயிர் வாயு போன்றதாக மாறிவிட்டது. “Communication and electricity has become an oxygen for our life now”. Mobile phone இல்லாமல் வாழவே முடியாது என்ற சூழ் நிலைக்கு எமது சமுதாயம் தள்ளப்பட்டு விட்டது.

நீங்கள் யோசிக்கலாம் இதை ஏன் நான் எழுதுகிறேன் என்று, நாம் எமது பெற்றோர் வாழ்ந்ததற்கு முற்றிலும் வித்தியாசாகமான வாழ்வைத்தான் இங்கு வாழ்கின்றோம். அவர்கள் இரண்டு வாழ்க்கை முறைகளையும் ஒப்பிட்டு பார்த்து குழப்பம் அடைவது நன்றாகத் தெரிகிறது. இது நாம் சிந்திக்க கூடிய ஒரு எனது அனுபவப் பகிர்வு.

ஆசிரியர் தலையங்கம் - நம் குரல்

# அன்பும் நன்றியும்

இளவேனில் ஆசிரியர் குழு

இளவேனில் ஆடி இதழில் உங்களைச் சந்திப்பதில் இளவேனில் ஆசிரியர் குழுவினர் பெருமகிழ்வடைகிறோம். அவுஸ்ரேலியத் தமிழ் மக்களின் வாழ்வியலை, அதன் அன்றாடச் சிக்கல்களை, சவால்களை, சாதனைகளை, இன்னும் பேசப்படாத அல்லது பேசத்தயங்கும் விடயங்களைப் பேசும் களமாக இம்முறையும் இளவேனில் பல ஆக்கங்களைச் சுமந்து வெளிவருகிறது.

சஞ்சிகையில் வெளிவரும் ஆக்கங்கள் மக்களைச் சென்றடைய வேண்டும் என்ற உந்துதலில் ஒவ்வொரு வெளியீட்டைத் தொடர்ந்தும் ஒரு வாசகர் அனுபவப் பகிர்வை ஒழுங்கு செய்து வருகிறோம். கடந்த சித்திரை மாதம் இடம்பெற்ற வாசகர் அனுபவப் பகிர்வில் பல வாசகர்கள் கலந்துகொண்டு தங்களைக் கவர்ந்த, பாதித்த ஆக்கங்களைப் பற்றிய கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்கள். அதனைத்தொடர்ந்து தனியார் மற்றும் அரச பாடசாலைகளின் சாதக பாதகங்களை ஒப்புநோக்கும் ஒரு கருத்தரங்கும் நடைபெற்றது.

இளையோரும் வளர்ந்தோரும் தயக்கமின்றித் தம் கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ளும் ஒரு களமாக இளவேனில் பரிணமித்திருக்கிறது. நம் சமூகத்தோடு இயல்பாகப் பின்னிப் பிணைந்துள்ள ஒப்பீடும், போட்டி மனப்பாங்கும் இளையவர்களிடத்திலே அதிக தாக்கத்தை ஏற்றப்படுத்தியிருப்பது, அவர்களின் ஆக்கங்கள் வழியாகப் புலப்படுகிறது. உளநலன் பற்றிய புரிதல் எல்லோருக்கும் தேவையாயிருக்கிறது. வளப்பற்றாக்குறை, போர்ச்சூழல், குறைவான வாய்ப்புகள், மிகக் குறைவான தெரிவுகள் எனும் சூழலில் வளர்ந்த ஒரு தலைமுறையும் அதிலிருந்து பெரிதும் வேறுபட்ட ஒரு சூழலில் வளரும் அடுத்த தலைமுறையும் வாழ்வை எதிர்நோக்கும் விதம் வேறுபட்டிருக்கிறது. அடுத்தது என்ன என்ற அங்கலாய்ப்பும், ஒருவரை ஒருவர் ஒப்பு நோக்கி எப்போதும் யாராலோ நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை நோக்கி ஓடிக்கொண்டிருப்பதே வாழ்க்கை என்ற விம்பம் நிறைவற்ற மனதையே தருகிறது. இனம்புரியாத அச்சம் நிகழ்காலத்தைக் கவனிக்கவிடாமல் எதிர்காலத்தை நோக்கியே

தள்ளுகிறது. இதனால் தலைமுறை இடைவெளி மெல்ல மெல்ல விரிவடைகிறது. அது ஆரோக்கியமான ஒரு சமூகத்திற்கு உகந்ததல்ல. தலைமுறைகள் இடையிலான ஒரு உளமார்ந்த கருத்துப் பரிமாற்றம் தழைத்தோங்க வேண்டும். அதற்கு இளவேனில் ஒரு பாலமாக, தூண்டுதலாக அமையும் என்பது எம் உறுதியான நம்பிக்கை.

ஆதலால், இலக்கிய வாசகர்கள், தமிழ் ஆர்வலர்கள் அல்லது இந்த சஞ்சிகையில் ஆக்கங்களை எழுதியவர்கள் என்கிற வட்டத்தைத் தாண்டி எல்லாத் தமிழ் மக்களையும் இளவேனில் சென்றடைய வேண்டும் என்பது எமது பேரவா. உங்கள் வரவேற்பறை மேசைகளில், கைத் தொலைபேசித் திரையில், நாளாந்த உரையாடல்களில் இளவேனில் ஆக்கங்கள் இடம்பெறவேண்டும். ஒருமுறை புரட்டிப் பார்த்து, அருமை என்ற ஒற்றை வார்த்தையோடு கடந்து போகாமல், உங்கள் மனதில் ஒன்றிரண்டு விடயங்களாவது பதிந்தால் அதுவே எமக்குப் பெரும் நிறைவைத் தரும்.

ஓயாமல் ஓடிக்கொண்டிருக்கும் நம்மில் பலருக்கு எதையும் நின்று நிதானித்து உள்வாங்க நேரமிருப்பதில்லை. இருந்தாலும் இளவேனில் நம் எல்லோருக்குமானது. ஓரிரு நிமிடங்கள் ஒதுக்கி, ஒரு கோப்பைத் தேநீரோடு ஒரு பக்கம் வாசியுங்கள். முன்முடிவுகளை சற்றுத் தள்ளிவைத்து சொல்லும் கருத்தை உள்வாங்குங்கள். உங்கள் உள்ளத்தின் உணர்வுகளுக்கு வரிவடிவம் கொடுக்க உந்துதல் இருந்தால் எம்மைத் தொடர்புகொள்ளுங்கள். அடுத்த இளவேனிலில் உங்கள் ஆக்கமும் இடம்பெறலாம்.

இது எங்கள் சஞ்சிகை மட்டுமல்ல, நம் எல்லோரதும் சஞ்சிகை.





Vipushanaa Theeban

# RACE TO GET THE NEXT BEST THING

As a student in my first year of university, having completed my HSC last year I think I have a lot to say about my experience. I know a lot of people talk about that year being the most difficult and perhaps at some point we realise it never really ends.

This race to get the next best thing. It's this mentality that I will be happy once I get into my dream school and then once you do it I will be happy once I get into my dream course, but once you do it I will be happy once I get my dream job, but once

you do it I will be happy once I get a promotion. It's always the next best thing. So when will we be happy?

When I was in year 4 it was all about doing well in OC, did I want to move schools? No. But I did it anyway to make my parents happy. In year 6, it was all about getting into the best high school. At this point, I had some interest in my future but as much as it was about getting into my dream school it was also about making my parents proud. I could never forget that car ride on the way home from class when I opened my selective results to find that I got my second choice of school. I remember Amma had nothing really to say, I could tell she was disappointed, I was too but I think it hurt more that after a year of agonizing over this test I still wasn't good enough. I almost made it but just not quite enough. As a 12 year old, I thought I was a failure, I thought I was less than I was because of the system that constantly tore me down, through the ranking systems and people telling me I wasn't good enough to achieve my dreams.

This was until I went to high school and got the best mark in my class for math and I realised just maybe, I wasn't so stupid anymore. It was at this point that I thrived off the academic validation I got from people at school. The way everyone told me I was smart so I worked harder and harder to prove to everyone that I was good enough, When I moved to the selective school that I never even dreamed I could possible get into as a 12 year old, I wasn't the smartest anymore and I realized how much my environment pulled at me like strings. The way that being in an environment that pulled me up dragged me higher and one where I had lost my identity pulled me down. It definitely challenged me and probably left me with a higher ATAR but internally I struggled more than I ever have before.

I've always tried to prove myself to do better to make my parents proud and most importantly to make myself proud. I've always had a dream for my future that I wholeheartedly believed in until about a year ago. It was a dream my parents agreed with and because of it, built these extremely high expectations I wasn't sure I could live up to. When I was in year 12, It wasn't the studying or the time management or even the exams that were all that difficult, It was dealing with the voices in my ear and controlling the voices in my head. I tried my best not to listen to my peers talking about what rank would ensure that they get their dream degree or their dream uni, i tried not to listen when people would predict their atar, I tried not to listen when I was told my dreams may be too far off, I tried not to listen when my

parents thought I wasn't working hard enough even though I did the best I could. But that wasn't the hardest part. The hardest part was silencing the voices in my head that repeated 'don't let them down' 'dont let yourself down' 'work harder' 'maybe you can't do it' 'maybe you're not good enough' till one day I believed it didn't matter how much I tried I was never going to get my first choice. I accepted my fate or rather my identity that I wasn't naturally talented, I was just a hard worker and




someone who needs more time than what I can get and I have to convince myself that's okay.

Getting an atar that would allow me to do everything but the one thing I actually wanted left me wondering what I really wanted. I think in year 12 it was eventually just a game of getting to the end so that I can finally take a break from this mental struggle, disappointment and confusion. But now that I can think about it and my parents' voices out loud and in my head have not stopped, it forces me to wonder whether my dreams really were mine or were they just a projection of what my parents wanted for me. Now, I'm simply lost because with all the noise, I can't seem to hear myself.

So what do I have to say? As much as guidance for kids is necessary, from a very young age I grew up with the sole purpose of satisfying my parents with everything I did and seeking validation to prove to myself that I was good enough. But I think at some point everyone realises that the point of life is not to live for the happiness of others but to live for your own happiness but at what cost? For a lot of parents in our community, the only acceptable career is a doctor, lawyer or engineer because apparently that's the only way to make a living and have a responsible job that gives you status, money and stability. I believe in the world we live in today, the possibilities are endless, the richest people in the world are not doctors, lawyers and engineers but instead people who have ideas that solve problems. The people who are smartest with their money are people who have passive streams of income as diversifying their income so that

they don't rely on one income stream. I personally believe that if I stuck to a 9 to 5 job that satisfied my parents, I would be doing myself a great disservice that not only underutilised my talents but also would suck the enjoyment and passion that you are supposed to gain from a job. Both my parents love their jobs but again I have a doctor for a dad and an engineer for a mother but quite frankly, its the only world I know but I want to know a world much bigger. The pressure many young people feel to know exactly what it is they want to do for the rest of their lives is one I know too well but also one that seems somewhat ridiculous. As my dad likes to talk about, the frontal lobe isn't developed until people have reached their 20s. Not only that but how could I possibly have known exactly what I'm supposed to do when my entire life I was in a cocoon of asian people who strived for the exact same thing. Without knowing what the rest of the world looks like, how can an 18 year old make a decision that will dictate the rest of their life.

If there was one thing I wish I could do is stop time, just for five minutes of complete silence, just so that I can think for myself what I really want before the external influences of everyone and everything I have ever known take over like a virus rapidly spreading through my mind. Isn't it time for us to change the way we think? Yes I know my parents worked very hard to get me and my siblings to where I am today. Yes, I know their childhood was not easy and they craved stability and status and a lot of kids feel a sense of guilt when they do not satisfy their parents because they know the sacrifices their parents have made for them. But times are different, we don't live in a war torn country fighting for survival and there are endless ways to gain stability and I don't believe that this community is oblivious to that fact. I know my parents know there are different ways to make an income and gain stability but I think there is one thing that lingers that leaves them continuing to pressure me. And that would be status. But for all the parents out there? Let me ask you a couple questions. Do you really know what your kids truly desire? What are your kids truly passionate about? Would you really want your kids to sacrifice their happiness, satisfaction and comfort in life just so that you can feel good about telling your friends that your child goes to med school? If you value your child's happiness, perhaps you will think twice before you throw away their dreams and demand your own.



# விளையாட்டுப் புத்தி



கேதா

விளையாட்டில் வெற்றியும் தோல்வியும் சமமானவை. விளையாட்டு வீரர்களிடம் விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு இயல்பாகவே இருக்கும். விளையாட்டால் விளையும் நன்மைகளைப்பற்றி இப்படி நிறையக் கேள்விப்பட்டிருக்கிறோம். கடுமையாகப் போராடியபின் வென்றவர்களும் தோற்றவர்களும் நட்போடு கைலாகு கொடுத்துக் கடந்து போவதை நாம் அன்றாடம் காண்கிறோம். இந்த முதிர்ச்சி எப்போது ஒரு வீரரிடம் உருவாகிறது? இது விளையாட்டுத் திடலைத் தாண்டியும் நிலைத்திருக்குமா? மைதானத்தில் எமக்கு நாயகர்களாகத் தெரியும் வீரர்கள், அன்றாட வாழ்வில் எப்படி இருக்கிறார்கள்? அவர்கள் வாழ்வின் சலிப்பான சவால்களை எவ்வாறு எதிர்கொள்கிறார்கள்? இப்படிப் பல கேள்விகள் எனக்கு எழுவதுண்டு. யாரிடம் கேட்பது?

எனது கல்லூரி நாட்களில் நான் பார்த்து வியந்த வீரர்களில் ஒருவன் கௌசி. கல்லூரியின் துடுப்பாட்ட அணிக்கும் கால்பந்தாட்ட அணிக்கும் தலைவன். எப்போதும் சிரித்த முகம் வாய்த்த வெகு சில மனிதர்களில் கௌசியும் ஒருவன். கௌசியின் அந்த சிரிப்பில் முக்கிய பங்காற்றிய முன்வரிசையின் நான்கு பற்களை ஒரு எகிறு பந்து பறித்துக்கொண்ட பின்னாலும் கௌசி சிரிப்பை விடவில்லை. இப்போது கட்டுப் பற்கள் மீண்டும் புன்னகையை முழுமையாக்குகின்றன. பின்னாளில் முழங்காலில் ஒரு அறுவைச் சிகிச்சை, இன்னும் பல காயங்கள் என்று விழுப்புண்களைச் சுமப்பதில் கௌசி ஒரு பெரிய பழுவேட்டரையர். தமிழ்ப் பள்ளியில் பிள்ளைகளை இறக்கிவிட்டுத் தன்பாட்டில் றீல்ஸ் பார்த்துக்கொண்டிருந்த கௌசியை “வா மச்சான் ஒரு தேநீர் குடிப்பம்” என்று அருகிலிருந்த தமிழ்க் கடைக்கு அழைத்துப் போனேன்.

"மச்சான் பள்ளிக்கூட காலத்திற்குப் பிறகு நீ கிரிக்கெட் விளையாடேல்லையோ?" எனது திடீர்க் கேள்வி, கௌசியை அந்தநாள் நினைவுகளுக்குள் தள்ளியிருக்க வேண்டும். தனது அடையாளமான சிரிப்பை உதிர்த்தபடி, "அந்தளவுக்கு விளையாடேல்லதான். ஆனாலும் நிறைய விளாயாடினான். இங்க ஒஸ்திரேலியாக்கு வந்தும் நிறைய கழக மட்டப் போட்டிகள் விளையாடியிருக்கிறன். பயிற்சியாளரா இருக்கிறன். ஒரு முழங்கால் காயத்திற்குப் பிறகு விளையாடுறத சரியாக் குறைச்சிட்டன்." மீண்டும் சன்னமான சிரிப்பு.

கௌசியின் திறமையை ஒரு ரசிகனாக தொலைவிலிருந்து வியந்து பார்த்திருக்கிறேன். அதைவிட எந்தப் பெருமையும் இல்லாமல் எளிமையாகப் பழகும் அவன் இயல்பைப் பார்த்து அதிகமாகவே ஆச்சரியப்பட்டிருக்கிறேன். பலபேர் மத்தியில் ஒரு நாயகனைப் போல விளையாடியபோதும், என் போன்றவர்களுடன் சேர்ந்து ஒரு குளக்கரை வெளியில் விளையாடிய போதும் கௌசியால் ஒரே மாதிரி நடந்து கொள்ள முடிகிறது. "எப்பிடி மச்சான் உன்னால எப்பவும், சிம்பிளா ஒரு பந்தாவு மில்லாமல் ஒரேமாதிரி இருக்க முடியுது?" என்று கேட்டேன். "பின்ன எப்பிடி இருக்கோணுமடா?" என்று கேட்டுவிட்டு "எத்தினைபேரைப் பார்க்கிறம். ஒவ்வொருத்தரும் ஒவ்வொருமாதிரி. எனக்கு இது பிடிச்சிருக்கு. சின்னனில இருந்து நிறைய வெற்றி தோல்வியைப் பார்த்து வளர்ந்ததால கொஞ்சம் நிதானம் வந்திருக்கலாம். "

"தோல்விகள் உன்னை வருத்திய தில்லையா?"

"யார் சொன்னது. அந்தநேரம் வாழ்க்கை வெறுக்கும். பிறகு அடுத்த போட்டிக்குப் போகேக்க அது மறந்திடும். விட்ட பிழையை திருப்பி விடக்கூடாதெண்டு யோசிப்பன், மற்ற படி தோல்வியைத் திருப்பித் திருப்பி யோசிக்கமாட்டன்".

"விளையாடில கிடைச்ச அனுபவம், நாளாந்த வாழ்க்கையில உனக்கு உதவுதா?"

"நிறைய இடத்தில உதவி செய்யுது. நான் பாடசாலை மாணவனாக இருக்கும்போதே பழையமாணவர்கள் என்னை விடப் பல வயது கூடினவர்களோட சேர்ந்து கழக மட்டப்



போட்டிகளில் விளையாடியிருக்கிறேன். ஒரு போட்டியில நான் ஆட்டமிழக்காமல் நிற்க, மற்றப் பக்கத்தால மளமளவெண்டு விக்கட்டுகள் சரியத் தொடங்கீட்டுது. நான் சின்னப் பெடியன். மற்றவன் போலர். இரண்டு ஓவரில 25 ரன் அடிக்கோணும். பந்து வீசுபவன் பிரபலமான ஒரு வேகப் பந்துவீச்சாளன். எப்பிடி யோசிச்சாலும் எங்களுக்கு வாய்ப்பே இல்ல. இருந்தாலும் மனதுக்குள்ள ஒரு வைராக்கியம். முதல்



பந்து ஆறு ஓட்டம். அதுக்குப் பிறகு இரண்டு நான்கு ஓட்டம். இரண்டு ஓவர்ல வெற்றி. மறக்கவே முடியாத வெற்றி. எப்பவெல்லாம் வாழ்க்கையில பிரச்சினைகள் வரும்போது, எப்பிடித்தான் இதைத் தாண்டப் போறம் எண்டு நினைக்கேக்க அந்தப் போட்டியைத்தான் நினைச்சுப் பார்ப்பன். ஒரு நம்பிக்கை வரும். இப்ப வாற சவால்கள் வேறுதான், ஆனால் அதை எதிர்கொள்ளத் தேவையான நம்பிக்கையை அந்தப் பழைய அனுபவம் குடுக்குது".

"சிலநேரம் வேலையில வாற பிரச்சினைகள், வேலை இல்லாமல் போய் வேற வேலை தேடவேண்டி வாற சூழ்நிலைகள், இன்னும் எத்தனையோ நெருக்கடிகள் வரும்போதெல்லாம் நான் அந்தப் போட்டியை நினைச்சுப் பார்ப்பன். தளர்ந்துபோயிருந்த மனத்துக்குப் புதுத் தெம்பு கிடைச்சிடும்."

ஆச்சரியமாயிருந்தது. விடாமுயற்சி மற்றும் நேர்மறையான எண்ணங்களை விளையாட்டுக் கற்றுக் கொடுக்கிறது என்பதை மிக எளிமையாக விளங்க வைத்தான்.

"சரி உன்னுடைய பிள்ளைகள் விளையாட்டில ஆர்வமா இருக்கிறாங்களா?"

"ஓம். இரண்டுபேரும் துடுப்பாட்டம், கால்பந்து விளையாடுறாங்கள். எங்களுக்கு இருந்ததைவிட அவங்களுக்கு நிறைய வளங்கள் இருக்கு. நான் சின்னனில இருந்தே சொல்லிச் சொல்லி அவங்களுக்கும் விளையாட்டில நல்ல விருப்பம். நான் பள்ளி நாட்களில் விளையாடியபோது, வீட்டில அதைப் பற்றிய அறிவோ ஆர்வமோ இருந்ததில்லை. நான் விளையாடும் போட்டிகளைப் பார்க்கக் கூட அம்மாவோ, அப்பாவோ வந்ததில்லை. அதை பிழையெண்டு சொல்லேலாலது, ஆனால் ஒரு கவலைதான். அதனால நான் என்ற பிள்ளையளுக்கு முடிஞ்ச அளவு விளையாட்டுக்கு உதவி செய்யுறன்."

"உன்ற பழைய கதைகளை ஆர்வமாக் கேப்பாங்களா?"

"ஓம். அவங்களுக்கு எங்கட பழைய கதை களைக் கேட்க நல்ல விருப்பம். திரும்பத் திரும்பக் கேட்பார்கள். அதைவிடப்

பெரிய சந்தோசம் இல்லையடாப்பா”

“படிப்பா விளையாட்டா என்ற விவாதம் வாறதில்லையா. குறிப்பா உன்னுடைய மனைவியின் கருத்து என்ன?”

“அந்த விவாதம் இல்லாமல் இருக்குமே. படிப்பு முக்கியந்தானே. அதை விட்டுப் போட்டு ஒண்டும் செய்யேலாது. எண்டபடியால் நான் அவங்களுக்குச் சொல்லுறனான், இரண்டையும் சமாளிச்சுக்கொண்டு போகோணும். மனைவிக்குப் படிப்புத்தான் முக்கியம். துவக்கத்தில் இந்த விஷயத்தில இரண்டு பேரும் வேறு வேறு நிலைப்பாட்டிலதான் இருந்தம். இருந்தாலும் போகப்போக இப்ப மனைவியும் விளையாட்டும் தேவைதான் எண்டு சொல்லுறா”

இவன் எந்தச் சவாலையும் பொறுமையாயும், நிதானமாயும் கையாளத் தெரிந்த தேர்ந்த விளையாட்டுவீரன் என்பது விளங்கியது.

“இருந்தாலும் பிள்ளைகளின் விளையாட்டுப் பயிற்சி, போட்டிகள் மற்ற விளையாட்டுத் தொடர்பான எல்லா விடயங்களையும் நான்தான் செய்யுறன். படிப்பு சம்பந்தமான வேலைகளுக்கு மனைவியைக் கேட்பதில் எந்த சிக்கலுமில்லை. விளையாட்டெண்டு வந்தா அது என்ற வேலைமட்டுந்தான் எண்டொரு எண்ணம் மனதில இருக்கு. சிலநேரம் அது ஒரு பெரிய அழுத்தமாயும் இருக்குது.”

வெற்றி பெற்றவர்களின் பிள்ளைகள் மீதான எதிர்பார்ப்பு ஒரு மிகப்பெரிய அழுத்தமாக மாறிவிடுவதுண்டு. தம்மில் தம் மக்கள் மேன்மையாக இருக்கவேண்டும் என்ற பெற்றோரின் ஆவல் ஒரு இரண்டு பக்கமும் கூரான வாள் போன்றது.

“உன்னைவிட அதிகமாய் உன் பிள்ளைகள் சாதிக்க வேண்டும் என்பது சவாலாக இல்லையா?”

“அப்பிடி யோசிச்சால்தானே மச்சான். அவங்கள் விருப்பத்தோடு விளையாடுறாங்கள். பயிற்சி செய்கிறாங்கள். என்னைவிட அதிகமான வாய்ப்புகளும் வளங்களும் அவங்களுக்கு இருக்கு. இனி எவ்வளவு சாதிக்கப் போறாங்கள் எண்டது அவங்களைப் பொறுத்தது. நான் என்னால எவ்வளவு முடியுமோ அந்தளவுக்கு உதவியா இருப்பன். என்னுடைய கனவுகளை அவங்கள் மேல போடக்கூடாது.”

“தெளிவாத்தான் கதைக்கிறாய். சரி நீ சொல்லிக்குடுத்தால், பிழையைச் சுட்டிக் காட்டினால் கேப்பாங்களா?”

“அது அவங்கள் இருக்கிற மூடப் பொறுத்து மாறும். மனமறிஞ்சு நடக்கோணுமடாப்பா!” மீண்டும் அதே சிரிப்பு.


மைதானத்தில் பட்டறிந்தது வேலை முதல் வீடுவரை கைகொடுப்பதைப் பார்க்கிறபோது வியப்பாகத்தான் இருந்தது. வெற்றிகளின் கிறக்கத்தை விட, விளையாட்டுக் கொடுக்கும் இந்தப் பக்குவத்தைப் பார்க்கச் சற்றுப் பொறாமையாயும் இருந்தது.

"This is really good, but are you sure you want this for an Indian Concert"?, மார்ச் மாத, 11 மணி காலை வெயிலில் பொட்டானிக்கல் கஃபேயில் ஸ்டராங் லாட்டேயை குடித்தபடி, John Cain அரங்கததில் அமைக்கப்போகிற மேடை வரைபடத்தை லேப்டாப்பில் பார்த்து Lawry சந்தேகமாக



# தமிழ்த் திரை இசைக்கச்சேரி

## புதிய பரிமாணம்




பாலா

கேட்டார்.

அதற்கு ஒரு மாதத்திற்கு முன் பிப்ரவரி மாதம், சிட்னியில் இருந்த வந்த நண்பன் மே மாதம், மெல்போர்ன் மற்றும் சிட்னியில் தமிழ்த் திரைப்பட இசை நிகழ்ச்சி நடத்தப்போகிறோம், மெல்போர்னுக்கு நீ உதவி செய்யணும் என்றபோது நான் சிறிது தயக்கத்தோடு தான் சரி என்றேன். சின்ன சின்ன கலை நிகழ்ச்சிகள் நடத்திய அனுபவம் இருந்தாலும், நான் யோசித்ததற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

சென்னையின் மார்கழி மாத குளிரை வருடத்தில் முக்கால்வாசி கொண்டிருக்கும் மெல்போர்னில், மார்கழி மாத இசை நிகழ்ச்சியினைப்போல் தமிழ்த் திரைப்பட இசை அமைப்பாளர்கள் நிகழ்ச்சி, டிவி இசைப் போட்டியில் பிரபலம் அடைந்தவர்கள் நிகழ்ச்சி என்று வருடம் முழுவதும் ஏதாவது ஒன்று நடந்துகொண்டு இருப்பதால், பெரிய பேனர் இல்லையென்றால் கூட்டம்

வருவது கஷ்டம்.

அதுவும், திரையுலகில், இசைஞானி, இன்னிசைத் தென்றல், இசைப் புயல், என்று பல மாற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும், அவர்களது இசைக்கச்சேரி என்று வரும்பொழுது, இன்றும் அது அந்தக் காலத்து மெல்லிசைக் கச்சேரியாகத்தான் நடைபெறுகிறது. மேடை பக்கத்தில் இருக்கும் முதல் பத்து வரிசையில் இருப்பவர்கள் எல்லா பாடல்களுக்கும் கையை மட்டும் தட்டி ரசிப்பார்கள், அதே சமயம் இசையை உள்வாங்கி மெய்மறந்து ஆடிக்கொண்டு ரசிப்பவர்கள் பெரும்பாலும் பின் வரிசையில்தான் இருப்பார்கள்.

அதனாலேயே, இந்த கச்சேரிகளுக்கு இன்னும் 70'ஸ் மற்றும் 80'ஸ் காலத்து மக்கள் மட்டுமே வருகிறார்கள், இன்றைய இளம் வயதினர் அதிகமாக வருவதில்லை. அவர்களுக்கு மேற்கத்திய இசை மற்றும் பாலிவுட் இசை நிகழ்ச்சியில் இருக்கும் ஆட்டம் பாட்டம் இல்லாததே அதற்கு காரணம்.

ஆனால் இந்த முறை வருவது அனிருத் என்று நண்பன் சொன்னவுடன், எனக்குள் இருந்த "கூட்டம் வருமா"? என்ற சந்தேகம் போய், எப்படியாவது நல்ல இடத்தில இருந்து பார்க்க டிக்கெட் கிடைத்திடும் என்கின்ற நம்பிக்கையுடன் கண்டிப்பா செய்யலாம் என்றேன்.

நண்பனின் பார்ட்னர், இதற்கு முன் ஆஸ்திரேலியாவில் AR ரஹ்மான் நிகழ்ச்சியை வெற்றிகரமாக நடத்திய அனுபவம் இருந்ததால், சிங்கப்பூர் அமைப்பு , நண்பனது கம்பெனியுடன் பார்ட்னெர்ஷிப்பில் அனிருத்தின் "Hukkum - World Tour", ஆஸ்திரேலியா நிகழ்ச்சியினை நடத்த ஒப்பந்தம் செய்திருந்தார்கள்.

இவர்களுக்கு முன்னர் பல பேர் அனிருத்தை ஆஸ்திரேலியாவிற்கு அழைத்துவர முயற்சித்தும் முடியாமல் போனதால், இங்குள்ள பல நிகழ்ச்சி அமைப்பாளர்களுக்கு ஆச்சரியமும் அதே சமயத்தில் இவ்வளவு பெரிய நிகழ்ச்சியை மூன்று மாதத்திற்குள் வெற்றிகரமாக நடத்த முடியுமா என்ற சந்தேகமும் இருந்தது.

அடுத்த இரண்டு மாதத்தில், சிங்கப்பூரில் இருந்து டெக்னீசியன் குழு, சென்னையில் இருந்து அனிருத்தின் பர்சனல் மற்றும் ப்ரோக்ராம் மேனேஜர் குழு என்று ஒவ்வொரு வாரமும் வரிசையாக வந்தவர்களுடன் இரண்டு நகரத்தில் அரங்க அமைப்பு, குழுவிற்குரிய தங்கும் மற்றும் உணவு வசதிகள், அவர்கள் மற்றும் அவர்களது இசைக்கருவிகளின் போக்குவரத்து வசதிகள், மிக முக்கியமான நிகழ்ச்சிக்குரிய டிக்கெட் விற்பனை என்று பல ஏற்பாடுகள் மற்றும் விவாதத்தில் கலந்து கொண்டதின் மூலம் , இது ஒரு புதுவிதமான, பிரம்மாண்ட தமிழ் இசை நிகழ்வாக இருக்கும் என்பது உறுதியானது.

இத்தனை ஏற்பாடுகளில், அதிக கவனமும் முக்கியத்துவமும் கொடுக்கப்பட்டது கச்சேரிக்குரிய மேடை மற்றும் ஒளி, ஒலி அமைப்பு. இதற்கு சிங்கப்பூர் ஸ்டேஜ் டெக்னீசியன் Adam, Melbourne Docklands ரூமில் ஒரு நாள் முழுவதும் சாப்பிடாமல் இருந்து வரைந்த மேடை வரைபடத்தைப் பார்த்து, பொட்டானிக்கல் கஃபே-யில் ஆச்சரியப்பட்டு Lawry கேட்ட கேள்விதான் , "This is really good, but are you sure you want this for an Indian Concert"?.

Lawry, 73 வயது இளைஞர், Taylor Swift -இன் ஆஸ்திரேலியா நிகழ்ச்சிக்கு, மேடை, ஒலி மற்றும் ஒளி அமைத்துக் கொடுத்தவர். அவரது சந்தேகத்துக்குக் காரணம், அனிருத்தின் முதல் மேடை வரவை பிரம்மாண்டப்படுத்த மேடையின் அடியில் இருந்து மெதுவாக மேலே எழும்புவதற்கு Hydraulic லிப்ட், ரசிகர்களின் அருகில் வரைக்கும் செல்வதற்கு நீண்ட catwalk நடைபாதை, மற்றும் கிட்டத்தட்ட 45 நிமிடம், அந்தரத்தில்



பெரிய கீபோர்டுடன் நின்று கொண்டு பாட அரங்கத்தின் கூரையிலிருந்து தொங்கும் பெரிய ஊஞ்சல் என்று ஹாலிவுட், ராக் ஸ்டார் நிகழ்ச்சிகளுக்குரிய மேடை அமைப்பை வரைபடத்தில் பார்த்துதான்.

இத்தனை ஏற்பாடுகளையும் மெல்போர்ன் மட்டும் இல்லை, ஒரு நாள் இடைவேளையில் சிட்னியிலும் செய்யவேண்டும் என்று சொன்னபொழுது, இதனை இரண்டு மாதத்திற்குள் தயார் செய்து, இரண்டு அரங்கத்தில் ஒரு நாள் இடைவேளையில் அமைத்து தரவேண்டும் என்ற சவால் Lawry-க்கு கொஞ்சம் பெரியதாகத்தான் தோன்றியதுபோல் இருந்தது.

அடுத்து இரண்டு மணிநேரம் நடந்த பேச்சுவார்த்தை இதை போன்ற நிகழ்ச்சிகளுக்கு பின் இருக்கும் திட்டமிடலின் பிரம்மாண்டத்தை காட்டியது.

அந்த சவாலுக்குரிய தொகையை Lawry சொன்னவுடன் திட்டமிடலைவிட இந்த நிகழ்ச்சியின் பண முதலீட்டின் பிரம்மாண்டம் இன்னும் பெரியதாக தோன்றியது.

Taylor Swift நிகழ்ச்சிக்கு மேடை அமைப்பை ஒரு பெரிய warehouseஇல் முழுவதுமாக அமைத்து, ஒத்திகை பார்த்து, பின்னர் அதனை பகுதி பகுதியாக பிரித்து பன்னிரெண்டு பெரிய டிரக்கில் எடுத்துச் சென்று ஒவ்வொரு அரங்கத்திலும் அமைத்து கொடுத்ததை சொன்னபொழுது, அவர் கேட்ட தொகைக்கு காரணம் புரிந்தது.

Lawry கேட்ட ஒரே உதவி, மெல்போர்னில் நிகழ்ச்சி முடிந்தவுடன், அவர்களுக்கு மேடையை 12-மணிக்கு கொடுத்துவிடவேண்டும் என்பதுதான். ஏனென்றால் அவர்கள் அதற்க்குப் பிறகு மொத்த மேடை மற்றும் ஒளி, ஒலி அமைப்பை பிரித்து டிரக்கில் ஏற்றி மறுநாள் இரவுக்குள் சிட்னியில் மீண்டும் அமைத்து தர வேண்டும்.

அடுத்தபடியாக குழுவினருக்கு தேவையான தங்கும் வசதிகளை ஏற்பாடு செய்து கொடுக்க, மெல்போர்னில் உள்ள அனைத்து 5-ஸ்டார், மற்றும் 7-ஸ்டார் ஹோட்டல்களை விஜயம் செய்து, கடைசியில் உலகப் புகழ்பெற்ற Crown Casino என்று முடிவு செய்யப்பட்டது. தான் தங்கும் அதே இடத்தில்தான் அனைத்து குழுவினருக்கும் தங்க ஏற்பாடு

செய்யவேண்டும் என்று அனிருத் சொன்னது, அவரது குழுவின் மேல் அவருக்கு உள்ள நட்பினைக் காட்டியது. உணவு ஏற்பாடுதான் மிகவும் சுலபமான காரியமாக இருந்தது என்று சொல்லலாம். அதற்குக் காரணம் அனிருத் மற்றும் அவரது பெற்றோர்கள் சைவ உணவு போதும் என்றதுதான். மேலும், சரவண பவன் அருகிலே இருந்ததும் ஒரு காரணம்.

இந்த ஏற்பாடுகளை முடிவு செய்வகற்காகவே சென்னையிலிருந்து அனிருத் குழுவில் இருந்து இருவர் வந்தார்கள், அவர்களுக்கு பெயர் "Recce" team (reconnaissance team).

இப்படி, preproduction வேலைகள் ஒருபுறம், நிகழ்ச்சி நாளின் திட்டமிடல் ஒரு புறம் என்று எல்லோரும் மும்முரமாக இருக்க, சிங்கப்பூர் அமைப்பினருக்கு, டிக்கெட் விற்பனையின் மிதமான வேகம் கொஞ்சம் கலக்கத்தை ஏற்படுத்தியது .

நிகழ்ச்சி வியாழக்கிழமை என்றாலும் அனிருத்தின் முதல் ஆஸ்திரேலியா நிகழ்ச்சி என்பதால் டிக்கெட் விற்பனைக்கு எந்த பிரச்சினையும் இருக்காது என்று இங்கு உள்ள எல்லோருக்கும் நம்பிக்கை இருந்தது. முக்கியமாக, முதல் முறையாக, மேற்கத்திய இசை நிகழ்ச்சிபோல் மேடைக்கு மிக அருகே ஆடிக்கொண்டே பார்ப்பதற்கு என்று இரண்டு பெரிய நிற்கும் இடம் உள்ளது என்ற அறிவித்தவுடன், அந்த இரு வகை டிக்கெட்டின் மிக அதிக விலை பற்றி சிறிதும் கவலைப்படாமல், தெரிந்த மற்றும் தெரியாத நண்பர்கள் குழுவில் இருந்து ஒவ்வொருவரும் குறைந்தது முப்பது டிக்கெட் அந்த இடத்திற்கு வேண்டும் என்று கோரிக்கை விடுத்தது, இளம் வயதினரிடம் இருந்த வரவேற்பை உறுதிப்படுத்தியது. அதில் ஆச்சரியப்படுத்திய விஷயம் ஒரு மாதத்திற்கு முன்பு தான் ஆஸ்திரேலியாவிற்கு மேல் படிப்புக்காக வந்த மாணவர்கள் குழு மொத்தமாக இருநூற்று ஐம்பது டிக்கெட்டை மேடைக்கு அருகில் நின்று பார்ப்பதற்கு வாங்கியதுதான். அதேபோல், நிகழ்ச்சி நாள் நெருங்க நெருங்க, டிக்கெட் விற்பனை சூடு பிடித்ததை பார்த்து நம்பிக்கை கூடியது.

நிகழ்ச்சியின் முதல் நாள் இரவு, அனிருத் மேடையில் ஒத்திகை பார்த்ததை கண்டவுடன் எல்லோருக்கும் உறுதியாகி விட்டது, இது கண்டிப்பாக மெல்லிசை கச்சேரியாக இருக்க போவதில்லை, முற்றிலும் ஒரு புது அனுபவமாக இருக்க போகிறது என்று.

மாலை 7.30 மணி நிகழ்ச்சிக்கு காலை 11.30 மணிக்கே வெளியில் சேர்ந்துவிட்ட கூட்டத்தை பார்த்து, கேட் எண் 8ல் இருந்த செக்யூரிட்டி கேட்டது, "Is the performer big shot in India"?. ஏனென்றால் இதுவரைக்கும் இந்திய இசை நிகழ்ச்சிக்கு இவ்வளவு சீக்கிரம் கூட்டம் வந்ததில்லை என்றார்.

அப்படி வந்த கூட்டம் எல்லாம் standing டிக்கெட் வாங்கிய இளம் வயதினர். மாலை 4 மணிக்கு கிட்டத்தட்ட ஒரு சிறு கச்சேரியே வெளியே நடந்து கொண்டிருந்தது. அரபிக்குத்து, காவாலா, ஆலுமா டோலுமா என்ற புதிய சொற்களின் அலங்காரத்தில் தமிழ் இசை அகராதியில் இடம்பெற்றுள்ள புதிய பாடல்களுக்கு ஆடியே களைத்துப்போய் பல பேர் கீழே உட்கார்ந்துவிட்டார்கள்.

வாசல் திறந்தவுடன் உள்ளே வந்த ஒவ்வொரின் முகத்திலும் பூரிப்பு கலந்த மகிழ்ச்சி, எதிர்பார்ப்பு. பல பேர், முதல் முறை தமிழ் கச்சேரிக்கு என்று வந்தவர்கள். 5 வயது முதல் 50 வயது வரை உள்ளவர்கள் வந்ததில் ஆச்சிரியம் இல்லை, ஆனால் 75 வயது தம்பதியினர் வந்து அனிருத்தின் பட போஸ்டருடன் புகைப்படம் எடுத்துக் கொண்டதை பார்க்க இசைக்கு மொழி மட்டும் இல்லை வயதும் இல்லை என்று தோன்றியது அழகாக இருந்தது.

7.30 மணிக்கு ஆரம்பித்து MC, Minister speech என்று முடித்து, DJ கவுண்டவுன் ஆரம்பிக்க, மொத்த அரங்கமும் உடனிணைந்தது. மேடை முழுவதும்

சிகப்பு கலரில் ஒளிர, பிரம்மாண்ட டிஜிட்டல் திரையில் outline வரைபடத்தில் அனிருத்தின் முகம் மெதுவாக தோன்ற, பின்னால் “இங்கு நான் தான் King” என்ற Jailer படத்தில் வரும் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் வசனத்துடன், Hydraulic liftல் அனிருத் மேலே வர, இந்த முறை அரங்கம் முழுவதும் அதிர்ந்தது.

அடுத்து மூன்று மணிநேரம், இடைவெளியில்லாமல், why this kolaveriஇல் இருந்து, Jailerஇல் புகழ்பெற்ற காவாலா வரை அனைத்து புகழ்பெற்ற பாடல்களையும் பாடி, எல்லோரையும் பாடலுடன் ஆடல் என்று மகிழ்ச்சியில் மூழ்கடித்துவிட்டார்கள்.

மேலே தளத்தில் முதல் வரிசையில் 50 டிக்கெட் ஒன்றாக வாங்கிய நண்பர்கள் குழுவில் இருந்த எல்லா குழந்தைகளும் ஒரு நிமிடம் கூட இருக்கையில் உட்காராமல் மூன்று மணிநேரமும் ஆடிக்கொண்டே இருந்தார்கள்.

ஆடவைக்கும் பாடல்களின் நடுவே, அந்தரத்தில் ஊஞ்சலில் நின்றபடி அரைமணி நேரத்துக்கும் மேல், அனிருத் பாடிய, பெரும்பாலும் காதல் பாடல்களை வரி விடாமல் கூடவே இங்கு பிறந்து வளர்ந்து வரும் இளவயதினர் தெளிவான உச்சரிப்புடன் பாடுவதை அருகில் இருந்து கேட்ட பொழுது ஆனந்தமாக இருந்தது. ”சிலர் சிரிப்பார், சிலர் அழுவார் நான் சிரித்துக்கொண்டே அழுகின்றேன்” என்ற தத்துவத்தை ”கெத்து காட்டிட்டு அழுவுறனே அழுதுமுடிச்சிட்டு சிரிக்கிறனே” என்று feel பண்ணி இன்றைய தமிழில் அவர்கள் பாடியதை கேட்க சொற்கள் மாறினாலும் பொருள் மாறாமல் தமிழ் இவ்வழியில் வளர்வதை பார்க்க ஆனந்தமே!.

ஊஞ்சல் மெல்லிசை முடித்து, அனிருத் உள்ளே சென்றவுடன் ஆஹா அவ்வளவுதானா என்று கூட்டம் சிறிது சோர்வடைந்தது. ஆனால் திடீரென்று இருக்கையில் இருந்த மக்களின் நடுவே தோன்றி, படிவழியாக இறங்கி அனைவருக்கும் நன்றியை கூறிக்கொண்டே வந்து மேடையில் ஏறி, ”என்ன மெல்போர்ன்? இறங்கி குத்தலாமா?” என்று கேட்டவுடன், மூன்று மணி நேரத்துக்கு முன் இருந்த துள்ளலுடன் அரங்கம் முழுவதும் எழுச்சியடைந்தது . அடுத்த அரைமணிநேரத்துக்கு, சென்னையின் சிறப்பு குத்தாட்டம் மெல்போர்னின் hallmark ஆட்டமாக மாறியதை பார்த்து, சிங்கப்பூர் மற்றும் சிட்னி அமைப்பாளர்களும் அவர்களது முயற்சி வெற்றி அடைந்துவிட்டது என்று இறங்கி குத்தாட்டத்தில் கலந்துகொண்டார்கள்.

மெல்போர்னின் வெற்றி அடுத்த இரண்டு நாளில் சிட்னியின் டிக்கெட் விற்பனையிலும், அங்கு வந்த கூட்டத்தின் சந்தோஷத்திலும் ஆடலிலும் தெரிந்தது.


சிட்னியில் நிகழ்ச்சி முடிந்தவுடன், அனிருத் மீண்டும் இங்கு கண்டிப்பாக வருவேன் என்று கூறியதை கேட்டு அமைப்பாளர்களுக்கு பெரும் மகிழ்ச்சி. முக்கியமாக , அரங்கம், மற்றும் மேடை அமைப்பு தனக்கு மிகவும் பிடித்திருந்தது என்று அனிருத் கூறியது Lawryக்கு கூடுதல் சந்தோஷம்.

“Never had such fun with Indian music", "It was like DJ party", "50-cents, Taylor Swift and now Anirudh" - என்று இளம் ரசிகர்கள் ஆரவாரத்துடன் கூறியது, தமிழ்த் திரை இசைக் கச்சேரி எடுத்துள்ள புதிய பரிமாணத்தின் வெற்றியைக் காட்டுகிறது என்றே தோன்றுகிறது.

விடைபெறும் பொழுது, Lawryயிடம், "what do you think now" என்று கேட்டபொழுது, You guys proved me wrong, this shows that you guys need more such format and setup".

அவர் கூறியதைப் போல் இந்த புதிய பரிமாண இசையின் வழியாகவும் தமிழ் இன்றைய தலைமுறையினரிடம் வளரும் என்றே தோன்றுகிறது.

“பாலே இங்கு தேறல? பாயசம் கேக்குதா?” என்று கேட்பது தெரிந்தாலும், கண்டிப்பாக இவ்வழியிலும் தமிழ்பால் பொங்கி வ(ள)ரும் என்று நம்புகின்றேன்.



# ஏக்கம்

**பத்மா**

யன்னல் திரைச்சீலையை மெல்ல விலக்கி வெளியே எட்டிப் பார்க்கின்றாள் கோமதி. மகன் மத்தியானம் சாப்பிட வாறன் என்று சொன்னான் இன்னும் காணவில்லை. மிகவும் குளிரான காலம் மதியம் ஒரு மணியாகிவிட்டது. பொறுமையற்றவளாக அடிக்கடி எட்டிப்பார்ப்பதும் கதிரையில் இருப்பதுமாக இருந்தாள். கோடை காலமாக இருந்தால் வெளியே போய்ப் பார்த்துக் கொண்டிருப்பாள். அவளுக்கு நேரமும் போகுதில்லை. தொலைபேசியை எடுத்து முகநூலை நோட்டம் விட்டுக் கொண்டிருந்தாள். அதுவும் அலுத்துப் போகவே பழைய நினைவலைகள் அவளைப் பின்னோக்கி இழுத்துச் சென்று கொண்டிருந்தது.

அப்போது அவள் இளமைக்கல்வி கற்றுக்கொண்டிருந்த நேரம். பாடசாலை முடிந்ததும் ஒவ்வொரு பிள்ளைகளின் பெற்றோரும் தாயோ அல்லது தந்தையோ வந்து கூட்டிக்கொண்டு போவார்கள். இவளுக்கு தாயில்லை. தந்தை இன்னொரு திருமணம் செய்து, சித்திதான் இவளைப் பராமரித்து வருகிறாள். இதனால் பாடசாலை முடிந்ததும் வீட்டிற்குத் தனியேதான் வருவாள். அப்போது அவர்களைப் பார்க்கும் போது மிகவும் கவலையாக இருக்கும். மற்றவர்கள் மாதிரி எனக்கும் அம்மா இல்லையே என்று மிகவும் ஏக்கமாக இருக்கும். சித்தி தன்

பிள்ளைகளை நல்ல பாடசாலையில் விட்டுப் படிப்பித்தாள். ஆனால் கோமதியை பக்கத்திலிருக்கும் ஒரு அரசினர் பாடசாலையில் விட்டுப்படிக்க வைத்தாள். மற்றவர்கள் குறை கூறக்கூடும் என்பதற்காக எங்க படித்தாலும் சரிதானே என்று சொல்வாள்.


கோமதி அந்தப்பாடசாலையில் படித்தாலும் மிகவும் கெட்டிக்காரியாகப் படித்தாள். பாடசாலை ஆசிரியர்கள் எல்லோருக்கும் அவளை மிகவும் பிடித்துப் போய்விட்டது. பாடசாலை விட்டு வீட்டிற்கு வந்ததும் வீட்டுவேலைகளை எல்லாம் சித்தி செய்யச் சொல்வாள். அவளும் சலிக்காமல் எல்லாவற்றையும் முடித்து விட்டு வீட்டுப்பாடத்தையும் முடித்து விட்டுப் படுப்பாள். பின்பு காலையில் எழுந்ததும் வீடு வாசல் கூட்டி வீட்டு வேலை எல்லாம் முடித்துவிட்டுத்தான் பாடசாலை செல்வாள். கடவுள் அவளுக்குக் கொடுத்த வரம் மிகுந்த ஞாபகசக்தி. பாடசாலையில் ஆசிரியர் என்ன படிப்பிக்கிறாரோ அதை அப்படியே உள்வாங்கிக் கொண்டாலே போதும். இதைப் பார்க்கும்போது சித்திக்கு மிகவும் எரிச்சலாக இருக்கும், எப்படித்தான் கோமதி பாஸ் மார்க் எடுக்கிறாளோ என்று. எவ்வளவு வீட்டு வேலை செய்தும் மனம் தளராமல் அவள்படிக்க வேண்டும் என்ற மனநிலையிலேயே இருந்தாள்.

பத்தாம் வகுப்பு சோதனை வந்தது. அவள் எட்டுப் பாடத்திலும் மிகவும் திறமையான சித்தியடைந்தாள். பின்பு உயர்தரவகுப்பிற்குச் சென்றாள். அதே பாடசாலையில் படிப்பைத் தொடர்ந்தாள். இரண்டு வருடத்தில் பரீட்சை முடிந்ததும் சித்தி அவளை விவாசாயி ஒருவனுக்குத் திருமணம் செய்து வைத்து விட்டாள். அவளும் மிகவும் கவலை தோய்ந்த முகத்துடன் திருமணத்துக்கு ஒப்புக்கொண்டாள். ஒரு கதவு மூடினால் இன்னொரு கதவு திறக்கும் என்பார்கள். அது போலத்தான் இவ்வளவு நாளும் பட்ட கஷ்டத்திலிருந்து விடுபடுவதற்கு அவளுடைய கணவன் மிகவும் நல்லவனாக இருந்தான்.

அவள் தனது விருப்பத்தை, தனது படிக்க வேண்டும் என்ற விருப்பத்தைக் கணவரிடம் சொன்னாள். கணவரும் மறுப்புத் தெரிவிக்காமல் அவளுடைய விருப்பத்திற்கு உடன்படுவதாக தெரிவித்தார். அவளது பரீட்சைப் பெறுபேறுகள் மிகத்தரமாக இருந்ததால் அவள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கு மருத்துவ பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்டாள். கணவரின் உதவியுடன் தனது படிப்பு முடித்து வைத்தியராக பணிபுரியத் தொடங்கினாள். அவளுக்கு இரண்டு ஆண் குழந்தைகள் பிறந்து இரண்டு வயதிருக்கும்போது அவளுடைய நெஞ்சில் இடி பாய்ந்தது போல் அவள் பணி புரிந்து கொண்டிருக்கும்போது செய்தி வந்தது. அவளுடைய கணவன் மாரடைப்புக் காரணமாக இறந்து விட்டான். அவள் செய்வதறியாது திகைத்து நின்றாள். பிறகு மனதை தேற்றிக்கொண்டு பிள்ளைகளை வளர்ப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தாள்.

கோமதிக்கு வெளிநாட்டில் வேலை செய்வதற்கான வாய்ப்பு ஒன்று வந்தது. அவள் அதைப் பயன்படுத்தி வெளிநாட்டிற்குச் சென்றாள். பிள்ளைகளுக்காக தன் வாழ்க்கை முழுவதையும் தியாகம் செய்து அவர்களைப் படிப்பித்து நல்ல நிலையில் அவர்கள் இருக்கின்றார்கள். அவள் தனியாக இருக்கின்றாள். பிள்ளைகள் எவ்வளவோ வற்புறுத்தியும் தனக்கு தனியாக இருக்கத்தான் விருப்பம் என்று கூறிவிட்டாள். பிள்ளைகள் தங்களுக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் அம்மாவை வந்து பார்ப்பார்கள்.

அப்படித்தான் வாறன் என்று சொன்ன மகனை எதிர்பார்த்து ஏக்கத்துடன் பார்த்துக்கொண்டிருக்கிறாள்.



# நினைவலைகள்

**இந்திரா**

ஒரு மின்னஞ்சல், என் வாழ்வின் ஆழ்ந்த கடலில் நங்கூரமிட்டிருந்த நினைவலைகளை அசைத்தது. அதில் எங்கள் இயக்குநர்களில் ஒருவர் திடீரென்று இறந்துவிட்டார் என்று குறிப்பிட்டிருந்தார். நான் அவருடன் நெருக்கமாக வேலை செய்யும் ஒரு நபர்! நேற்றுக்கூட அவருக்கு மின்னஞ்சல் அனுப்பியிருந்தேன். முழு அலுவலகமும் அதிர்ச்சியில் உறைந்தது! என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை!

எல்லாராலும் எல்லாவற்றையும் வார்த்தைகளில் வடிப்பது கடினம். குறிப்பாக நம்மை ஆழமாகப் பாதிக்கும் கதைகள், மனிதர்கள் மற்றும் சூழ்நிலைகளை வார்த்தைகளால் எளிதில் வெளிப்படுத்த முடியாது. என் வாழ்க்கையில் சந்தித்த ஒரு மனிதரைப் பற்றி எழுத பல முறை முயற்சித்தேன். ஆனால் அந்த நபரைப் பற்றியும் அவருடன் நான் பகிர்ந்து கொண்ட நிகழ்வுகளைப் பற்றியும் நான் எவ்வளவு மறுபரிசீலனை செய்தும், என்னால் அதனை உணர்வுபூர்வமாக எழுத்தாக்கம் செய்யமுடியவில்லை. மனிதர்கள் எதை ஆவணப்படுத்துகிறோமோ அதை மட்டுமே நம்மால் இந்த உலகுக்குச் சொல்ல முடிந்தது. ஆனால் அதையும் தாண்டி நம் வாழ்வின் பல உணர்வுகளை எப்போதும் நம் உள்ளத்தின் ஆழத்தில் பத்திரப்படுத்துவோம். தமிழ் போன்ற ஆழமான மொழியில் கூட சில சமயங்களில் அந்த உணர்வுகளை வெளிப்படுத்த வார்த்தைகள் கிடைப்பதில்லை. அல்லது, அந்த உணர்வுகளுக்கு ஒரு எழுத்துருவம் கொடுத்தால் அவை நம்மை விட்டுப் பிரிந்து சென்றுவிடும் எனும் பயமாகவும் இருக்கலாம்! அதையும்தாண்டி, நாம் அதேபோன்ற ஒரு நிகழ்வை மீண்டும் எதிர்கொள்ளும்போது இவ்வுணர்ச்சி அலைகள் மீண்டும் கரை தட்டி நிற்கும்! இன்று அதுபோன்ற ஒரு நாள்! கண்ணம்மா பற்றிய நினைவலைகள் மீண்டும் மீண்டும் மனக்கடலில் எழுந்தது!

எனக்கு கண்ணம்மாவின் அறிமுகம்

கிடைத்தபோது அவருக்கு 84 வயது இருக்கும். என் கண்ணுக்கு கண்ணம்மா ஒரு கொற்றவையின் உருவமாக தென்பட்டார். நெடுந்து உயர்ந்த கருமையான மேனி, கூரிய மூக்கும் அதில் ஜொலிக்கும் வைர மூக்குத்தியும், எப்போதும் முகத்தில் ஒரு புன்னகை, அந்தப் புன்னகை மூக்குத்தி வைரங்களில் பட்டுத்தெறித்து அவரின் முகத்திலிருந்து ஒரு தனி பொலிவு, பின்னி முடிந்த கூந்தல் என சேலையில் உலாவும் பெண்மணி! என்ன சூலாயுதத்திற்கு பதிலாக வாக்கிங் ஸ்டிக்குடன் வலம் வருவார்.

சாதனைகளைப் பற்றி பெருமிதம் கொள்வார்! கிண்டலாக "பாடறியேன் படிப்பறியேன், பள்ளிக்கூடம் நான் அறியேன்..." என்று பாடுவார். அவருக்குள் தன்னையும் படிக்கவைத்திருக்கலாம் என்ற எண்ணங்கள் இருந்தது போலவே எனக்குத் தோன்றியது! அதற்காக அவர் அப்பாவி என்று கணக்குப் போட வேண்டாம். இந்த 86 வயதிலும் அவர் பல விஷயங்களைப் பற்றி அறிய ஆர்வமாக இருப்பார். குறிப்பாக கிசுகிசுக்கள்! அவரிடமிருந்து ஒரு கிசுகிசுவும் தப்ப முடியாது. பிறரிடம் இருந்து கிசு கிசுக்களை உருவும் கலையில் கில்லாடி, குறிப்பாக



அவரை நான் ஒரு Senior நிகழ்வில் முதன்முதலில் சந்தித்தேன். அங்கு வந்திருந்த மேற்கத்திய மனிதர்களுடன் வெகுசகஜமாக பழகினார், பல விஷயங்களைப் பற்றி பலதரப்பட்ட மக்களுடன் பேசினார். ஆனால் அவரிடம் பழகிய பின்புதான் தெரிந்தது அவருக்கு ஆங்கிலம் தெரியாது என்பது. அதுமட்டுமல்ல, அவரின் உடன்பிறந்த ஆண் சகோதரர்கள் மேற்கொண்டு படிக்க வேண்டும் என்பதற்காக இவரின் பள்ளி படிப்பு சிறுவயதிலே நிறுத்தபட்டிருந்தது. எப்போதும் தன் உடன்பிறந்த சகோதரரின்

"நீங்கள் ஊரில் எந்த இடம்" என்ற கேள்வியில் சகலத்தையும் அறிந்திடுவார்!

ஆனால் தொடக்கத்தில் அவரின் சில செயல்கள் சிறுபிள்ளைத்தனமாகத் தெரிந்தன. சிறுவர்களை போலவே அவருக்கும் cake, ice coffee, இனிப்பு மற்றும் pizza சாப்பிடுவது மிகவும் பிடிக்கும். தன் பிறந்தநாளைக் கொண்டாடுவதை விரும்புவார். அவர் யாரிடமும் உதவி கேட்கத் தயங்குவதில்லை. அது அவருடைய பிள்ளைகளுக்கு ஒருவிதமான சங்கடத்தை ஏற்படுத்தும். ஆனால் இங்குள்ள மூத்தவர்களுடன் பழகத் தொடங்கியதில்

புரிந்தது, அவர்களுக்கும் குழந்தைகளைப் போலவே சமூக நுணுக்கங்களின் (social nuances) ஏற்ற இறக்கங்களை மதிப்பிட முடியவில்லை! நாம் அதை புரிந்துகொண்டால், குழந்தைகளைப் போன்றே அவர்களைக் கையாள்வதும் இலகுவாகும், குழந்தைகளுடன் நெருக்கமான உறவை உருவாக்குவதுபோல் அவர்களுடனும் நெருங்கிப் பழகலாம்!

எனக்கு அவரின் பழைய கதைகளை கேட்பதும், அவருக்கு உதவுவதும், அவர் விரும்பிய பொருட்களை வாங்கித்தருவதும் பிடித்திருந்தது. அவருடைய கதைக்குள் ஒவ்வொரு நுணுக்கங்களுக்கும், பல அர்த்தங்கள் இருக்கும். அவர் வாழ்ந்த ஊருக்கு என்னைக் கதைகளின் வழி அழைத்துச் சென்றிருக்கிறார். நிச்சயமாக அவருக்கு கதை சொல்லும் கலை தெரியும்! ஆனால் அவரின் கதையைக் கேட்பதுக்குதான் யாருக்கும் நேரம் இல்லை! இன்னும் சொல்லப்போனால், முதுமையின் பிரச்சனையே, வயது ஏற ஏற நினைவாற்றல் குறைய ஆரம்பிக்கும். பலமுறை சொன்ன கதைகளையே திரும்பத் திரும்பச் சொல்லுவார். ”எனக்கு ஒரு விஷயமும் நினைவில் நிற்குதில்லை” என்று பலதடவை சொல்லிக்கொண்டே இருந்தார், அதற்கு ஒரு பதிலும் என்னிடம் இல்லை! என்னளவில் அவருடய வயதிற்கு, பல விடயங்களை விரிவாக நினைவில் வைத்திருந்தார். இல்லாவிடில் எப்படி இந்தக் கதைகளை எல்லாம் சொல்ல முடியும்? ஆனால் அவர் நினைவில் இருந்தது எல்லாம் பழைய கதைகள் மட்டுமே, நாளாந்த விடயங்கள் மழுங்கி கொண்டிருந்தது!

வயது காரணமாக (91 வயது), அவ்வப்போது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட ஆரம்பித்தார். ஆரம்பத்தில் கவலைப்பட்டேன், அவரை மருத்துவமனைக்குச் சென்று பார்க்க என் மனது இடமளிக்கவில்லை - முடிந்தவரை அதைத் தவிர்த்தேன். ஆனால் அவரோ வீடு திரும்பியதும், தன்னை மருத்துவ மனையில் வந்து சந்தித்தவர்களைப் பட்டியல் போட்டு, அனைவரையும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தன் நாட்களை அர்த்தமுள்ளதாகினார்! அதிலும் ”உங்களுக்கு வேலை இருந்திருக்கும் என்டு எனக்குத் தெரியும். அதனால்தான் என்னை ஆஸ்பத்திரியில் வந்து பாக்க முடியாமல் இருந்திருக்கும்...” என்று தனது எதிர்பார்ப்பை என்னிடம் தெரிவிக்க மறக்கவில்லை. நாள் போகப் போக இந்த மருத்துவமனை அனுமதிப்புகள் சாதாரணமாகிவிட்டன! அடுத்த கட்டமாக அவருக்கு சாப்பாட்டின் மேல் ஈடுபாடு இல்லாமல் போனது, Raisin Bread அவரது ஒரே பிடித்த உணவானது. என்னிடம் Raisin Bread வாங்கித்தருமாறு கேட்பார். உடல் வலி எந்த வலி நிவாரணிகளுக்கும் அடங்குவது போல் தெரியவில்லை.

அன்று ஆம்புலன்ஸ் வந்தபோது நான் அவருடன்தான் இருந்தேன். அவர் பலவீனமாக இருந்தார், ஆனால் அசாதாரணமாக எதுவும் இல்லை. வழக்கம் போல் மருத்துவப் பணியாளர்கள் அவரை ஆம்புலன்சில் அழைத்துச் சென்றனர். நான் வாசல்படியில் காத்திருந்தேன், அவர் விரைவில் திரும்பி வருவார் என்று. அன்று இரவு என்னால் தூங்க முடியவில்லை. இருப்பினும், எல்லாம் சரியாகிவிடும் என்பதில் நான் உறுதியாக இருந்தேன்.

மறுநாள் காலை, பொறுக்கமுடியாமல் விபரம் அறிய அவர் மகளை தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். அப்போது அவர் palliative care unitக்கு மாற்றப்பட்டதாகவும், morphine எனும் வலி நிவாரணி செலுத்தப்படுவதாகவும் அறிந்தேன். அதன் காரணங்களை நான் புரிந்துகொண்டேன், ஆனாலும் என் மனம் நம்பிக்கையான எண்ணங்களில் ஒட்டிக்கொண்டது, இது அவருடைய வலியைக் குறைக்கும் முயற்சி என்று நம்பச் சொன்னது. உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் அவளுடைய பிள்ளைகளும் உறவினர்களும் வந்தாலும், அவரை ஆஸ்பத்திரியில் பார்க்க என்னால்

இன்னும் முடியவில்லை. அவர் மீண்டு வருவார் என்ற நம்பிக்கையில் இருந்தேன்.

மறுநாள், அவர் எங்களுடன் இருக்கும் நேரம் குறைந்துகொண்டு போவதால் அவரை கடைசியாக வந்து பார்த்துவிட்டு போகுமாறு அவரின் மகளிடம் இருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. மாலை 4 மணியளவில் பரபரப்பான போக்குவரத்து நெரிசலுக்கு மத்தியில் நான் மருத்துவமனைக்குச் சென்றேன். கிட்டத்தட்ட 1 மணி நேரம் எடுத்து. முதன்முறையாக போக்குவரத்து நெரிசலில் தணிந்த மனநிலையில் வண்டியை ஓடினேன். நான் அவருடன் இருந்த ஒவ்வொரு நினைவுகளையும் மீட்டெடுத்தேன், இனிமையான தருணங்களை ரசித்தேன். மருத்துவமனையை அடைந்ததும் யதார்த்தத்தை எதிர்கொள்ள துணிவின்றி எரிச்சலடைந்தேன்! என் கோபத்தை parking meter இடம் காண்பித்தேன்.

கடைசியாக அவருடைய மருத்துவமனை அறைக்குள் நுழைந்தபோது, அவர் பலவீனமாக ஆஸ்பத்திரி கட்டிலில் படுத்திருப்பதை என் கண்களால் கண்டேன். இவ்வறான தருணங்களே மனிதனின் மூளைக்கும் மனசுக்கும் இருக்கும் எட்டாத தூரத்தை விவரிக்கும். எவ்வளவுதான் மூளையால் தருக்க ரீதியாக எல்லாருக்கும் ஒருநாள் இறப்பு உண்டு என்று அறிந்திருந்தாலும், எம் ஐம்புலன்களால் அதை உணரும்போதுதான் மரணம் எமக்கு எவ்வளவு அருகில் இருக்கிறது என்று புரிகிறது. குடும்பமும், உற்றார் உறவினரும், நலம் விரும்பிகளும் சூழ்ந்திருந்தார்கள். அவர் என்னை நோக்கி கையை நீட்டினார் நான் அந்த கைளை பற்றிக்கொண்டேன். என்றும் உணராத வகையில் மிகமென்மையான தோல், குழந்தையின் சருமம் போன்றது, இல்லை அதைவிடவும் மென்மை. அவருடனான நினைவுகளின் இறுதி தருணங்கள் இவை என உணர்ந்து, சுருக்கம் நிறைந்த கையை மெதுவாக வருடினேன். அவரால் பேச முடியாவில்லை. அவர் சொன்ன கதைகள் என் மனதில் எதிரொலித்தன. ஒரு தாதி தலையிடும் வரை நான் அவர் கையை வருடியபடியே நின்றேன். தயக்கத்துடன் கையை விலக்கிக் கொண்டேன். வீடு திரும்பினேன், showerன் அடியில் சத்தமாக அழுதேன் கண்ணீர் தண்ணீரோடு வழிந்து போனது. அதோடு அவரின் நினைவுகளும் கரைந்து போகும் என எண்ணினேன்!

மறுநாள், மாலை 4 மணியளவில், அவர் தனது இறுதி மூச்சை எடுத்தார். மீண்டும் தொலைபேசி அழைப்பு, மீண்டும் போக்குவரத்து நெரிசலுக்கு மத்தியில் ஆஸ்பத்திரி நோக்கிய பயணம். ஆனால் இன்று வழமைபோல் போக்குவரத்து நெரிசல் எரிச்சல் மூட்டியது, ஆஸ்பத்திரியை அடைந்ததும் ஆசுவாசப்பட்டேன். நேற்று பார்த்த அறையில் இன்றும் அவரைப் பார்த்தேன், ஆனால் அவர் அங்கு இல்லை. குடும்பமும், உற்றார் உறவினரும், நலம் விரும்பிகளும் சூழ்ந்திருந்தார்கள், ஆனால் அவர் அங்கு இல்லை. அவருடைய தோற்றம் மாறாமல் இருந்தது, ஆனால் அவர் அங்கு இல்லை. அவர் எங்கு போனார்? பதிலற்ற கேள்வியிது!

மீதமுள்ள சடங்குகளும் சம்பிரதாயங்களும் ஊருக்கானது. இறுதிச் சடங்கில், அவரின் கையில் வளையல் போட்டுவிடுமாறு ஒரு நபர் என்னிடம் கேட்டார்! எனக்கு ஒரு விதமான பயம் உருவானது. உருவான நொடியிலே இது என்ன மூட எண்ணம் என்று நினைத்து அவரை இன்னுமொரு முறை இறுதியாக தொட்டேன் கை சில்லென்று குளிர்ந்தது, சில தினங்களுக்கு முன் குழந்தையின் சருமத்திலும் மென்மையான கைகள், விறைத்து பாறாங்கல் போல் கனத்தது. அவரின் ஸ்பரிசத்தின் மென்மை அவரோடு சேர்ந்து மறைந்தது போல் அவரின் நினைவலைகளை என் வாழ்வின் ஆழ்ந்த கடலில் நங்கூரமிட்டது.



# Harry Potter: FORBIDDEN FOREST

ஒரு மாலை நேரம் வழமை போல என்னுடைய Facebook பார்த்துக் கொண்டிருக்கும் போது Harry Potter - Forbidden Forest Experience in Melbourne என்று ஒரு post வந்தது. என்ன வித்தியாசமாக இருக்கிறதே என்று பார்த்த பொழுது தான் ஜூலை மாதம் வரை Mount Marthaவில் உள்ள the Brias - community forestன் woodland நடைபாதையில் (walking trail) இந்த நிகழ்வு நடைபெறுவதை அறிந்து கொண்டேன். அந்த நடைபாதையில், ஒலி, ஒளி, மற்றும் வடிவமைக்கப்பட்ட உருவங்கள் மூலம் forbidden forest (கதையில் வரும் காடு - கதையின் பல முக்கிய நிகழ்வுகள் இங்கு நடைபெறும்) அனுபவத்தை அளிக்கும் வகையில் அமைக்கப் பட்டிருப்பதாகவும் இரவில் மட்டுமே நடைபெறுவதாகவும் தெரிந்தது. அதைப் பார்த்ததும் மிகவும் உற்சாகமாக இருந்தது ஏனென்றல், நான் ஒரு பயங்கரமான Harry Potter fan. ஆனால் என்னுடைய உற்சாகம் எல்லாம் காற்று போன பலூன் மாதிரி ஒன்னுமே இல்லாமல் போய்விட்டது நுழைவுச்சீட்டு விலையை பார்த்ததும். யோசிச்சு பார்க்கும் போது என்னுடைய கணவனும் வாசிப்பும் ஆட்டிக்கும் அண்டாடிக்கும்



சரணியா
சத்தியன்




மாதிரி. என்னுடைய மகளுக்கு இன்னும் Harry Potter தெரியாது. இரவு நேரம் என்றதால் தனிய போகவும் பெரிய ஆர்வம் இருக்கவில்லை. இந்தப் பழம் புளிக்கும் என்று என்னுடைய மனதை நானே சமாதானம் செய்துகொண்டேன். ஆனால் என்னுடைய நண்பியின் மகன் கடந்த 6 மாதமாக Harry Potter ஐ தீவிரமாக வாசித்தது ஞாபகம் வந்தது. சரி என்று என்னுடைய நண்பிக்கு அதை forward செய்து மகனை அழைத்துச் செல்லுமாறு கூறிவிட்டு நான் என்னுடைய வேலையை பார்க்கப் போய்விட்டேன்.

ஆனால் அடுத்தநாள் காலையிலேயே என்னுடைய நண்பியின் மகனிடமிருந்து எனக்கு ஒரு voice message. “சரணியா மாமி Harry Potterக்கு நீங்களும் வாங்கோ. அம்மா, அப்பாக்கு கதை தெரியாது. நீங்கள் வந்தா தான் funஆ இருக்கும். Please வாங்கோ” என்று. என்னுடைய அதிஷ்டமோ என்னவோ, எனது கணவனும் அருகிலிருந்து இதைக் கேட்டுவிட்டு “என்னத்தைப் பற்றிக் கதைக்கிறான் என்று கேட்க, நானும் விடயத்தைச் சொன்னேன். அவரும் “நாங்களும் மகளையும் கூட்டிக்கொண்டு போவம். அவன் இவ்வளவு கேக்கிறான். எங்களுக்கு ஒன்னும் தெரியாட்டிலும் மகள் அவங்களோட விளையாடலாம். அங்க பெரிசா ஒன்னும் இருக்காது. சும்மா ஒரு outing மாதிரி போகலாம்” என்று சொன்னார். உண்மைய சொல்லனும் என்றால் எனக்கும் அங்க எதுவும் பெரிசா இருக்காது என்ற எண்ணம் தான். வழமை போல 4 உருவச்சிலையை காட்டைச் சுற்றி வைத்திருப்பார்கள். ஒரு museum மாதிரி அந்த நடைபாதையைச் சுற்றி நடந்து பார்வையிடுவதாக இருக்கும் என்ற என்னுடைய எண்ணம் தான் முதலில் என்னுடைய ஆர்வத்தைத் தூண்டவில்லை. ஆனாலும் போகலாம் என்று எனது கணவன் சொன்னதும் எனக்குள் இருந்த அந்த Harry Potter fanக்கு ஒரே குத்தாட்டம் தான். பிறகு என்ன, எல்லோரும் கலந்து பேசி ஒரு வெள்ளிக்கிழமை இரவு 9 மணிக்கு என்னுடைய Harry Potter பயணம் மனசு முழுக்க ஒரு குறுகுறுப்போட ஆரம்பித்தது.

Mount Marthaவிலிருந்த அந்த காட்டிற்குச் சென்று வாகனத்தை நிறுத்திவிட்டு, ஊழியர்களின் வழிக்காட்டலுடன் நிகழ்வு நடைபெறும் இடத்தை நோக்கி நடந்தோம். சுற்றிலும் இருட்டு தூரத்தில் வெளிச்சம் தெரிந்தது. அது தான் நிகழ்வு நடைபெறும்



இடமென்று நினைத்துக்கொண்டேன். என்னைச் சுற்றிலும் பல இளைஞர்கள், சிறுவர்கள் Harry Potter கதாபாத்திரங்கள் போல ஆடை, தொப்பி, scarf எல்லாம் அணிந்து, fancy dress paradeக்கு வருவதைப்போல் வந்திருந்தனர். அதைப் பார்த்ததும் விநோதமாகவும், சிரிப்பாகவும், கொஞ்சம் ஆசையாகவும் இருந்தது. என்னுடைய பள்ளிக் காலத்தில் நாங்கள் ஒரு 4 நண்பர்கள் Harry Potterன் தீவிர ரசிகைகள். அவர்களுடன் வந்திருந்தால் நானும் இப்படித்தான் வந்திருப்பேனோ என்று தோன்றியது.

அங்கு நுழைவாயிலில் முதலில் இருந்தது உணவகங்கள்/ காத்திருப்போர் இடம் தான். ஆனால் நுழைந்ததுமே, என் மனதில் தோன்றியது என்னவோ “oh my god! எப்படிடா???” என்ற அதிர்ச்சியும் ஆச்சரியமும் தான். கதையில் வரும் கடைத்தொகுதிகளை கண் முன்னே கொண்டுவந்திருந்தார்கள்.

மரப் பலகைகளாலான கடைகள், marshmallows சுடும் இடம், அந்த lighting, காதில் கேட்ட harry potter theme music, கதையில் வந்த உணவு வகைகள் எல்லமே நான் நினைத்தது தவறு, இது ஒரு மாய உலகம் தான் என்று கட்டியம் கூறியது. வாயிலில் பெரிய பெயர் பலகை எல்லாம் வைக்காமல், projector மூலம் “Harry Potter Forbidden Forest Experience” என்று தரையில் ப்ரொஜெக்ட் செய்திருந்தார்கள். சுற்றிலும் சிவப்பு, செம்மஞ்சள் நிற ஒளிக்கலவைகள். அதிலும் ஒளி விளக்குகள் கூட காடுகளைப் போன்று தெரிவு செய்திருந்தமை எனது ஆர்வத்தைத் தூண்டியது. அங்கிருந்த உணவகங்களிலும் கதையில் குறிப்பிடப்பட்ட உணவுகளும் பாணங்களும் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. அதைக் கடந்து சென்று ஒரு நீண்ட வரிசையில் உள் நுழையக் காத்திருந்தோம். காத்திருந்த நேரத்தில் சிறுவர்களுடன் இணைந்து, கதையில் வரும் பிரசித்தமான butterbeer drink வாங்கிக் குடித்தது தனிக்கதை. அப்பொழுதே எனக்குள் இருந்த அந்தச் சிறுமி வெளிவரத் தொடங்கிவிட்டாள்.

உள்நுழைந்து, ஒவ்வொரு அடியும் எடுத்து வைக்க வைக்க ஒரு museum மாதிரித் தான் இருக்கும் என்ற என் நினைப்பை யாரோ செருப்பால் அடித்த மாதிரி இருந்தது. இதை இவ்வளவு

interactive ஆக செய்யமுடியுமா? இவ்வளவு ஆச்சரியப்படுத்த முடியுமா? யாருடா இதை வடிவமைச்சது? எப்படிடா செய்திங்கள்? என்று பல கேள்விகள். Because it was simply magical. Lightingஆ அல்லது sound effectsஆ அல்லது படத்திலிருந்து எடுத்துக் கொண்ட வசனங்களா? எல்லாம் இணைந்து அந்த மாய உலகத்திற்குள்ளேயே கட்டி வைத்துவிட்டது.

அந்த காட்டிற்குள் நுழைகையிலேயே, எப்படி இவ்வளவு பொருத்தமாக ஒரு காட்டினை தெரிவு செய்தார்கள் என்ற ஆச்சரியம் தான். கதையில் கூறப்பட்டதைப் போலவே அந்தக் காடே அழகாக இருந்த அதே நேரம், மனதைச் சில்லிடச்செய்யும் விதமான பயத்தையும் விதைக்கக்கூடியதாக இருந்தது.

நடைபாதையில் முதலில் இருந்த நீல நிற மான் மனதைக் கவர்ந்தது என்றால், நடைபாதை முழுவதும் இருந்த ஒவ்வொரு மரங்களும் ஒளியூட்டப்பட்டு, நிறங்கள் மாறியவண்ணம் இருந்ததும், படத்தின் இசை ஒலித்துக் கொண்டிருந்ததும், புகையூட்டப்பட்டிருந்ததும் மனதில் கிலியை ஏற்படுத்தினாலும், அது செய்த மாயம் என்னவென்பது அங்கு எடுத்த புகைப்படத்தை மீளப் பார்த்தபோது புரிந்தது. மரங்களினூடு பொருத்தப்பட்ட செம்மஞ்சள் ஒளி தீப்பற்றிக் கொண்ட காட்டினுள் இருப்பது போல் புகைப்படத்தில் தெரிந்தது.

மரங்களின் கிளைகளில் ஆங்காங்கே வைக்கப்பட்டிருந்த ஆந்தைகளும், இருட்டினுள் ஒளிர்ந்த கண்களும், சமாதிகளும், death eaterஸ் (கதாபாத்திரம்) உண்மையிலேயே forbidden forestஇனுள் Harry Potter உடன் நடந்து செல்வது போலொரு மாயத்தோற்றத்தினை ஏற்படுத்தியது.

Buckbeak (கதாபாத்திரம் - பறவை) நான் குனிந்த போது அதுவும் குனிந்ததாகட்டும், arogog (கதாபாத்திரம் - சிலந்தி) குகைக்குளிருந்து வெளிவந்ததாகட்டும், தூங்கிக்கொண்டிருந்த Grawp (கதாபாத்திரம் - ராட்சத மனிதன்) முன்னிருந்த மணியை அடித்ததும் கண் திறந்து பார்த்ததாகட்டும், devil's snare என்ற சூரியஒளியினைப் பிடிக்காத மரம் வெளிச்சம் வந்ததும் சுருங்கியதாகட்டும், நான் ஒரு spell சொல்லி கையை நீட்டியதும் வண்ணம் மாறிய காளான்களாகட்டும் எல்லாமே just magical.




இதையெல்லாம் விட 2 காட்போட் உருவங்கள், lights, sound effects, கண்ணுக்குத் தெரியாத திரை மட்டும் வைத்து படத்தில் வந்த இரண்டு காட்சிகளை எப்படி தத்ரூபமாக மீளக் கண் முன் உருவாக்கினார்கள் என்று இன்றளவும் புரியவில்லை. மெய்சிலிர்த்த தருணம். ஆனால் அதன் தாக்கம் மட்டும் இன்னும் மனதைவிட்டு விலகவுமில்லை. அதிலும் expecto patronum (ஒரு மந்திரச் சொல்- சொன்னதும் ஒரு வெள்ளை ஒளியுடன் ஒரு மிருகம் தோன்றும்) எனக்கூறி கையில் தரப்பட்ட wand ஐ சுழற்றியதும் திரையில் முயல்

தோன்றியதும் என்னுள் இருந்த ரசிகைச் சிறுமி துள்ளிக் குதித்த தருணம் தான். நானும் Harry Potter போன்று மந்திரவாதியான எண்ணம்.

நிகழ்வின் சிறப்பு என்னவென்றால் கதையை அறிந்த நான் இதனை பார்த்து எவ்வளவு வியப்படைந்தேனோ, அதே வியப்பையும், மாய உணர்வையும் கதையினைத் தெரியாத எனது கணவன், நண்பர்கள், ஏன் எனது 4 வயது மகள் உட்பட அனைவருக்கும் கடத்தியிருக்கிறார்கள். அதுவே நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்களின் சாதனை.

2 1/2 மணித்தியாலம் அந்தக் காட்டினை சுற்றிய தருணம் முழுவதும் மீண்டும் சிறுமியாகிய உணர்வு. அதிலும் நான் இதனை வாசித்து சுமார் 23 வருடங்கள் இருக்கும். அதனால் கதையும், பிரதான கதாப்பாத்திரங்களும் மனதிலிருந்தாலும் சிறிய விடயங்கள் பல மறந்துவிட்ட போதும் எனது நண்பியின் மகன் கேள்விகள் கேட்கும் போதும், பேசும்போதும், மறந்ததை வெளிக்காட்டாமல் எனது கெத்தை விடாமல் போராடிய தருணங்கள்.

உற்சாகம், சந்தோசம், சிறுபிள்ளைததனம், ஆச்சரியம் என்று அங்கிருந்த ஒவ்வொரு மணித் துளியும் பலவித உணர்வுகுவியல் தான்.

அனைத்தும் பார்த்து முடித்து 12 மணி போல் எனது மகிழுந்தில் ஏறியதும் ஒரு திருப்தியான அமைதி. என்னுடைய பழைய ஞாபகங்களின் வரிசை. 6ம் ஆண்டு வரை நான் புத்தகங்கள் வாசிப்பதில் ஆர்வம் காட்டியதே இல்லை. Harry Potter தான் நினைவு தெரிந்து தன்னிச்சையாக நான் வாசித்த முதல் கதை. அது வரை புத்தகத்தின் வாசம் அறியாத சிறுமி தான் நான். Harry potter ஐ எனக்கு அறிமுகப்படுத்தியது எனது நண்பி தான். தர்ஷினி... ஏன் வாசிப்பை, நூலகத்தை அறிமுகப்படுத்தியதே அவள் தான். அந்த நேரத்தில் Harry Potter புத்தகங்கள் எல்லாம் யானை விலை குதிரை விலை தான். அதனால் எந்த ஒரு புத்தகமும் நான் வாங்கவில்லை. தர்ஷினி தான் வாங்குவாள். அவள் வாசித்ததும், நானும் எனது 2 நண்பிகளும் சுழற்சிமுறையில் வாசிப்போம். நான் வாசிக்க ஆரம்பித்த போது 4 பாகங்கள் தான் வெளியாகி இருந்தது. ஒவ்வொரு பாகமும் வாசித்ததும் பள்ளியில் நாங்கள் நால்வரும் எமது அம்மாக்கள் சீரியல் பார்த்துவிட்டு பேசுவது போலவே ஐயோ ஏன் இப்படி ஆனது? வொல்டமோட் திரும்ப வந்துட்டானே இனி என்ன நடக்கும்? என்றெல்லாம் பேசி மாய்ந்தது ஞாபகம் வந்தது.

அப்பா ஒரு முறை எனது அண்ணனிடம் சொன்னதும் நினைவுக்கு வந்தது. சரணியா புத்தகம் எடுத்து Harry Potter கதை வாசிப்பாள், ஆனால் நான் அவள் வாசிக்கும் போது அவளிண்ட முகத்தில் கதையை வாசிப்பேன் என்று. அவ்வளவு ஆழமாக புத்தகங்களினை வாசித்த காலமது. இப்படி வீட்டிற்கு வரும் வரை "ஞாபகம் வருதே... ஞாபகம் வருதே... "moment தான். ஏன் இதனை எழுத ஆரம்பித்த தருணம் முதல் இப்பொழுது வரை எனது முகத்திலிருந்த புன்னகை மறையவேயில்லை. அதனைக் கண்ணாடியில் பார்க்கும் பொழுது புரிகிறது வாசிப்பு சாதரணமானது அல்ல. அது ஒரு உணர்வு. வாழ்க்கையின் ஓட்டத்தில் நான் இழந்த ஒன்று வாசிப்பு. இந்த நிமிடம் எனக்குள் ஒரு சங்கல்பம் மீண்டும் வாசிக்க வேண்டும் என்று, எனது அப்பா எனது முகத்தில் கதையினை அறியும் வகையில் ஆழமாக, எனை மறந்து மீண்டும் வாசிக்க வேண்டும்.



# விரல்களின் வேற்றுமை (நாடகம்)

**கதைக்கரு** : தாமரை மதியழகன்
**உரைநடை** : நிரோஷன் பாக்கியநாதன்
சரணியா சத்தியன்
**பாடல் வரிகள்** : நிரஞ்சன் சத்யசுதன்
**தயாரிப்பு** : கேசி தமிழ் மன்றம்

**காட்சி 1 :** திரை விலகுகிறது.

இருளான மேடையில் வெவ்வேறு 3 குடும்பங்கள் மட்டும் முக்கோணத்தின் மூன்று புள்ளிகள் போல தோன்றுகின்றனர். ஒளிவட்டம் மாறி மாறி அவர்களைக் காட்டுகிறது. மேடை மீண்டும் இருளடைகின்றது. காட்சி மாறுகின்றது.

**காட்சி 2 :** மேடையில் ஒரிடத்தில் மட்டும் ஒளிவட்டம். வினி எனும் சிறுமி பீன்பாகில் (beanbag) சோகமாக இருக்கின்றாள். மேடை ஒளியூட்டப்படுகின்றது. பாடல் இசைக்கின்றது. மைமைமர்ஸ் (mimers) மேடையில் தோன்றி வினியின் தனிமையினையும், வலிகளையும் கூறுகிறார்கள்.

வனமோ... கனமோ...
மனமே... வருந்திடுதே...
பலதாய்... விதமாய்...
நிலையோ... குலைகிறதே...

வினி மனவழுத்ததுடன் கவலையுடன் மேடையின் மூலையில் நிற்கின்றாள். மேடை இருளடைகின்றது.

**காட்சி 3 :** திடீரென இருளான மேடையில் பறை இசை மட்டும் கேட்கின்றது.



மேடையின் திரையில் ஒரு நிழலுருவம் தெரிகின்றது. அந்நிழல் உருவம் பறை இசைக்கின்றது. வினியின் முகத்தினில் ஒரு அலைப்புறுதலும், தேடலும். நிழலுருவம் மறைகின்றது. மேடை இருளடைகின்றது.

**காட்சி 4 :** மேடை ஒளியூட்டப்படுகின்றது. மெல்லிய சோகமான வயலின் இசை இசைக்கப்படுகின்றது. மேடையில் மைமர்ஸ் தோன்றுகின்றனர். ஒரு சிறுமியின் சிறு தவறுகளும் கண்டிக்கப்படும் பொழுது, அந்தச் சிறுமியின் பயத்தையும், மனவுணர்வு களையும் பிரதிபலிக்கின்றனர்.

**காட்சி 5 :** தமிழ் குடும்பம் (ராஜ் குடும்பம்)

கதாபாத்திரங்கள் : ராஜமாணிக்கம்(அப்பா), தயா(அம்மா), அதிரா (மகள்), குமரன் (மகன்) மற்றும் வினி (autistic மகள்)

வினி அவளது அறையில் (மேடையின் மூலையில்) சோகமாக இருக்கின்றாள். குமரனும், அதிராவும் படித்துக் கொண்டிருக்கின்றார்கள். ராஜமாணிக்கம் வேலையிலிருந்து, கோபமாக வீட்டிற்கு வருக்கின்றார்.

ராஜமாணிக்கம்: (சினமுற்றவாறு) உதுகளும் உதுகளின்ர பழக்கவழக்கமும். உதுகள பார்த்தால் எங்கட பிள்ளைகளும் பாழாப்போடும். கெட்ட சூழலில வாழுறம். கெதியில உந்த வீட்ட வித்துப்போட்டு எங்கட அயலட்ட இருக்கிற எங்கட ஊருக்கு போகவேனும். (கோட்டை கழட்டியவாறு) குமரன்........ (கோபமாக) குமரன்...

குமரன்: (திடுக்கிட்டு) ஓம் ஓமப்பா...

ராஜமாணிக்கம்: ஒருக்கால் கூப்பிட்டால் காது கேட்காதோ? என்ர ரூம் டேபிள்ல இருக்க chargerஅ எடுத்துக் கொண்டு வா... மேசையில இருந்து கொண்டு கனவு காண்கிறிறோ?

குமரன்: (தயங்கியவாறு) இல்லையப்பா படிச்சுக்கொண்டிருந்தன்..

ராஜமாணிக்கம்: படிச்சுக்கொண்டிருந்தால் கூப்பிட்டது கேட்காதோ?

ராஜமாணிக்கத்தின் சத்தம் கேட்டு அம்மா ஓடி வருகின்றார்.

அம்மா: இல்லையப்பா மகன் படிச்சுக்கொண்டுதான் இருந்தவர். படிப்பில கவனமாக இருந்ததால அவருக்கு கேட்கேல..

ராஜமாணிக்கம்: எனக்கு எல்லாம் தெரியும். நீர் எனக்கு சொல்லி தராதையும்... தயா. இது வீடு. பிள்ளைகளின்ர நன்மைக்குதான் தகப்பன் எல்லாம் செய்யுறதும்

சொல்லுறதும்.

அம்மா: அது தெரியும். ஆனா அவங்களையும் கொஞ்சம் புரிஞ்சுகொள்ளுங்கோ. மகன் நீங்கள் போய் செய்த கணக்கை செய்து முடியுங்கோ.

ராஜமாணிக்கம்: நீர் பிள்ளையளைத் திருத்த விடமாட்டீர்.

அம்மா: பூந்தோட்டக்காரன் பூமரங்களை வடிவா வளரவிடத்தான் செய்வான். அதுகளை மொட்டையா வெட்டமாட்டான்.

ராஜமாணிக்கம்: எத்தன தரம் சொல்ரது. நீர் எனக்கு சொல்லித்தர தேவையில்ல.... அதிரா...

அதிரா: ஓம் அப்பா..

ராஜமாணிக்கம்: இஞ்ச வாரும். நான் சொன்னதால கவனமாக படிச்சதால எல்லா பாடத்துலயும் நல்ல மாக்ஸ் எடுத்துட்டீர்.. மெடிசின் படிக்க அப்லிகேசன் போடுட்டீர் தானே.

அதிரா: (தயக்கமாக) அப்பா எனக்கு டொக்டரா வர விருப்பமில்லை. ரீச்சரா வரதான் விருப்பம்...

ராஜமாணிக்கம்: என்ன ரீச்சரோ? நான் உமக்கு முந்திச் சொன்னது மறந்து



போச்சுதோ?

அம்மா: அதிரா விரும்பியதை படிக்கட்டன்..

ராஜமாணிக்கம்: விரும்பிறது விரும்பாதது என்ன? அது கூட இது குறைய என்டு நான் சொல்லமாட்டன்.படிக்கிற பிள்ளையளுக்கு எல்லாப்பாடமும் ஒன்றுதான்.

அம்மா: அப்ப அதிரா விரும்பியதை படிக்க விடலாம் தானே.

ராஜமாணிக்கம்: எனக்கு தெரியும் என்ர பிள்ளையள் என்ன என்ன படிக்க வேனும்! எப்படி எப்படி படிக்க வேணுமெண்டு!

அம்மா: எனக்கும் பிள்ளைகள் தானே

ராஜமாணிக்கம்: (அலட்சியமாக) ஓம்... ஓம்... அதிரா

அதிரா: ம், அப்பா.

ராஜமாணிக்கம்: நான் சொன்னத கேட்டு உம்மட பெரியக்கா லோயர இருக்கிறா. குமரன் இஞ்சினியரிங் பன்ன மற்ஸ் செய்யிறான்... ஆனபடியால் நீ டொக்டரா



தான் வரோனும்...

அதிரா: (தயங்கியபடி) ஆனா அப்பா.. எனக்கு டொக்டரா வர விருப்பமேயில்லயே...

ராஜமாணிக்கம்: உம்மட விருப்பத்த நான் கேக்கல. உமக்கு நல்லத தான் நான் சொல்லுவன். சொல்றபடி கேளும்.

அதிரா: அது எனக்கு சந்தோசம் தராதே அப்பா...

அம்மா: அவள் நல்லா படிச்சு உங்கள பெருமைப்படுத்திட்டாள். இப்ப அவளிண்ட விருப்பத்துக்கு விடுங்கோவன்.

ராஜமாணிக்கம்: (கோபமாக) இந்த விருப்பம் எல்லாம் மெடிசின் படிக்கத் தொடங்கினா போயிடும். இந்த வீட்டுல நான் சொல்ரது தான் முடிவு. அதிரா போய் அப்லிகேசன எடுத்துடு வாரும். இப்பவே அப்ளை பண்ணுவோம்.

அதிரா சோகமாக உள்ளே செல்லுதல்

சத்தம் கேட்டு காதை மூடிய வண்ணம் Autistic மகள் வினி வெளியே வந்து, வெளியே ஓட முயல்தல். அம்மா போய் சமாதனப்படுத்தல்.

ராஜமாணிக்கம்: இன்னும் தூங்கலையோ? தயா மகள தூங்க வைக்காமல் என்ன செய்யிறீங்கள்(கோபமாக..) எதுக்கெடுத்தாலும் காத மூடிக்கொண்டு. கைய கீழ இறக்கு... தயா கூட்டிப்போய் தூங்க வையுங்கோ.

சின்ன மகள் தொடர்ந்து வெளியேர முயல்தல்

அம்மா: குளிரில வெளியில போன மகளுக்கு கூடாதடா தங்கம்.. அப்பா வந்தா ஏசுவார். வாங்கோ போய் தூங்குவம்..

மகள் மீண்டும் வெளியேர முயல்தல்

அம்மா: தங்கம் உங்களுக்கு ஏலாது என்டுதானே வெளியில போறலே. வெளியில போனால் தங்கத்துக்கு வருத்தம் கூடிடுமெண்டு தான் அப்பா விரும்புறாரில்லை... மகள் சொன்னா கேக்கோனும். சத்தம் போடக்கூடாது. வாங்கோ டீவி பாப்போம்.

ராஜமாணிக்கம்: தயா உத நிப்பாட்டும். கண்டரியாத டீவி. உத போட்டு அவள

கெடுக்காதிம். அவள கொண்டுபோய் படுத்தும். (அறைக்கு செல்லுதல்)

அப்பாவின் சத்ததில் வினி பயந்து காதை மூட, அம்மா Btpa நிப்பாட்டி, மகளை இழுத்துச் செல்கிறார்.

**காட்சி 6 :** வினியின் அறையில்

வினியை தூங்க வைத்த அம்மா, கவலையாக

அம்மா: எனக்கு மட்டும் ஏன் தான் இப்படி ஒரு பிள்ளை வந்ததோ...

அம்மா சென்றதும், தூங்கும் வினியின் மீது மட்டும் ஒளியிடப்படுகின்றது. அப்பொழுது, வினியின் ஆழ்மனக்குரல், சோகத்திலும், விரக்தியிலும்,

வினியிம் மனக் குரல்: நான் நினைக்கிறது ஏன் இங்க யாருக்கும் புரியல...எப்படி நான் இதை அம்மாக்குச் சொல்லுவேன்.

மேடை இருளடைகின்றது.

**காட்சி 7 :** மேடை ஒளியூட்டப்படுகின்றது மகிழ்ச்சியான இசை ஒலிக்கின்றது. ஒஸ்ரேலிய குடும்பத்தின் வலிகளைத் தாண்டிய சந்தோசத்தையும் பாசத்தையும் வலியுறுத்தும் வண்ணம் மைமர்ஸ் மேடையில் நடிக்கின்றனர். மேடை இருளடைகின்றது.

**காட்சி 8 :** ஒஸ்ரேலிய குடும்பம்

கதாபாத்திரங்கள் : விக்டோரியா(அம்மா), ஜோர்ஜ் (அப்பா), ஜேம்ஸ் (மகன்), ஷாலட் (autistic மகள்)

மேடை ஒளியூட்டப்படுகின்றது. விக்டோரியா மேடையில் தோன்றி மகளை அழைக்கின்றாள்.

விக்டோரியா: மகள்.

ஷாலொட் வருகிறாள்.

விக்டோரியா: புது யூனிபோம். இன்டைக்கு இதைப்போடுவம்... இத தொட்டுப் பாருங்கோ. உங்களுக்கு நிச்சயம் பிடிக்கும் மகள்.

ஷாலொட் முதலில் மறுத்து விலகி, பின் தொட்டுப்பார்த்து, புதுசு... புதுசு... என்று சந்தோசப்படுதல்.

விக்டோரியா: வாங்கோ... வாங்கோ போடுவம்...

ஷாலொட் சிரித்த படி உள்ளே செல்லுதல்...

விக்டோரியா: கிளெவர் கேர்ள்! கெட்டிக்காரி. வாங்கோ, பள்ளிகூடத்துல தந்த homeworkஅ செய்வோம். ஜோர்ஜ் நீங்கள் ஒருக்கா lunch boxஅ பக் பண்ணுங்கோ... நான் இத பாக்கிறன்.

ஜோர்ஜ: சரி... விக்டோரியா இங்க வாங்கோ... இந்த headphonesஅ ஷாலட்டுக்கு போட்டுவிடுங்கோ, நான் smoothie அடிக்க போரேன். சத்தம் கேட்டு அவள் குழம்ப வேண்டாம்.

விக்டோரியா, ஷாலொட்டுக்கு headphonesஐ போய் போட்டுவிடுதல்...

மகனும் அப்பாவிற்கு உதவி செய்து, தங்கையின் உணவுப் பெட்டியை அவளிடம் கொடுத்து பையில் வைக்கச் செய்த பின்னர் தங்கையை கையில் பிடித்தல்.

மகன்: சரி சரி நாளைக்கு என்ன விஷேசம் என்று நினைவிருக்கிறது தானே. உங்கட கல்யாண நாள். பக்கத்து வீட்டுக்காரர் எல்லோரையும் நாங்கள் இன்வைட் பன்னி இருக்கோம். எல்லா பிள்ளைகளையும் வர சொன்னனான். ராஜ் அங்கிள் வினிய கூட்டிக்கொண்டு வாரல்ல. தயா ஆண்டிட்ட வினிய கட்டாயம் கூட்டிட்டு வர சொன்னனான். நீங்களும் சொல்லி விடுங்கோ..

ஜோர்ச்: சரி. நான் ராஜ்ட பேசுரேன்.

மகன்: சரி அம்மா... பஸ் வந்துட்டுது... நான் தங்கச்சிய classல விட்டுட்டு



போறேன். ஷாலட் பாய் சொல்லுங்கோ...

ஷாலொட்: park… park…

விக்டோரியா: ஓம்… தங்கம்... அம்மா மறக்கேல தங்கம். நீங்கள் பள்ளிக்கூடத்தால வந்ததும் பூங்காவிற்கு போறம்.

பிள்ளைகள் பாடசாலை செல்ல, மேடை இருளடைகின்றது

**காட்சி 9 :** ஆபிரிக்க குடும்பம்

கதாப்பாத்திரங்கள் : ஸூரி (அம்மா), ஓமாரி (அப்பா), நியா(மகள்)

ஓமாரி சோகமாக கதிரையிலிருந்து பழைய நிகழ்வுகளை அசை போடுதல்.

மேடை ஒளியூட்டப்படுகின்றது. பாடல் இசைக்கின்றது.

நினைவு மலர்ந்தது... கனவு கலைந்தது...

நடுங்குது நடுங்குதடா...

அதிரடி மிதிவெடி அவலம்... அவலம்...

நினைவாய் மலருதுவே...

வறுமையின் குடைச்சலில் கதறிய வேளைகள்

நடுங்குது நடுங்குதடா...

நடுங்குது நடுங்குதடா...

மைமர்ஸ் தோன்றி ஆபிரிக்காவில் மக்கள் பசியிலும், போர் சூழலிலும் கடந்து வந்த கஷ்டங்களை வலியுறுத்துகிறார்கள்.

மேடை இருளடைகின்றது.

**காட்சி 10 :** ஓமாரி சோகமாக கதிரையில் அமர்ந்திருத்தல். மேடை ஒளியூட்டப்படுகின்றது. சூரி மேடையில் தோன்றுகிறாள்.

சூரி: ஓமாரி... ஓமாரி... நடந்தத நினைச்சு எதுவும் நடக்கப் போறதில்லை. இனி இங்கதான் எங்கட வாழ்க்கை. இனி நடக்கப்போறத பாப்பம்.

ஓமாரி: ம்... இதுவும் கடந்து போகும்.

சூரி: நீங்களும் பழச மறந்துட்டு வேலைய பாருங்கோ. நான் நியாவ பக்கத்தில இருக்கிற பார்க்குக்கு சரி கூட்டிக்கொண்டு போய்ட்டு வாரன். இங்காவது பிள்ளை சுதந்திரமாக விளையாடட்டும்.

ஓமாரி: ம்...

சூரி நியாவை அழைத்துக்கொண்டு செல்லுதல்.

மேடை இருளடைகின்றது.

**காட்சி 11 :** பூங்காவில்

மேடை ஒளியூட்டப்படுகின்றது. இசை ஒலிக்கின்றது. மைமர்ஸ் (சிலர்) பூங்காவில் விளையாடிக்கொண்டிருக்கின்றனர். அப்போது 2 மைமர்ஸ் பூங்காவினுள்

நுழைகையில் விளையாடிக்கொண்டிருந்த சில மைமர்ஸ் உடனே முகம் திருப்புகிறார்கள். அப்படியே மைமர்ஸ் freeze ஆகின்றார்கள்.

ஜேம்ஸ், ஷாலட், விக்டோரியாவுடன் பூங்காவிற்கு வந்து, விளையாடுதல். ஷாலட், ஜேம்ஸை மண் விளையாட அழைத்துச் செல்லுதல். அப்பொழுது சூரி நியாவை அழைத்துக்கொண்டு வருதல். நியா உடனே ஜேம்ஸ் மற்றும் ஷாலொட் உடன் மண் விளையாட அமரும் போது ஜேம்ஸ் உடனே எழுந்து...

ஜேம்ஸ்: அம்மா, அவவ பாருங்கோ...

ஜேம்ஸ் கூறியதைக் கேட்ட நியா தன்னைத் தவிர்ப்பதாக எண்ணிப் பயந்து எழுந்து அம்மாவைக் கட்டிப்பிடித்தல். விக்டோரியா மகனின் கையைப் பற்றி சங்கடமாகவும் கோபமாகவும் பார்த்தல். ஆனால் ஜேம்ஸ் அம்மாவைப் பார்த்து,

ஜேம்ஸ்: She looks very beautiful….

இதைக் கேட்ட நியா சந்தோசமாக திரும்பி ஜேம்ஸ்க்கு கை காட்டுதல். அம்மாக்கள் நிம்மதி பெருமூச்சு விட்டு நிம்மதியாகி, அவர்கள் பேச ஆரம்பித்தல். குழந்தைகள் விளையாடுதல்.

ஜேம்ஸ்: அம்மா, இவர்களையும் invite பண்ணுவோமா?

விக்டோரியா: ஓம் செல்லம். (சூரியைப் பார்த்து) நாளைக்கு எங்கட வீட்டுல எங்களோட anniversary party இருக்கு. Freeஆ இருந்தா வாங்கோ.

சூரி: thank you. கண்டிப்பா வாரோம்.

ஏனைய மைமர்ஸ் முகம் திருப்பிய மைமர்ஸின் முகத்தினை பற்றித் திருப்பி பூங்காவினுள் நுழைந்த மைமர்ஸுடன் விளையாடச் செய்தல். எல்லோரும் ஒன்றாக விளையாடுதல்.

மேடை இருளடைகின்றது.

**காட்சி 12 :** திருமண நாள் கொண்டாட்டம்

ஜோர்ச் விக்டோரியா இருவரதும் திருமண நாள் கொண்டாட்டம். குடும்பத்தினர் தயாராதல்.

மகன்: அப்பா அம்மா 6 மணியாகப் போகுது. வாங்கோ ஆட்கள் எல்லாரும் வந்திட்டினம்.

ஷாலட்: come… come…

விக்டோரியா: ஐயோ பிள்ளைகள்... எனக்கு வெக்கமாயிருக்கு.

மகன்: உங்கட கல்யாண வீடண்டைக்கு நீங்கள் எவ்வளவு வெக்கப்பட்டிருப்பியள் எண்டு எனக்கு பார்க்க கிடைக்கேல. இப்பதானே பார்க்கிறன்.

ஜோர்ச்: ஒவ்வொரு வருசமும் போல சிம்பில செய்திருக்கலாம். நீங்கள் விடமாட்டன் என்டிட்டியள்.

மகன்: அப்பா பேசாமல் இருங்கோ. அங்க ஆட்கள் வந்திட்டினம்.

எல்லோரும் வெளியே வருதல்.

ஆபிரிக்க குடும்பம் உள்வருதல்.

ஜேம்ஸ்: welcome uncle and aunty. Hi…Niya….

எல்லோரும் உள்வருதல். ஷாலட் நியாவை உள்ளே அழைத்துக் கொண்டு செல்லுதல். பெரியவர்கள் உள்ளே சென்று வாழ்த்துதல்.

ராஜ் குடும்பம் உள்வருதல்.

ஜேம்ஸ்: வங்கோ அங்கிள். அப்பா உள்ளே இருக்கார். அங்கிள் வினி எங்கே...

ராஜ்: பின்னால அம்மாவுடன் வருகிறாள்.

ராஜமாணிக்கம்: கங்குராயுலேசன்ஸ், மெனி கப்பி றிட்டேன்ஸ் ஒப் த டே..

*ஜோர்ச்: தங்கியூ... தங்கியூ...*

*தயாவுடன் வினி கையை பிடித்த வண்ணம் பயத்துடனும், சத்தத்தின் எரிச்சலுடனும் வந்து மூலையிலிருந்த இருக்கையில் அமருதல்.*

*தயா: வாழ்த்துகள்...*

*விக்டோரியா: தங்கியூ... தயா*

*ஜேம்ஸ்: எனது தாய் தந்தையரின் திருமண தினத்திற்கு எமது அழைப்பை ஏற்று வருகை தந்த அனைவருக்கும் எனது நன்றிகள். அன்று போல் இன்று வரை காதலித்துக்கொண்டு தான் இருக்கிறார்கள்.*

*ராஜமாணிக்கம்: கெட்ட சனங்கள்.*

*தயா: அப்பா சும்மா இருங்கோ.*

*ஷாலொட்:* luv u amma….

*ஜேம்ஸ்:* luv u appa….

*ஷாலொட்: டான்ஸ்... டான்ஸ்... டான்ஸ்...*

*ராஜமாணிக்கம்: (எரிச்சலுடன்) கண்டறியாத ஆட்டமும் பாட்டமும்.*

*தயா: அப்பா சும்மா இருங்கோ.*

*சிறுவர்கள் ஆடுகிறார்கள்.*

*அதிரா பாட்டின் சத்தத்தை அதிகரித்தவுடன் மூலையிலிருந்த வினி குழம்புதல், கத்துகிறாள். எழுந்து ஓடுகிறாள். ஜேம்ஸ் சமாதனப்படுத்துகிறான்.*

*ராஜமாணிக்கம்: (எரிச்சலுடன்) இதுக்குத்தான் வினியைக் கூட்டிக்கொண்டு வாரதில்லை.*

*ஜோர்ச்:* That’s fine Raj.

*விக்டோரியா:* Don’t worry Thaya. James is trained. He’ll look after Vini.

*தயா: அச்சோ... இவவ வச்சுகொண்டு என்ன செய்ரதோ தெரியல.*

*விக்டோரியா: சரியான* training *போனாலே போதும்.* Don’t worry.

*வினியை ஜேம்ஸ் அமர்த்தி சத்தம் கேட்காத வண்ணம்* headphones *கொடுத்தல். வினி சற்று அமைதியாதல். வினியின் மீது மாத்திரம் ஒளி நிலைத்திருக்க மேடை இருளடைகின்றது. பறை சத்தம் கேட்கின்றது.*

**காட்சி 13 :** *கடவுள் தோன்றுதல்*

*மேடையில் மெல்லிய வெளிச்சம் தோன்றுகின்றது. இசை ஒலிக்க மேடையில் கடவுள் தோன்றி ஆடுகின்றார். மூலையிலிருந்த வினியினை கரம் கொடுத்து எழுப்பி அவருடன் ஆட வைக்கின்றார்.*

*மேடை இருளடைகின்றது.*

*குரல்: மாற்றுத் திறனும் ஆற்றல் தானே... வேற்றுமையோடு போற்றிடும் வாழ்வு வளமாய் ஆகும்...*

**காட்சி 14 :** *மீண்டும் திருமண நாள்*

*எல்லோரும் ஆடுகின்றனர்.*

*நியா அமைதி அடைந்து அவர்களைப் பார்த்துக் கொண்டிருக்கும் வினியை அழைக்கிறாள். வினி கதிரையில் இருந்து எழுந்து அவர்களுடன் ஆடுகிறாள்.*

*2 மைமர்ஸ் வந்து ஒதுங்கி நின்ற ராஜமாணிக்கத்தையும் ஏனைய அப்பா, அம்மாக் களையும் அழைத்து வந்து ஆட வைக்கிறார்கள்.* Freeze…

*திரை மூடுகிறது.*



# பரிமளாவும் Danielலும்

**இமாம்**

நான் படித்த வகுப்பில் பரிமளாவும் 8-ம் வகுப்பு முதல் 11-ம் வகுப்பு வரை இருந்தார் என்பதை தவிர எனக்கு பரிமளாவை பற்றி எதுவும் தெரிந்திருக்கவில்லை. அதற்குத் தேவையும் இருந்ததில்லை. ஆனால் இன்று மட்டும் என்ன தேவை வந்தது? ஏன் எனக்கு பரிமளா ஞாபகத்துக்கு வந்தாள்? இல்லை! ஞாபகத்திற்கு வரவழைத்தேன்! அவளின் முகம் எனக்கு இன்னமும் அதிகமாக ஞாபகத்திற்கு வரவில்லை. ஆனால் தமிழ் படங்களில் காண்பிக்கும் ஒரு ஏழைச் சிறுமியின் உருவமாகவே என் மனக் கண்களில் அவள் உருவம் வந்து போகிறது.

கடினமாக யோசித்ததில் ஒரு நிகழ்வு மாத்திரம் என் நினைவுக்கு வந்தது. 11-ம் வகுப்பில் எனக்குத் தமிழ் ஆசிரியைக்கு

மட்டுமே பயம், ஏனென்றால் அவர் வெறும் டீச்சர் மட்டுமல்ல, சேலையில் நடமாடும் ஒரு இராட்சசி! அதனால் அவர் சொல்லை நான் ஒருபோதும் தட்ட நினைத்ததுகூட இல்லை.

ஒருநாள் அவர் பரீட்சை மதிப்பெண்களை மாணவர்களிடம் கொடுத்துக் கொண்டிருந்தார். ஒவ்வொருவராகக் கூப்பிட்டு, அவரவர் புள்ளிக்கு ஏற்றபடி திட்டி அல்லது அடித்து சம்பவம் நடத்தினார். நான் எப்பொழுதும் 90 புள்ளிகளுக்குக் குறையாமல் வாங்குவேன். ஆனால் அன்று அவர் “Daisy இங்க வா” என்று கூப்பிட்ட தொனியிலேயே எனக்கு விளங்கினது ஒரு தரமான சம்பவம் காத்திருக்கு என்று. ஆனால் அது என்ன என்றுதான் தெரியவில்லை! நானும் பவ்வியமாய் போய் நின்றேன்.

“என்ன, நீ மட்டும் படிச்சா காணுமோ? மற்ற பிள்ளைகள் மொக்காவே இருக்க வேணுமோ?”

எனக்கு ஒரு விதத்தில் ‘அப்பாடா’ என்று இருந்தது. அப்ப எனக்கு நல்ல மார்க்ஸ்தான்! ஆனால், ஏன் இந்த கதை சொல்றா என்று விளங்கவில்லை. மற்றபிள்ளைகள் படிக்காட்டில் அதில் என்ட பிழை என்ன இருக்கு? அது டீச்சரின் பிழையாக வேணுமென்றால் இருக்கக்கூடும்! அவருக்கு ஒழுங்கா படிப்பிக்கத் தெரியவில்லை! இது வெறும் mind voiceதான். வேற ஆசிரியர் என்றால் அதுவே main voiceஆக இருந்திருக்கும். ஆனால் இவரிடம் இதைச் சொல்லி, இருட்டடி வாங்குவான் ஏன் என்று நினைத்து அமைதியாக நின்றேன்.

“என்ன முழிச்சுப் பார்க்கிறீர்? நீ மட்டும் படிச்சா போதாது! ஏய் பிள்ளை பரிமளா இங்க வா” என்று சத்தமாக அவர் கத்த பரிமளா தடுமாறி பின்வாங்கிலில் இருந்து ஓடி வந்தாள். அவரின் மறுபக்கத்தில் நின்றாள்.

அவர் பரிமளாவின் பரீட்சைத்தாளை என்னிடம் தந்தார் அதில் 0% என்று இருந்தது. உடனே நான் “இது பரிமளாவின் பரீட்சை தாள்…” என்று திருப்பிக் கொடுக்க முயற்சித்தபோது அதை சிறிதும் பொருட்படுத்தாது, தனது கையில் வைத்திருந்த எனது பரீட்சைத்தாளை என்னிடம் கொடுத்தார். ஒரு கணம் என் முகம் மலர்ந்தது ஏனெனில் அந்தப் பரீட்சையில் எனக்கு 99% புள்ளிகள் கிடைத்திருந்தது.

“இதில சந்தோஷப்பட என்ன இருக்கு? இது உனக்கு படிக்குறன் என்ற திமிர்!” என்று சம்பந்தமில்லாமல் சத்தம் போடத் தொடங்கினர்!

நான் திரும்பி என் நண்பர்கள் இருக்கும் திசையைப் பார்த்தேன், எல்லோருக்கும் ஒரு நமட்டுச் சிரிப்பு. அது ஒரு விதத்தில் எனக்கும் தொற்றிக் கொண்டது. நாம் எல்லோரும் எப்பவும் இந்த டீச்சருக்கு மணவாழ்க்கையில் ஏற்பட்ட விரக்தியைத்தான் எங்களிடம் காட்டுகிறார் என்று எமக்குள் சொல்லிச் சிரித்திருக்கிறோம்! இன்றைக்கு இவருக்கு வீட்டில் என்ன சண்டையோ என்று நங்கள் கண்களால் கதைத்து நகைத்தோம்.

என் நகைப்பு அவருக்கு கோபத்தைக் கூட்டியது. இண்டையில் இருந்து நீதான் பரிமளாவுக்கு படிப்பிப்பாய், அவள் அடுத்த முறை 35% வாங்காவிடில் உனக்கு இருக்குது” என்று கத்தி உருவாடி முடித்தார்!

இப்ப யோசித்துப் பார்க்க 11-ம் வகுப்பில் ஒரு மாணவர் தாய்மொழியில் 0 மார்க்ஸ் வாங்குகிறார் என்றால் எங்கோ பிழை நடந்திருக்கிறது என்று விளங்குகிறது. அதுதான் நான் பரிமளாவை பற்றி 30 வருடங்கள் கழித்து யோசித்துப் பார்க்கக் காரணம். ஏன் நான் அதை இன்று யோசிக்கிறேன்? வாழ்க்கை நம்மை எப்பொழுதும் யோசிக்கவிடாமல் ஒரு நதியோடுவது போல கொண்டுசெல்லும்!

பாடசாலை, முடிந்ததும் பல்கலைக்கழகம். அங்கும் மருத்துவம் படித்ததால் படிப்பு! படிப்பு! படிப்பு! என்று ஆறு வருடங்கள் ஓடிவிடும், பின்பு இன்டர்ன்ஷிப், வேலை என்று இரண்டு மூன்று வருடங்கள் கழிந்து



விடும். பின் 30 வயதுக்குள் கல்யாணம், அதுவும் ஒரு டாக்டர் என்றால் இன்னொரு டாக்டரைத்தான் கல்யாணம் செய்ய வேண்டும்! பின் migration, மீண்டும் படிப்பு படிப்பு! பின் இரண்டு பிள்ளைகள், அவர்களை வளர்ப்பது! அதுவும் பெண்களுக்கு பிள்ளைகளையும், குடும்பத்தையும் கவனிக்க இலகுவாக இருக்கும் என்பதால்தான்!

ஒரு வழியாக GPஆக 30 வருடங்கள் கழிந்து விட்டிருந்தன. எனக்காவது 30 வருடம் கழித்து சிந்திக்க நேரம் கிடைத்தது. ஆனால் என் கணவர் இன்னும் specialization செய்து surgeonஆக வேலையும் படிப்புமாக இருக்கிறார்!

எனக்கு கிடைக்கும் நேரங்களில் என் மகன்களின் தமிழ் கத்தோலிக்க பள்ளிகளுக்கு சென்று சிறுவர்களுக்கு பைபிள் வாசிப்பேன். அங்குதான் Danielலை நான் சந்தித்தேன்.

3-ம் வகுப்பு சிறுவர்கள் வழமை போல மிகவும் கூச்சத்துடன் என்ன செய்வது என்று தெரியாமல் நின்றார்கள்.

அவர்களின் ஆசிரியர் “இன்று முதல் Daisy டீச்சர் உங்களுக்கு பைபிள் கதை வாசிப்பார்” என்று கூறினார்.

எனக்குக் கற்பித்தலில் எந்த முன் அனுபவமும் இல்லை. ஆனால் சுதாகரித்துக் கொண்டு என் மகன்களுக்கு கதை வாசிக்கும் முறையில் இதனை கையாளலாம் என்று நினைத்து, “எல்லோரும் உங்கள் கதிரைகளைக் கொண்டு வந்து சுற்றி உட்காருங்கள்” என்றேன் .

நான் சொல்லி வாய் மூடும் முன் கதிரையை இழுத்துவந்து எனக்கு அருகில் இழுத்துப்போட்டு ஒரு பையன் உட்கார்ந்தான்.

அவன் தான் Daniel. நான் அவன் ஆர்வ-த்தைப் பார்த்து வியந்தேன்! வியப்பை அவ-ன்மீது புன்னகையாய் மாற்றினேன்!

Daniel ஒரு twin. அவனது சகோதரி Maryயும் அந்த வகுப்பிலேயே இருந்தாள். வாராவாரம் நான் பைபிள் கதை வாசிக்கச் செல்வதை Daniel மட்டுமே எதிர்பார்த்துக்கொண்டிருப்பதாக உணர்ந்தேன்.

அது உண்மை என்பது போல இடையில் சில வாரம் நான் செல்லாததைக் கவனித்து, மீண்டும் ஒரு நாள் என்னைக் கண்டபோது “ஏன் டீச்சர் நீங்கள் வாசிக்க வரவில்லை”

என்று கேட்டான். நான் மீண்டும் வாசிக்க சென்றபோது Daniel என் கதிரை நுனியில் வந்து அமர்ந்து கொண்டான். என் விரல்களைப் பிடித்துக் கொண்டு வாசிக்க முயற்சி செய்தார். ஆனால் அவனுக்கு தமிழ் எழுத்துக்கள் தெரியவில்லை. நான் சொல்வதை மனப்பாடம் செய்து வாசிப்பதைப்போல பாசாங்கு செய்தான். ஒரு டாக்டராக எனக்கு, அவனுக்கும் வகுப்பில் உள்ள மற்றவர்களுக்கும் உள்ள வித்தியாசத்தை உணர முடியாமல் இல்லை!

வருட இறுதியில் சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் Danielலும் Maryயும் என் பக்கத்தில் அமர்ந்திருந்தார்கள். அவன் வகுப்பு மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் தருணம் வந்தது, ஒவ்வொருவராக அழைத்தார்கள். Mary என்ற தனது சகோதரியின் பெயர் வந்ததும் சந்தோஷமாக உரக்கக் கைதட்டினான். பின்பு என்னிடம் திரும்பிக் கேட்டான் "எப்ப டீச்சர் என்ட turn வரும்?"

இந்த கேள்வி என்னைத் தூக்கிவாரி போட்டது. அந்த 9 வயதுச் சிறுவனிடம் எப்படிச் சொல்ல முடியும் இந்த சமூகக் கட்டமைப்பில் எப்பவுமே Danielக்கு turn வராது என்று! நான் சொல்வதறியாது அவனயே பார்த்துக் கொண்டிருந்தேன்.

அந்தத் தருணம்தான் Danielக்கான ஒரு உலகம் பற்றி யோசிக்கத் தொடங்கினேன். நான் படித்த படிப்பால் இதுவரை கிடைத்தது வெறும் பொருளாதார ரீதியான நன்மையே தவிர்த்து வேறு ஒன்றும் இல்லை என உணர்ந்தேன். சிறுவர்களின் Mental Health சம்பந்தமாக சிந்திக்கத் தொடங்கினேன்! வாசிக்கத் தொடங்கினேன்! Mental Health சம்பந்தமாக எங்களுக்குள் இருக்கும் கருத்துக்களை ஆராயத் தொடங்கினேன்! அது எப்படி எங்கள் ஊரில், எங்கள் பாடசாலை காலத்தில் மாணவர்களுக்கு எந்த Mental Health பிரச்னையும் இருக்கவில்லை?

அப்பொழுது என் நினைவுக்கு வந்தததுதான் பத்தாம் வகுப்பில் தமிழுக்கு பரிமளா எடுத்த பூஜ்ஜியம். பரிமளாவுக்கு ஏதோ பிரச்சனை இருந்திருக்கிறது.

ஆனால் அதை யாரும் கவனிக்கவில்லை. இல்லை, தெரிந்தும் தெரியாமல் இருந்திருக்க வேண்டும்.

இல்லை இல்லை, என் தமிழ் ஆசிரியருக்குத் தெரிந்திருக்கிறது!


பரிமளாவுக்குப் புரியும்படியாக அமைதியாகவும், ஆர்வத்தைத் தூண்டும் விதமாகவும் ஒருவர் கற்பித்தால் பரிமளாவும் 35 புள்ளிகள் எடுத்துத் தமிழில் சித்தி பெற முடியும் என்று யோசித்துத்தான் என்னை பரிமளாவுக்குப் படிப்பிக்கச் சொல்லி இருக்கிறார்.

அந்த வயதில் எனக்கு அது எதுவுமே புரியவில்லை! ஆனால் இன்றும் பரிமளாவும் Danielலும் ஒரே புள்ளியில் நிற்பது புரிந்தும் நான் செய்வதறியாது நிற்பது ஏன் என்றும் புரியவில்லை! ஆனால் நான் ஒரு தனி டாக்டராக இந்த சமூகக் கட்டமைப்பை மாற்றிவிட முடியுமா? நான் பெற்ற 99%ம், பரிமளா பெற்ற 0% போல எதற்கும் பயன்படாமல் இருப்பது புரிந்தது.


ஆனால் எல்லாம் என்றோ எங்கோ ஒரு இடத்தில் ஆரம்பித்துத்தான் ஆக வேண்டும்! அது இன்று என்னிடத்தில் இருந்து!

# உள நலனுக்கான உதவி

பொதுவாக ஒரு சமூகத்தில் உள ரீதியான பிரச்சனைகள் காணப்படுவது இயல்பு. அத்துடன் ஒரு சமூகம் பல வகையான துன்ப அனுபவங்களையும், இடர்பாடுகளையும் அனுபவித்திருக்குமேயானால் அந்த சமூகத்தில் பலருக்குப் பலவகையான மன அழுத்தங்கள் இருப்பதைத் தவிர்க்க முடியாது. பிரத்தியேகமாக ஒரு பெரும் போரையும் அந்த போரின் கொடூரத்தையும் அநேக காலம் அனுபவித்த இலங்கைத் தமிழ்ச் சமூகத்தினுள் அநேகருக்குப் பல்வேறுபட்ட துன்ப அனுபவங்கள் பலவிதமான மன அழுத்தங்களைக் கொடுத்திருக்கின்றது.




அதேவேளையில் நமது சமூகத்தினுள் மனரீதியான பிரச்சனைகள் பற்றிய பிழையான புரிதலும் அதைப் பற்றி பலவகையான மனக்கறைகளும் உண்டு. ஒரு சமூகம் அதன் கட்டுப்பாடுகளினாலும், அதன் கலாச்சார வழிமுறைகளினாலும் ஏற்படுத்தி வைத்திருக்கும் கறைகளிலிருந்து வெளிவருவது சுலபமானதாய் இருக்காது. இவற்றிலிருந்து ஒரு சமூகத்தை வெளிக்கொணர்வதற்குப் பலவகையான வழிகளில் முயற்சிக்கவேண்டி இருக்கும். முதலில் மனவருத்தங்களும் உடல் வருத்தங்களைப் போன்ற வருத்தங்களே என்ற தெளிவு ஏற்படவேண்டும். இந்த தெளிவு ஏற்பட்டு விட்டால் மற்றைய கறைகளிலிருந்தும், கலாசாரப் பின்னணியால் சிந்தனையில் ஊடுருவி இருக்கும் மனநோய் பற்றிய பிழையான புரிதல்களிலிருந்தும் நம்மவர்களை வெளிக்கொணர முடியும்.


முருகேசு கோவிந்தராஜா

பல வேளைகளில் உளசமூகப் பிரச்சனைகளின் விளைவுகள் மிகச் சாதாரணமானவை. உதாரணத்திற்கு, இயலாமை, தலைவலி, நித்திரை குழப்பம், உறவுகளுடன் சச்சரவு, செயற்பாட்டுத் திறன் குன்றுதல் போன்றவற்றைக் கூறலாம். இவை பல்வேறு விதங்களைப் பிரதிபலிக்கலாம். பிரத்தியேகமாக நமது சமூகம் மிகக்கொடூரமான போரையும் அதன் கொடூரத்தினுள்ளும் வாழ்ந்து மீண்டிருக்கின்றது.

புலம் பெயர்ந்து இந்த நாட்டில் வாழும் போருள் வாழ்ந்த முதல் தலை முறையும் இரண்டாம் தலைமுறையும், அதாவது பெற்றோரும் பிள்ளைகளும், தாங்க முடியா துன்பங்களிலிருந்து மீண்டிருக்கின்றார்கள். அவர்களின் மனதில் எத்தனையோ விதமான நினைவுகள், அழுத்தங்கள், கறைகள், துன்பங்கள் இருக்கும். இவர்களை இந்த துன்பங்களிலிருந்து மீட்டெடுத்து இயல்பு வாழ்வில் இணைத்து முன்னேற்றிக் கொண்டு செல்லவேண்டிய கடமைப்பட்டு எமக்கு உண்டு.

இவற்றை முன்னேற்றிச் செல்வதற்கு முதலில் பாரிய அளவிலான விழிப்புணர்ச்சிச் சேவையின் தேவை இருக்கின்றது. பல சமூகத் தொண்டர்கள்

ஒன்றிணைந்து பொருத்தமான எளிய உத்திகளைப் பயன்படுத்தி அநேக மக்களுக்கு உதவலாம். மேலும், பல எளிய, பாரம்பரிய, நவீன முறைகள் மூலம் மனரீதியான நலத்தைப்பேணி, மேம்படுத்தி, மேலும் பிரச்சனைகள் வராமல் தடுத்து முன்னோக்கிச் செல்வதற்கு உதவலாம். இவற்றுக்கு உதவக்கூடிய அடிப்படை மனநல தத்துவங்களை விளக்குவதும், மனநோய்களின் வித்தியாசங்களையும், விளைவுகளையும் விளக்கிப் புரியவைத்து, அவற்றின் தாக்கங்களில் இருந்து குணப்படக் கூடிய எளிய வழிமுறைகளையும், இந்த நாட்டில் இருக்கும் வசதிகளையும் வாய்ப்புக்களையும் கற்பித்தலிலும் பெரிய அளவில் உதவலாம்.

ஒரு சமூகம் அதன் அதி உச்ச செயலாற்றல் திறனுடன் காரியமாற்றி முன்னேறிச் செல்வதற்கு அந்த சமூகத்தின் மக்கள் திருப்தி உடையவர்களாயும், மனநிறைவு பெற்றவர்களாயும், பிரத்தியேகமாக மன ஆரோக்கியத்தில் உச்ச நிலையில் இருக்கவேண்டியது ஓர் அடிப்படையான தேவையாகும். மனவழுத்தங்கள் நிறைந்த ஒரு சமூகத்தை அந்த அழுத்தங்களிலிருந்து வெளிக்கொணர்ந்து முன்னேற்றிச் செல்வதற்கும், அவர்களுள் பதிந்திருக்கும் கறைகளைப் போக்கி அவர்களுள் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு அவர்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய, அவர்களின் கலாச்சாரத்துக்கு ஒத்த பிரயோசனமான விளக்கங்களும் அணுகு முறைகளும் இன்றியமையாதவையாகும்.

அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் வாழும் நமக்கு, நமது கலாசார கண் ஊடாக இந்த நாட்டில் பயன்படுத்தப்படும் உளநலமருத்துவ தத்துவங்களையும், முறைகளையும் விளங்கிக்கொள்ள வேண்டிய அவசியமும் அந்த அறிவு முறைகளையும், விளக்கங்களையும், உதவிகளையும் எங்கெல்லாம் பெறலாம் என்பதை அறிந்திருப்பது மிகவும் அவசியமாகும். நமது மக்களிடையே பல பாரம்பரிய முறைகள் மனநலனை மேம்படுத்த உள்ளன என்ற உறுதியான நம்பிக்கை உண்டு. உதாரணத்திற்கு, யோகாசன முறைகள் பல உளநலப் பிரச்சனைகட்கு உதவும் என்றும், இவை மன ஆரோக்கிய நிலையை உயர்த்தி உளநலனை பேணவும், உளரீதியான நோய்கள் வராமல் தடுக்கவும் உதவும் என்ற நம்பிக்கை பலமாக உண்டு. இதனால், இந்நாட்டு மருத்துவ வழிமுறைகளுக்கும், நமது பாரம்பரிய துறைகளுக்கும் இடையே தொடர்புகளைப் பலப்படுத்தி ஒருவருக்கொருவர் இரண்டையும் பற்றிய வழிகாட்டுதலையும், விழிப்புணர்வுகளை யும் ஏற்படுத்த வேண்டிய தேவை இன்றிய மையாததாகும்.

நமது நாட்டில் மனநோய்களைக் குறிக்க விசர், பைத்தியம், ஒருமாதிரி, ஒரு போக்கு, விசர்க்குணம், கழண்டது, லூஸ் போன்ற சொற்பதங்களை பாவிப்பதுண்டு. ஒருவரில் அசாதாரணமான நடத்தை மாற்றங்கள் ஏற்படும்போது இப்படியான வார்த்தைகளால் அவரை வர்ணிப்பதுவும், கருதுவதும் உண்டு. அதேவேளையில், கடுமை குறைந்த நரம்புத்தளர்ச்சி, மனச் சோர்வு, மனவழுத்தம் போன்ற மிதமான மனநோய்கள் சுலபமாகக் குணப்படுத்தக் கூடியவை. இங்கு வாழும் எமது சமூகத்தில் உள்ள மனவழுத்தங்களால் பாதிக்கப்பட்டு அவஸ்தையும் பலருக்குக் குணப்படுத்தக் கூடிய மிதமான மனநோய்களே உள்ளன என்று கணிக்கலாம். ஆனால், இந்த வகையில் அவஸ்தையுறுபவர்கள் இவர்களின் குடும்பங்கள் மேலும், பிள்ளைகள் - அதாவது அடுத்த தலைமுறை, மேல் ஏற்படுத்தும் பாதிப்பு கடுமையானதாக உள்ளதையும் அவதானிக்கலாம். ஒருவகையில், இவற்றைத் தாங்கிக்கொண்டும், பொறுத்துக்கொண்டும் வாழும் மௌனமான பெரும்பான்மை ஒன்று நம்மி டையே உண்டு. இவர்களை இனம்கண்டு, வெளிக்கொணர்ந்து, முன்னேற்ற வேண்டிய பொறுப்பு நம் ஒவ்வொருவருக்கும் உண்டு.

மேலும் அகதிகளாக இங்கு வந்து குடியேறியவர்கள் முகம் கொடுக்கும் சவால்கள் மிகப்பெரியவையாகவும், கஷ்டங்கள் நிறைந்தவையாகும். பிரத்தியேகமாக, மொழி மற்றும் தொடர்புகளைப் பேணுதல், இனவெறி பாகுபாடு, சமூக அணுகுமுறைகள், பிள்ளைகளின் பள்ளிக் கல்வியில் சீர்குலைவின் தாக்கம், ஆங்கிலம் கற்க வேண்டிய அவசியம், சொந்த நாடு மற்றும் அல்லது புகுந்த நாடுகளில் உள்ள குடும்பங்களுடனான தூரம் மற்றும் தொடர்பு இல்லாமை, தொழில் இன்மை, தொழில் தேடுதல், தொழில் பெறுதல் போன்றவற்றில் ஏற்படும் கஷ்டங்கள், பணநெருக்கடி, நிரந்தர குடியுரிமை இல்லாமையும் அதன் பொருட்டு அனுபவிக்கும் மனவழுத்தங்கள். இப்படி பலவகையான துன்பத்துடன் நமது சமூகத்தில் பலர் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இப்படியான சிரமங்களைத் தாங்கும் அல்லது விரைவாக மீண்டு எழும் திறனும், ஓர்மமும் நம்மவர்கள் பலருக்கு இருக்கின்றபோதும் ஒரு சமூகமாய் உதவிகள் செய்ய வேண்டிய கடமைப்பாடும் இந்த நாட்டின் நடைமுறைகள் பற்றிய அறிவை கொடுத்து, விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய தார்மீகக்கடமை ஒரு சமூகமாய் நம் எல்லோருக்கும் உண்டு.

அதேவேளையில், பிள்ளைகளும் இளைஞர்களும் எதிர்கொள்ளும் சவால்கள், பிரத்தியேகமாக அவர்களுடைய வயதையும் அனுபவத்தையும் வைத்துக் கணக்கிட்டால், மிகவும் துன்பம் நிறைந்தவையாகும். அவர்கள் போரினால் ஏற்பட்ட காயங்களுடனும் இடம்பெயர்ந்ததினால் ஏற்பட்ட கறைகளுடனும் வாழவேண்டிய நிலையில் பலவகையான மன அழுத்தங்களுக்கு ஆளாகின்றார்கள். இப்படியான துன்பங்களிலிருந்து மீண்டெழும் ஆற்றல் பிள்ளைகளுக்கு அதிகம் உள்ள போதும் சில பிள்ளைகளும் இளைஞர்களும் பலவிதமான அழுத்தங்கட்கு உள்ளாவதுடன் பல வகையான சவால்களையும் எதிர்கொள்கின்றார்கள்.

பிரத்தியேகமாக, மாறுபட்ட சூழல், வேற்று மொழி, மொழி ஆற்றல், குழம்பிப் போன அல்லது வரையறுக்கப்பட்ட முன் கல்வியும் தற்போதைய படிப்பும், அவர்களின் தனித்துவம், அடையாளம், உடைமை போன்றவை அவர்களைப் பாதித்து அதிர்ச்சிக்கு உள்ளாக்கப்படுவார்கள். இத்தகைய பாதிப்புகளால் மனச்சோர்வுக்கு உள்ளான பல இளைஞர்களையும், பிள்ளைகளையும் நீங்கள் கண்டிருப்பீர்கள். இவர்கள் பெரும்பாலும் கவலையில் மூழ்கியிருத்தல், தொடர்ச்சியாக யோசித்தபடி இருத்தல், எதிர்காலத்தில் நம்பிக்கை இல்லாமை, விரக்தி மனப்பான்மை, தாழ்வு மனப்பான்மை, மகிழ்வின்றி இருத்தல், உதவி அற்றவர்களாய், உதவிகளை எங்கு பெறமுடியும் என்று தெரியாதவர்களாய் இருப்பார்கள்.

இவை எல்லாவற்றிலிருந்தும் நமது எதிர்கால சந்ததியினரை வெளிக்கொணர்ந்து முன்னேறிச் செல்ல வைப்பது எங்கள் எல்லோருடைய தலையான கடமையாகும். மற்றவர்கட்கு உதவி செய்வது ஒரு அளப்பரிய சேவை என்பதை உணர்ந்து, அந்த உணர்வுடன் சேவை செய்வது மனநிறைவைக் கொடுக்கக்கூடியதொன்றாகும். நாம், நம்முள் உண்மையான கரிசனை, தெளிவான சிந்தனை, சுயவிழிப்புணர்வு, இதமான மனப்பாங்கு, பொறுமை, திறந்த மனநிலை, மற்றவர்களை மதித்தல், நேர்மை, இசைந்தும் விட்டும் கொடுத்தல், போன்ற பண்புகளை வளர்த்து நமது சமூகத்தில் துன்பங்களுடன் வாழுபவர்களை இனம் கண்டு அவர்கட்கு உதவி, அவர்களை வெளிக்கொணர்ந்து முன்னேற்றிச் செல்வோம்.





சியாமளா
சோமசுந்தர அய்யர்

# மாற்றம் ஒன்றே மாறாதது

காலம் என்னும் சக்கரம் சுழன்றபடியே இருக்கின்றது. இம்மாற்றத்திற்கேற்ப இயற்கையில் பல மாற்றங்கள் நிகழ்கின்றன. இது யாவரும் அறிந்த ஒன்றே.

இம்மாற்றம் மனித வாழ்வையும் விட்டுவைக்கவில்லை. குடிசைகள் கோபுரங்களாகிவிட்டன. வீட்டின்வாயிற்படி தாண்டி வெளியே வராமலிருந்த பெண்கள் பல துறைகளிலும் கல்வி கற்று பல

சாதனைகளையும் படைத்துள்ளனர். இது பாராட்டப்படக் கூடிய விஷயமாகும்.

ஆணுக்குப் பெண் அடிமையாக வாழ்ந்த காலம் போய்விட்டது. இன்று ஆணும் பெண்ணும் சரிசமமாக மதிக்கப்படுகிறார்கள். இந்நிலை மாறியதற்குப் பாரதியாரையே நாம் போற்ற வேண்டும். பெண் விடுதலை பற்றிப் பல பாடல்களைப் பாடிப் பெண்களின் அறிவுக் கண்களைத் திறந்து வைத்தவர் அவரே. வீட்டில் தாயார் படித்தவராக இருந்தால் தன் பிள்ளைகளையும் எப்பாடுபட்டாவது கல்வியில் ஊக்கம் கொள்ள வைப்பாள். வீடு சிறப்புற்றால் நாடும் சிறப்புறும். இம் மாற்றம் பெண்களுக்கெல்லாம் கிடைத்த மாபெரும் வரப்பிரசாதம்.

காலமாற்றத்தை ஏற்கவும் முடியாமல், மறுக்கவும் இயலாமல் திண்டாடித் தவிப்பவர்கள் மூத்தோரும் இளையோரும் என்பது என் கருத்து.

எமது தாய் நாட்டில் வாழ்ந்த காலத்தில் பெற்றோர் தமது பிள்ளைகளுக்காக பல தியாகங்கள் செய்து தமது அபிலாசைகளை மறந்து, மறைத்து அவர்களின் கல்வி எதிர்காலம் ஒன்றே தமது இலட்சியங்களாக வாழ்ந்தனர். தமது பிள்ளைகள் மேலைத் தேசம் சென்று கல்வி பயிலவும் ஒத்துழைப்பு வழங்கினார். பிள்ளைகளும் தம் பெற்றோரை விட்டுப் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் தம் வாழ்வை ஆரம்பித்தனர்.

தாம் எடுத்த கடமை இனிதாக நிறைவேறி விட்ட திருப்தியில் பெற்றோரும் தம்மிடம் இருப்பதைக் கொண்டு தம் வாழ்வை வாழ முனைந்தனர். மாற்றம் அவர்களை மட்டும் விடுமா என்ன? முதுமை, தள்ளாமை, நோய் என்பன அவர்களையும் விட்டுவிடவில்லை. பிள்ளைகளின் பிரிவு வாட்டியது.

கால மாற்றத்தை நன்கு உணர்ந்துகொண்ட சில பிள்ளைகள் தம் பெற்றோரையும் தம்முடன் அழைத்துக் கொண்டனர். அவர்கள் வசதியாக வாழவும் வழி அமைத்துக் கொடுத்தனர். இப்படியான பிள்ளைகளைப் பெற பெற்றோர் கொடுத்து வைத்தவர்கள். மூத்தோரும் தமது பேரப் பிள்ளைகளுடன் மகிழ்வாக வாழ்ந்துகொண்டு தம் பிள்ளைகளுக்கும் தம்மாலான உதவிகளைச் செய்து நலமாக வாழ்கின்றனர்.

வேறு சில பிள்ளைகள் கால மாற்றத்தை உணர்ந்தும் பெற்றோரின் உடல்நிலை புரிந்தும், பணத்தை மட்டுமே அனுப்புகின்றனர். பணத்தை மட்டுமே வைத்துக்கொண்டு முதியோரும் என்னதான் செய்வது. அன்பான வார்த்தை, அரவணைப்புக்காக ஏங்குகின்றனர். தள்ளாமை வேறு. காலப்போக்கில் தாய் தந்தையர் முதியோர் இல்லங்களில் அடைக்கலம் புகுகின்றனர். அங்கு முதியோர் வசதியாக வாழப் பல அமைப்புகள் வழி அமைத்துக் கொடுக்கின்றன. பசிக்கு உணவு கிடைக்கின்றது. பொழுதுபோக்கு அம்சங்கள் உண்டு. மனதுக்கு? அது அலைபாய்கிறது. இங்குதான் இவர்கள் மாற்றத்தை உணர வேண்டும். “நாம் பிள்ளைகளின் முன்னேற்றத்திற்கு உழைத்தோம். அதில் வெற்றியும் பெற்று விட்டோம். அதன் பலன் எம் முதுமைக்காலத்தில் யாரோ எமக்கு உதவுகின்றனர். இதுவே இறைவன் செயல்” என எண்ணி மனதை இலேசாக்கி மகிழ்வாக வாழப் பழக வேண்டும்.

‘முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்’ எனும் பழமொழி எமக்கும் பொருந்தும் அல்லவா? நாம் ஒன்று இரண்டு பிள்ளைகளை வளர்த்தோம். இன்று பல

பிள்ளைகள் எமக்கு. அவர்கள் ஆதரவில் நாம் வாழ்கிறோம் என மன ஆறுதல் அடைவோம். இறைவன் பிள்ளைகள் நாம் என தைரியம் கொள்வோம். நானும் ஒரு முதியவள். கால மாற்றத்தை உணர்ந்து இன்றுவரை என்னாலியன்ற உதவிகளைப் பிறருக்குச் செய்துகொண்டு மகிழ்வாக வாழ்கிறேன்.

அடுத்து சில இளையோரும் கால மாற்றத்துக்கு ஏற்ப வாழ முடியாது மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர். பிள்ளைகள் பெற்றோரின் உதவியால் சிறப்பாக கல்வி கற்று பட்டதாரிகள் ஆகின்றனர். தமக்குப் பிடித்தமான தொழிலிலும் ஈடுபட்டு உற்சாகமாக வாழ்கின்றனர். பெற்றோரும் தம் பிள்ளைகள் திருமண வயதை அடைந்ததால் உரிய வாழ்க்கைத் துணையைத் தேட ஆரம்பிக்கின்றனர். இளையோர் சிலர் பெற்றோரின் மனம் கோணாமல் திருமணம் புரிந்து இனிதாக வாழ்கிறார்கள். வேறு சிலர் தம் மனதுக்கு பிடித்தவரை தாமே தெரிவுசெய்து பெற்றோரின் சம்மதம் கேட்கும்போதுதான் பிரச்சனையே ஆரம்பிக்கும். “குலம் என்ன? மதம் என்ன? மொழி என்ன ? நாடு என்ன? எனப் பல கேள்விகள். எல்லாம் சமரசமாக முடிந்துவிட்டால் மகிழ்ச்சி. பிறகென்ன திருமணம்தான்.

இல்லையேல் பெற்றோர் சம்மதம் கிடைக்காவிடில் துணிச்சலுள்ள பிள்ளைகள் நண்பர்களின் உதவியுடன் தம் திருமணத்தை முடித்து வாழ ஆரம்பிக்கின்றனர். மாற்றத்தை அறிந்த பிள்ளைகள். வாழ்க வளமுடன்.

சில பிள்ளைகள் பரிதாபத்துக்குரியவர்கள். என்னதான் உயர் பதவியில் இருந்தாலும் பெற்றோருக்கும் காதலிடத்தவருக்கும் இடையே அகப்பட்டு யாரையும் பிரிய மனமின்றி மன உளைச்சலுக்கு ஆளாகி தம்மைத் தாமே அழித்துக்கொள்கின்றனர். இதற்கு காரணம் யார்? காலமாற்றத்தை ஏற்றுக்கொள்ள முடியாதவர்கள்தானே? நாம் பிறந்தது வாழ்வதற்கே. நமக்காக வாழ முடியாவிட்டாலும் பிறருக்காக வாழ்வோம். காலமாற்றத்திற்கேற்றபடி வாழ்ந்து காட்டுவோம்.

# பிள்ளை



ஜேகே

எங்கள் வீட்டுக்குப் பிள்ளை வருவதில் எனக்கு ஆரம்பத்தில் இம்மியளவிலும் இஷ்டமிருக்கவில்லை.

நாய்களில்தான் எனக்கு ஈடுபாடு அதிகம். ஈடுபாடு என்று சொல்வதுகூடத் தவறு. நாய்களின்மீது எனக்குப் பேரபிமானமே உண்டு. ஆனால் என் மனைவி சாயிலா பானுவோ தனக்கு நாய்களைப் பிடிக்காது, இஸ்லாத்தில் நாய்களை வளர்ப்பது ஹராம் என்று ஒரே போடாகப் போட்டுவிட்டாள். இத்தனைக்கும் காதலிக்கும்போது நிறைய நாய் காணொளிகளை எனக்கு இன்ஸ்டகிராமில் அவள் அனுப்பிக் கொண்டேயிருப்பாள். ஒரு நாய் தூங்கும் போது மற்ற நாய் சொறிவது. நாய் நீச்சல் குளத்தில் பாய்ந்து பந்தை மீட்பது. தவறுசெய்துவிட்டு நாய் பாவமாய் பாவ்லா காட்டுவது. இப்படித் தினமும் தூங்குவதற்கு முன்னர் அவளிடமிருந்து பல நாய் காணொளிகள் எனக்கு வருவதுண்டு. அதற்கு உடனேயே ஹார்ட்டின் போட்டு விட்டுத்தான் நான் தூங்கப்போவேன். சில சமயங்களில் அவள் அந்தப்பக்கம் தூக்கம் வராமல் தவிப்பதுண்டு. அப்போது என்னையும் அவள் நிம்மதியாகத் தூங்கவிடமாட்டாள். ஐந்து நிமிடத்துக்கொருமுறை எனக்கு மெசேஜ் வந்துகொண்டேயிருக்கும். அல்லது ஸ்டோரியில் டாக் பண்ணுவாள். இன்னொருவருடைய போஸ்டிலே சென்று “டேய் சேகர், இத பாத்தியாடா?” என்று என்னை இழுத்துவிடுவாள். எல்லாவற்றுக்கும் உடனேயே நான் ரியாக்ட் செய்யவும் வேண்டும். சில சமயம் ‘ஸோ லவ்லி, கியூட்’ என்றெல்லாம் சொல்ல வேண்டும். அல்லது தொலைந்தேன். அதற்காகவே நான் அலாரம் வைத்து மணிக்கொருதடவை எழுந்து இன்ஸ்டகிராமில் அவள் நாய்களுக்கு ஹார்ட்டின் போட்டுவிட்டுப் படுப்பதுண்டு. அதெல்லாம் காதலிக்கும்வரையில்தான். நிக்காஹ் முடிந்து இருவரும் சேர்ந்து வாழ ஆரம்பித்த பின்னாடி நாய் காணொளிகளை அவள் இப்போது எனக்கு அனுப்புவதில்லை. ஆனால் அடிக்கடி என்னுடைய சில்மிசங்களை காணொளி எடுத்து தனது இன்ஸ்டகிராமில் போட்டுக்கொள்வாள். இந்த சேகர் நாராயணன் பிள்ளையை இன்ஸ்டகிராமில் நாய் சேகர் ஆக்கிய பெருமை என்னுடைய காதல் மனைவி சாயிலா பானுவுக்கே சேரும்.

அப்படிப்பட்ட சாயிலா பானு, அதுவும் இந்தச் சைவப்பழத்தைக் காதலித்து நிக்காஹ் செய்த சாயிலா பானு, இஸ்லாத்தின் ஏதோ

ஒரு பழைய நம்பிக்கையைக் காட்டி, எங்கள் வீட்டிலே நாய் வளர்ப்பதை மறுப்பாளா என்ன? உண்மை அதுவல்ல.

சொல்லப்போனால் திருமணமான புதிதில் சாயிலாவுக்கு ஒரு நாயை வளர்ப்பதில் ஆர்வம்தான் அதிகமிருந்தது. கவூடுள் நாயொன்றை வாங்குவதற்கு நாங்கள் திட்டம்கூடத் தீட்டியிருந்தோம். அப்போதுவேறு கொரோனா காலம் என்பதால் நண்பர்கள் உறவினர்களை நேரில் சந்தித்துப் பேசும் சந்தர்ப்பமும் எமக்கு இருக்கவில்லை. அதனால் வீட்டில் ஒரு நாயாவது வளர்ந்தால் பேச்சுத்துணையாக இருக்கும் என்று நாங்கள் யோசித்தோம். நாய் எப்படிப் பேச்சுத்துணையாகும் என்று



உங்களுக்குச் சந்தேகம் வரலாம். ஆனால் என்னோடு ஓர் ஐந்து நிமிடத்துக்குத் தொடர்ந்தாப்போல பேசினாலே சாயிலா பானுவுக்கு இப்போதெல்லாம் காதுக் குள் கம்பளிப்பூச்சி ஊர ஆரம்பித்து விடுகிறது. பத்து நிமிடங்கள் பேசினால் அணு உலை வெடித்துச் சிதறுகிறது. ஆனால் நாயோடு பேசுவதால் எந்தச் சிக்கலும் வந்துவிடப்போவதில்லை. இங்கே எந்த நாய்க்கும் தமிழ்வேறு ஒழுங்காகத் தெரியாதா? ஓர் எலும்புத்துண்டைக் காட்டிவிட்டால் போதும். எல்லா நாயளும் வாலை ஆட்டிக்கொண்டு எம் முன்னால் மண்டியிட்டு அமர்ந்து நாங்கள் எந்தக் குப்பையை வாயிலிருந்து கொட்டினாலும் ஆர்வமாகச் செவிமடுத்துக்கொண்டிருக்கும். எனக்குத் தெரிந்த நண்பர் வீட்டில் அதுகூடக் கொடுப்பதில்லை. சின்னதாக ஒரு காரட்டைக் கொடுத்தால் போதும். அவர்கள் வீட்டு நாய் வாலை ஆட்டியபடி காலடியில் குறண்டிவிடும். காட்டிலே வேட்டை யாடித்திரிந்த ஓநாய் குலச் சிங்கம், பாவம், கேவலம் வெறுங் காரட் துண்டுக்கு வாலை ஆட்டிப் பிழைக்கவேண்டிய விதியை நாம் ஒரு கணம் நினைத்துப்பாருங்கள். சிங்களவன் காரிலே ஸ்ரீ எழுதியதற்கு எதற்காகத் தமிழன் வீணாக டென்சனாகி அழிந்தான் என்று யோசிக்க ஆரம்பித்துவிடுவோம்.

ஆக வீட்டுக்குள் எந்த நாயும் வரக் கூடாது என்று சாயிலா உறுதியாகச் சொன்னதற்கு இஸ்லாம் என்பது ஒரு சாட்டுதான். அதற்கு மொத்தக் காரணமும் என் தங்கை அமுதவிஷா. அதென்ன அமுதவிஷா என்று கேட்கிறீர்களா? என் அப்பாவுக்கு அமுதா என்ற பெயரில் ஒரு பெரு விருப்பம். ஏனென்று கேட்காதீர்கள். அம்மாவுக்குப் பெயரில் ஷ என்ற எழுத்து வந்தால் கொஞ்சம் ஸ்டைலாக இருக்கும் என்று ஓர் எண்ணம். என்னைக்கூட அவர் ஷேகர் என்றுதான் கூப்பிடுவார். அதனால் அம்மாவும் அப்பாவும் இந்தப் பெயர் விசயத்தில் ஒத்துவரவேயில்லை. கடைசியில் குழந்தை பிறந்து ஒரு மாதம் கழித்துத்தான் அமுதவிஷா என்ற சமரசத் துக்கு இருவரும் ஒத்துவந்தார்கள். பெயர் வைத்த இராசி, ஒரு பானை அமுதத்தில் ஒரு துளி விசத்தைக் கலந்தாலும் அது விசம்தான் என்பதை நிரூபிப்பதுபோல அமுத விஷாவும் வளரும்போது ஒரு முழு விசச் செடியாகவே வளர்ந்தாள். அவளைக் கேட்டால் அண்ணன் ஒரு விச விருட்சம் என்று பொய் சொல்வாள். நம்பி விடாதீர்கள்.

ஒருமுறை என் தங்கையோடு பேசிக்கொண்டிருக்கும்போது நாங்கள் ஒரு நாயை வாங்கி வளர்க்கப்போகிறோம் என்று போகிறபோக்கில் சொல்லிவிட்டேன்.

அவளும் ‘அப்படியா, ஸோ லவ்லி’ என்று ஆர்வத்துடன் கேட்டாள். அப்போதே நான் சுதாகரித்திருக்கவேணும். ஆனாலும் கேட்பதற்கு ஆள் கிடைத்ததே என்று நானும் விசயம் தெரியாமல் எம்முடைய ஆராய்ச்சி எல்லாவற்றையும் சொல்லிவிட்டேன். கவூடுள்தான் கியூட், வளர்ப்பதும் எளிது, வடிவி, சொல் வழி கேட்கும், எதிரித்துப் பேசாது, குரைக்காது, கடிக்காது, சரியாகப் பயிற்சி கொடுத்தால் கக்காவை அடக்கி வைத்து வெடித்துச் சாகுமே ஒழிய, ஒருகாலமும் நடு வீட்டுக்குள் இருக்காது என்றெல்லாம் அளந்துவிட்டேன். என்னே ஆச்சரியம், அடுத்த வாரமே அமுத விஷா வீட்டில் புதிதாக ஒரு நாய் வந்துவிட்டது. அதுவும் ஒரு கவூடுள் நாய். இதுதான் அவளது நாறக் குணம். எங்கள் வீட்டில் ஐபோன் வாங்கினால் அவள் ஐபோன் புரோ வாங்குவாள். நான் டொயோட்டோ கொரொல்லா வாங்கினால் அவள் ராவ்4 வாங்குவாள். நான் சாயிலா பானுவைக் காதலித்துக்கொண்டிருந்த காலத்தில் அந்த விசம் பல்கலைக்கழகத்தில் தன்னோடு கூடப்படித்த சவுதி அரேபிய முஸ்லிம் பெடியனை விறுமாப்பில் கொஞ்சநாள் சைட் அடித்துக்கொண்டிருந்தது. நல்ல காலம் அவன் படித்து முடித்ததும் எண்ணெய் விற்க ஊருக்குப் போனதில் விஷம் கடைசியில் ஒரு சிங்களப் பெடியனைக் காதலித்து இருவரும் ஒன்றாக இப்போது வாழ்ந்து வருகிறார்கள். அம்மாவும் அப்பாவும் கூட அதற்கு ஒன்றும் சொல்ல வில்லை. அதற்கு இரண்டு காரணங்கள். ஒன்று, அந்தச் சிங்களப்பையனின் பெயர் பெர்னாந்தோபிள்ளை. பெயரைக் கேட்டதும் என் அப்பன் நாராயணன் பிள்ளைக்குச் சந்தோசம் தாளவில்லை. இரண்டாவது காரணம் அவன் என் அம்மாவைப் பார்த்ததுமே ‘அன்ரி நீங்கள் மாதுரி டீக்ஷிட்போல இருக்கிறீர்கள்’ என்று டபக்கென்று சொல்லிவிட்டான். சொல்லப்போனால் ‘thats a pretty shitty assessment’. ஆனாலும் உத்திவேலை செய்துவிட்டது. உடனேயே ‘அந்தப் பிள்ளை ஒரு நல்ல பிள்ளை’ என்று இருவரும் சொல்லிவிட்டார்கள். அமுதவிஷமும் பெர்னாந்தோபிள்ளையும் புதிதாக வீட்டுக்குள் குடிபுகுந்தபோது எல்லாமே எம் வீட்டில் இருப்பதுபோலவே வாங்கினார்கள். எங்களிடம் ஒரு சோனி டிவி இருந்தது. அவர்களும் அதே டிவி வாங்கினார்கள். பத்து இஞ்சி பெரிதாக. எங்களிடம் சாம்சங் துவைப்பான் இருந்தது. அவர்களும் அதையே வாங்கினார்கள்.



கேவலம் என்னவென்றால் நாங்கள் அமேசனின் ஓர்டர் பண்ணிய மஞ்சள் நிற பிரிட்ஜ் தவறுதலாக பச்சை நிறத்தில் வீட்டுக்கு வந்துவிட்டது. இனி அதை எப்படி ரிட்டேர்ன் பண்ணுவது என்று தெரியாமல் நாங்கள் அப்படியே பயன்படுத்த ஆரம்பித்துவிட்டோம். அது தெரியாத விசம் அதே பச்சை நிறத்தில் பாரிய இரடைக்கதவு பிரிட்ஜை தன்வீட்டிலும் வாங்கிவிட்டது.

இப்படிப்பட்ட அமுதவிசத்திடம் நாய் வாங்கும் விசயத்தைச் சொன்னது என் தவறுதான். ஆனால் உளறிவிட்டேன். விளைவு அடுத்த வாரமே பீநட் வந்துவிட்டது. பீநட்தான் அந்த நாயின் பெயர். இதுவும் என் தவறுதான். பேசும்

போது நாங்கள் எங்கள் நாய்க்குக் கோகனட் என்று பெயர் வைக்கலாம் என்று சொல்லியிருக்கவேண்டும். அமுதவிசம் உடனே தன் நாய்க்கு பீநட் என்று பெயர் வைத்துவிட்டது. விசமும் என் சிங்கள மச்சானும் பீநட் பீநட் என்று அதனைக் கொஞ்சுவார்கள். அதுவேறு லொக் டவுன் காலமென்பதால் சூமில்தான் முதன் முதலில் அவர்கள் பீநட்டை எமக்குக் காட்டி னார்கள். எனக்கோ பயங்கரக் கடுப்பு.




சாயிலா அவர்கள் பீநட்டை காணொளியில் காட்டும்போது வேறு திரையில் டானியல் ஆன்றூசின் பத்திரிகையாளர் சந்திப்பைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

இப்போது சாயிலாவின் ஆதங்கம் புரிகிறதா? அமுதவிசம் நாய் வாங்கியபிறகு நாமும் நாய் வாங்கினால் நமக்கென்ன மரியாதை என்பதுதான் அவளது அடிப்படை வாதம்.

“அந்தக் கச்சானிண்ட மூஞ்சியைப் பார்க்கவே சகிக்கல. இதில இவர் தேங்காய் ஒண்டைக் கொண்டுவரப்போகிறாராம்”

கடுப்பில் சாயிலாபானு பீநட்டையும் கோகனட்டையும் தமிழ்ப்படுத்திவிட்டாள். புரிகிறது. சிலர் கச்சான் என்பது தமிழ் வார்த்தை இல்லை என்பீர்கள். அவர்களிடம் நான் ஒரு கேள்வி கேட்கிறேன். முதலில் தமிழ் என்பதே ஒரு தமிழ் வார்த்தையா? தொல்காப்பியத்தில் தமிழ் என்ற சொல் இருக்கிறதா என்ன? ஓகே. சில வேலையற்றதுகள் ஓடிப்போய் அந்த ஆராய்ச்சியைச் செய்யட்டும். நாம் அடுத்த கட்டத்துக்கு முன்னேறுவோம்.

இப்போது நாம் வீட்டிலே நாயை வாங்கி வளர்க்கமுடியாது என்று ஆகிவிட்டதா? சரி அதற்கென்ன, ஒரு பூனையை வளர்க்கலாம் என்று நாம் ஏகமனதாக முடிவெடுத்தோம். இஸ்லாத்திலும் நாய்தான் கூடாது, பூனை நல்லது என்று ஒரு கோட்பாடு இருப்பதால் சாயிலா பானுவுக்கும் இன்ஸ்டகிராமில் பூனைப்படம் போடும்போது பிரச்சனைகளும் வரப்போவதில்லை. யாரோ பெயர் முகம் தெரியாத நாயெல்லாம் வந்து ‘நீ எப்படி நாய்ப்படம் போடலாம்?’ என்று சொல்லும் அறிவுரையைக் கேட்கவேண்டியதில்லை. அதனால் பூனை வசதியானது என்பது அவளது எண்ணம்.

எனக்குமே பூனைதான் பொருத்தமானது என்று தோன்றியது. என் குணத்தோடு பூனையின் குணம்தான் பொருந்தியும் போகும். பேசிக்கலி நாய் நல்லது. அன்பு பாராட்டுவது. அதற்குத் தன்னலம் என்பதே கிடையாது. தன் எசமானரைத் திருப்திப்படுத்துவது மாத்திரமே அதனது இருத்தலின் பிழைப்பு. பிறவிப்பயன். தன் விழியால் பிறருக்கு அழும் அலாதியான மிருகம் அது. ஆனால் நானோ என் சோகத் துக்குக்கூடப் பிறர் அழவேண்டும் என்று யோசிப்பேனே ஒழிய நான் அழ மாட்டேன். ஆனால் பூனை அப்படிப்பட்டதல்ல. அது ஒரு கிருமி. பூனையைப் பொறுத்தவரையில் அதற்குத் தான்தான் இந்தப் பிரபஞ்சத்தின் மையப்புள்ளி என்ற எண்ணம் எப்போதுமிருக்கும். மீதி எல்லாமே அதற்காகத் தோன்றி சேவை செய்ய வந்தவை என்பதுதான் அதன் நம்பிக்கை. எல்லாப்பூனைகளும் “I think, therefore I am” என்று சொல்லிக்கொண்டே அலைகின்றன. சொல்லப்போனால் வீடுகளில் யாருமே பூனையை வளர்ப்பதில்லை. பூனைதான் அவர்களை வைத்து தன்னை

வளர்த்துக்கொள்கிறது. கண்ணை மூடினால் பூனைக்கு உலகமே இருண்டுவிடும் என்று கேலியாகச் சொல்வார்கள் அல்லவா? ஆனால் அதுதான் உண்மை. அது எப்படி எனக்குத் தெரியும் என்கிறீர்களா? ஏனெனில் கிட்டத்தட்ட நானும் அப்படிப்பட்டவன்தான். நானொரு பூனை. எந்தளவுக்கு ஒரு பூனை என்றால் இன்னொரு பூனை இந்த வீட்டினுள் வந்தால் என்னுடைய செல்வாக்கு குறைந்துவிடும் என்று நினைக்குமளவுக்கு ஒரு பூனை. ஒரே கவசத்தில் இரண்டு வாள்கள் இருக்கமுடியாது அல்லவா? ஆனாலும் இப்போதுள்ள நாய் வளர்க்கமுடியாத சூழலில் பூனை பரவாயில்லை என்றே தோன்றியதால் பூனைக்குச் சம்மதம் கொடுத்துவிட்டேன். சாயிலாவுக்கோ இரட்டிப்புச் மகிழ்ச்சி.

அப்படித்தான் பிள்ளை எங்கள் வீட்டுக்கு வந்தான்.

பிள்ளை ஒரு கறுவல் குட்டி. அங்கேயே பிரச்சனை ஆரம்பித்துவிட்டது. கொஞ்சம் சிவலையான குட்டியைத்தான் முதலில் சாயிலா தேர்ந்தெடுத்தாள். ஆனால் நான் விடாப்பிடியாக மறுத்துவிட்டேன். ஏனெனில் நான் கொஞ்சம் கறுப்பு. அதனால் வீட்டுக்குள் வரும் பூனை என்னைவிடக் கறுப்பாக இருக்கவேண்டுமென்று உறுதியாகச் சொல்லிவிட்டேன். உன்னைவிடக் கறுப்பாக வேண்டுமென்றால் கரிச்சட்டியைத்தான் வளர்க்கவேண்டும் என்று சாயிலா சொன்னாள். இப்படி நிறத்தை வைத்து அவமரியாதை செய்யலாமா என்று கேட்டேன். வெள்ளைக்காரர்கள் செய்தால்தான் தவறு. தான் செய்யலாம் என்று அதற்கும் ஒரு பதில் வந்தது. எல்லாவற்றுக்கும் சாயிலா பானுவிடம் ஒரு பதில் இருக்கும். அல்லது அவளிடன் பதிலிருக்கும் கேள்விகளை மாத்திரமே நான் கேட்டுப் பழகிவிட்டேனோ என்னவோ. எப்படியோ இரண்டு மூன்று இடங்கள் அலைந்து கடைசியில் ஒரு கட்டைக் கறுவல் பூனைக் குட்டியை சாயிலா தேர்ந்தெடுத்தாள். உண்மையில் அவளுக்குத்தான் என்னைவிடக் கறுவலைப் பிடிக்கும். ஆனால் இப்போதெல்லாம் அதை அவள் இலேசில் ஒப்புக்கொள்வதில்லை.

அடுத்தது பெயர் வைக்கும் படலம். எனக்கு இந்தப் பெயர் விசயத்தில் அத்தனை படைப்பாற்றல் கிடையாது. அந்தக் கோகனட் பெயர்கூட அலுவலக நண்பி ஒருத்தியின் பூனையுடைய பெயர்தான். நான் அந்தக் கறுவலுக்கு சிம்பா எனப்பெயர் வைக்கலாம் என்று சொன்னேன். ஆனால் சாயிலா சிம்பா ஒரு சிங்கம், அதன் பெயரை பூனைக்கு எப்படி வைப்பது என்று விட்டாள். ஒரு அழகான தமிழ்ப்பெயரை வைக்கவேண்டுமென்று அவள் வாதிட்டாள். சரி என்று நம் இலக்கியத்தில் பூனைகளுக்கு என்ன பெயர் வைத்திருக்கிறார்கள் என்று தேடினேன். அசோகனின் வைத்தியசாலையில் மாத்திரம் கொலிங்வூட் என்று ஓர் பூனை வந்தது. மற்றபடி பழந்தமிழ் இலக்கியத்தில் யாருமே பூனைக்குப் பெயர் வைப்பதில் நேரத்தைச் செலவிடவில்லை என்று தோன்றியது. எடுபட்டுத் திரியும் கழுதைக்கு பெயர் வேறு ஒரு கேடா என்று நம் முன்னோர்கள் யோசித்திருக்கக்கூடும். பூனையை அவர்கள் வெருகு, வெருக்கு, பிள்ளை, பூசை என்று வேறு பல பெயர்களில் அழைத்திருக்கிறார்கள். ஆனால் ஏனோ பூனையை பூனை என்று அழைக்கவேயில்லை. இதைக்கேட்ட உடனேயே சாயிலா பானுவின் முகம் அகமலர்ந்துபோனது.

“பிள்ளை என்று வைக்கலாமா? ஸோ கியூட்”

“என்னடி சொல்றாய்? பிள்ளையா? நாராயணன் பிள்ளை பெயரை ஒரு பூனைக்கு வைப்பதா? அப்பா கோவிக்கப்போறார்”

“ம்ஹூம், மனுசன் சந்தோசப்படுவார். பெர்னாந்தோபிள்ளைக்கு ஓகே சொல்லவில்லையா அவர்?”

எனக்கென்றால் இந்தப் பெயர் ஆராய்ச்சியை சாயிலா பானு முதலிலேயே செய்துவிட்டுத்தான் என்னிடம் தமிழில் பெயர் வைக்கவேண்டும் என்று அலப்பறை பண்ணினாளோ என்ற சந்தேகம் வந்தது.



"கலரை உங்கட இஷ்டத்துக்கு விட்டனான். அதால பெயரை நான்தான் வைப்பன். பிள்ளைதான் பைனல்."

அவ்வளவுதான். அவள் பிள்ளையைத் தூக்கி மடியில்வைத்து காதில் மூன்றுமுறை 'பிள்ளை, பிள்ளை, பிள்ளை' என்று உச்சரிக்க எங்கள் வீட்டுக்குப் பிள்ளை வந்துவிட்டது.

இப்போதுதான் சிக்கல் வெடித்தது. ஏதோ பிள்ளை வேண்டுமென்ற ஆசையில் அதைக் கொண்டுவந்துவிட்டோமே ஒழியப் பிள்ளை வளர்ப்பு எவ்வளவு கடினம் என்பது பின்னர்தான் தெரியவந்தது. நாங்கள் நிக்காஹ் செய்த இந்த ஐந்து வருடங்களில்கண்ட கண்ட நாய்களெல்லாம் எம்மைப்பார்த்து 'எங்கே பிள்ளை? எப்போ பிள்ளை?' என்று கேட்டுத் தொந்தரவு பண்ணிக்கொண்டிருந்தன. அதனால் வீட்டில் பிள்ளை வந்த பின்னர் அதுகள் எல்லாம் ஆர்வத்தோடு வீடு தேடி வந்து பிள்ளைக்குக் கக்கா துடைத்து, குளிப்பாட்டி, நித்திரையாக்கி வளர்த்தெடுக்குமென்று நாம் நம்பினோம். ஆனால் அத்தனை நாய்களும் அப்புறம் வேறு பிள்ளையில்லா சோடியிடம் போய்க் கேள்வி கேட்டுக்கொண்டிருந்தனவே ஒழிய எங்கள் வீட்டுப்பக்கம் எட்டிப் பார்க்கவேயில்லை. எமக்கென்றால் கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை.

முதலில் பிள்ளை கண்ட கண்ட இடத்தில் எல்லாம் கக்காவும் சிச்சாவும் இருந்தது. வீட்டின் கார்ப்பற் நாறியது. சரி வேண்டாம் என்று வெளியே கொண்டுபோய் விட்டால் சீவன்

போவதுபோல அது அழுது ஆர்ப்பாட்டம் செய்தது. நான் வேலையில் பிஸியாக இருக்கும்போது காலடியில் வந்து கிடந்து தன் வயிற்றைத் தடவிவிடுமாறு கட்டளை இட்டது. இரவு உணவுக்குப் பின்னர் நானும் சாயிலாவும் உட்கார்ந்து டிவி பார்க்கும்போது அது நடுவில் வந்து உட்கார்ந்துவிடும். நான் ஆசையில் சாயிலாவை அணைத்து முத்தமிட நெருங்கினால் அந்தக் கழுதை தன் முன்னங்காலால் என் கன்னத்தை விளாசிவிடுகிறது. இந்தப்பிரச்சனை கட்டில் வரை வந்துவிட்டது. கொஞ்ச நாளிலேயே பிள்ளையும் சாயிலாவும் நம் கட்டிலில் படுக்க நான் விருந்தினர் அறைக் கட்டிலுக்கு ஷிப்ட் ஆகிவிட்டேன். பூசை சமயம் இந்தப் பூசை கரடியாட்டம் குறுக்கே வந்துவிடும். நாங்கள் மகிழ்ச்சியாக இருக்கவேண்டுமென்றால் பிள்ளையைக் கொண்டுபோய் கராஜில் நின்ற மகிழுந்துக்குள் அடைத்தால்தான் முடியும் என்ற நிலை எங்கள் வீட்டில் வந்துவிட்டது. அப்போதும்கூட எங்கள் பிள்ளை கடுப்பில் அந்த மகிழுந்தை என்ன செய்து வைத்திருக்கும் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

அடுத்த முக்கிய பிரச்சனை desexing இல் வந்தது. அதாவது எங்கள் தமிழில் சொல்லுவதென்றால் பிள்ளைக்கு நலமடிப்பது. எனக்கு இதிலே சம்மதமேயில்லை. அடிப்படையில் நான் விலங்குரிமைவாதி. ஒரு மிருகத்துக்கு நலமடித்துவிட்டு உன் நல்லதுக்குத்தான் செய்தேன் என்று சொல்லுவது, ஊர் முழுதும் ஆர்மி சென்றியைப் போட்டு, இளைஞர்களைப் போதைக்கு அடிமையாக்கிவிட்டு உங்கள் நன்மைக்குத்தான் செய்தேன் என்று சொல்வதற்குச் சமம். அதுவும் என் பிள்ளையை நானே நலமடிப்பதா என்று எனக்குப் பயங்கர கோபம். இன்னொரு முக்கிய காரணம் நலமடிப்பதற்கு எப்படியும் இருநூறு டொலர்கள்வரை செலவாகும் என்பது. ஆனால் அதை நான் மறந்தும் சாயிலாவுக்கு சொல்லவில்லை. என் தொடர்ச்சியான பிடிவாதத்தால் ஈற்றில் பிள்ளையைப் பிள்ளையாகவே விட்டுவிட சாயிலாவும் சம்மதித்துவிட்டாள்.

ஆனால் பிரச்சனை அப்புறம்தான் ஆரம் பித்தது.

வீட்டுக்கு வந்து நான்கே மாதங்களில் பிள்ளை அக்கம் பக்கமிருந்த வீடுகளுக்கு வேலி தாண்ட ஆரம்பித்துவிட்டது. சமயத்தில் வேறு பல பூனைகளும் எங்கள் வீட்டுக்கு வர ஆரம்பித்தன. எங்கள் வீட்டுப் பிள்ளையை நாம் சரியாக வளர்த்தாலும் வெளியிலிருந்து வரும் பிள்ளைகள் எம் முற்றத்துப் புற்தரையில் கக்கா இருக்க ஆரம்பித்தன. வீட்டுப் பின்வளவின் சாயிலா ஆசை ஆசையாக ஓர் ஆப்பிள் மரத்தை அப்போதுதான் நட்டு வளர்க்க ஆரம்பித்திருந்தாள். இந்தப் பூனைகள் அதனடியில் வந்து தங்கள் வரலாற்றை எழுதிவைத்துவிட்டுப் போக ஆரம்பித்தன. ஒருநாள் பொறுக்கமுடியாமல் நான் பூனை களை எப்படித் துரத்துவது என்று இணையத் தில் தேடியபோது அவற்றுக்கு லாவண்டர் வாசமென்றால் ஒவ்வாமை என்பதை அறிந் தேன். உடனேயே நான் பன்னிங்ஸ் கடைக்குச் சென்று லாவண்டர், எலுமிச்சம் பழச்சாறு அடைத்த போத்தல்களை வாங்கி வந்து வேலிக்கரை முழுதும் தூவிவிட்டேன். இரண்டு நாட்களுக்கு எந்த எடுபட்ட பூனைகளும் நம் வீட்டுக்கு வரவில்லை. பிள்ளைகூட வீட்டுக்குள்ளேயே பதுங்கிவிட்டது. ஆனால் பின்னர் ஒரு மழை பெய்து எல்லா வாசத்தையும் கரைத்து விட மறுபடியும் பூனைகள் வளவுக்குள் வரத்தொடங்கின. அதைவிட எங்கள் பக்கத்து வீட்டிலிருந்த போர்த்துக்கேயன் எங்கள் வீட்டுக்கு வந்து பிள்ளை அவர்கள் வீட்டு வளவில் கக்கா இருப்பதாக முறைப்பாடு செய்தான். இதற்குமேல் சமாளிக்கமுடியாது என்று எங்கள் பிள்ளைக்கு நலமடிக்கலாம் என்று நான் கடைசியில் ஒரு வழிக்கு வந்துவிட்டேன். மிருக வைத்திய நிலை யத்துக்கு அழைப்பெடுத்து வார இறுதியில் சத்திர சிகிச்சைக்குப் பதிந்தும் விட்டேன்.

அதை அறிந்தோ என்னவோ, அடுத்த நாளே பிள்ளை வீட்டைவிட்டு ஓடிவிட்டது.

அப்புறமென்ன? எங்குத் தேடியும் அதனைக் காணக்கிடைக்கவில்லை. பிள்ளையின் படத்தை லாமினேட் செய்து, ‘காணவில்லை’ என்று எழுதிச் சுற்று வட்டாரம், பல்பொருள் அங்காடி முகப்பெல்லாம் ஒட்டிவைத்தோம். காவல் துறையிடமும் புகார் கொடுத்தோம். ஆனால் போன பிள்ளை போனதுதான். இரண்டு வாரங்கள் பயங்கரக் கவலையாக இருந்தது. பிள்ளை இல்லாத நம் வாழ்வை நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. பிள்ளை எம்மோடு இறுதிவரை கூடயிருந்து நம்மை நன்றாகப் பார்த்துக்கொள்ளும் என்று நம்பியிருந்தோம். ஆனால் திடீரென்று ஒரு நாள் அது குடை துலைவதுபோல துலைந்துபோனது. ஆனால் கடவுள் நம்மைக் கைவிடவில்லை. பிள்ளை தொலைந்த மூன்றாவது வாரமே நல்லூரான் அருளில், சாயிலாவைக் கேட்டால் அல்லாவின் கருணை என்பாள், எது எப்படியோ, நல்லவிசயம்,

என் மனைவி சாயிலா பானு கருத்தரித்துவிட்டாள்.

எனக்கென்றால் பயங்கரச் சந்தோசம். இந்த சேகர் நாராயணன் பிள்ளைக்கு உண்மையிலேயே ஒரு வாரிசு உருவாகிவிட்டது. ஸ்கான் பண்ணியும் பார்த்துவிட்டோம். ஆண் வாரிசு. அதற்கு முதல் சொத்து எல்லாவற்றையும் பிள்ளைக்கு, அதாவது காணாமற்போன பிள்ளைக்கே எழுதுவதாக யோசித்திருந்தேன். இப்போது நிஜத்திலேயே ஒரு மனித வாரிசு. சந்தோசம் என்றால் அப்படி ஒரு சந்தோசம். அதனால் பெயரையும் சந்தோஷ் நாராயணன் பிள்ளை என்று வைக்கலாமென்றே யோசித்தேன். ஆனால் வழமைபோல சாயிலா சம்மதிக்கவில்லை. அவள் பிள்ளைக்கு ஏ ஆர் ரகுமான் என்று வைக்கலாம் என்றாள். எந்த முடிவும் எட்ட முடியாமல் நாட்கள் நகர ஆரம்பித்தன. சாயிலா பானுவும் நிறைமாதக் கர்ப்பிணியாகிவிட்டாள்.

இந்தச்சூழலில்தான் ஒருநாள் அமுதவிஷா அந்தப் பெர்ணாந்தோ புள்ளேயுடன் வீட்டுக்கு வந்தாள். அவர்களோடு அந்தக் கச்சானும் வந்திருந்தது. வழமைபோல பலதும் பத்தும் பேசிக்கொண்டிருந்தோம். கச்சான் எங்களது வரவேற்பறை துருக்கிய கார்ப்பற்றைத் துவம்சம் செய்துகொண்டிருந்தது.

அதைப்பார்த்துக்கொண்டிருந்த கடுப்பில் திடீரென்று நான் தங்கையிடம் சொன்னேன்.

“அமுதவிஷா எவ்வளவு காலம்தான் நீங்கள் இரண்டுபேரும் தனியாவே இருப்பீங்கள்? வயது போனால் பிறகு நினைச்சாலும் செய்ய ஏலாது. எப்ப எங்களுக்கெல்லாம் நல்ல நியூஸ் சொல்லி டிறீட் தரப்போறீங்கள்?”

அவளுக்குக் கோபம் வரவேண்டுமென்று தான் நான் கேட்டேன். ஆனால் ஆச்சரியமாக அமுதவிசம் வெட்கப்பட்டது. பக்கத்தில் நின்ற பெர்ணாந்தோபுள்ளேயின் கைகளைப் பற்றிக்கொண்டது.

“அண்ணா நானும் இப்ப பிரக்னண்ட்தான். ஆம்பிளைப்பிள்ளை. பெயர்கூட முடிவு செய்துவிட்டோம்”

நான் அதிர்ந்து போனேன். சாயிலா பானுவின் முகத்தில் ஈயாடவில்லை. அவள் சடக்கென்று டென்சனாகிக் கேட்டாள்.

“என்ன பெயர் அது?”

அமுதவிசம் மேலும் வெட்கப்பட்டுக் கொண்டே சொன்னது...

“அனிருத் பெர்ணாந்தோ பிள்ளை”

# ஒப்பிட்டு உழல் மனம்



கேதா

மானுடராய்க் கூர்ப்படைந்த உயிர்கட்கெல்லாம்
மனதுக்குள் மந்திக் குணம் மாறாதுண்டு
கடல் தாண்டித் தொலைதூரம் வந்தால் கூட
அதைக் கவனமாகக் காவுகிறார் காலந்தோறும்

போகின்ற இடம்தன்னை புரிந்திடாமல்
போகின்ற நோக்கமதும் புலப்படாமல்
போய் என்ன செய்வதென்றும் முடிவில்லாமல்
புகுவார் பின் புகுவதையே தொழிலாய்ச் செய்வார்

நிலைகொள்ளா மனதோடு நிதமும் வாடி
நடைபோடும் வழி எழிலை நயந்திடாமல்
நாளைக்கு என்ன என்றே நடுக்கமுற்று
நற்கணங்கள் நாள்தோறும் தொலைக்கின்றாரே

தமக்கென்ன வேண்டுமென்ற முடிவை ஆங்கே
தம்மருகே வாழ்கின்ற மனிதர் கொள்ளும்
பொருளோடு போகத்தைக் கொண்டே அதுவே
பொருத்தமென்று தம்வாழ்வில் பொருத்திக்கொண்டார்

முகமறியா மனிதனவன் உயர்வைக் கண்டு
முகநூலில் பெருமையொடு பகிர்ந்தாற்கூட
அருகாமை உள்ளவனின் வளர்ச்சி கண்டால்
அடிவயிறு கனன்று மனம் உழல்வதேனோ

தக்காரைச் சேர்வதில்லை பெருமையெல்லாம்
உடனிருப்போர் தயவன்றி உழைப்பால் இல்லை
தமைத் தாண்டி தம் நண்பர் உயர்தல் கண்டு
ஒருநூறு காரணங்கள் உரைக்கும் நெஞ்சம்

அறிந்தவர்கள் புதுமனையில் குடி புகுந்தால்
அதுபிழையோ இது சிறிதோ என்று கூறி
அவர் மனதில் சஞ்சலத்தை விதைத்தே
மீளும் அரியவகை உயிரினத்தை அறிந்ததுண்டோ

சுற்றத்தைத் தன்னோடு ஒப்புக்கு நோக்கி
சுழலிட்ட இலைபோலச் சிதறி ஆங்கே
சித்தமது கலங்கித் தமைத் தொலைக்கின்றாரே
சீரோங்கும் வாழ்வதனைச் சிதைக்கின்றாரே

அவரவரின் ஆழ்மனதின் ஆசைகளை
அக்கறையாய் அவரவரே கேட்டு ஆங்கே
தமக்கான இலக்குகளைத் தாமே வைக்கும்
தனி வாழ்வை வாழ ஒரு தடையுமுண்டோ

அழுக்காறு அகன்ற ஒரு நெஞ்சு வேண்டும்
அன்பெனும் அமுது அதில் ஊற வேண்டும்
இடுக்கண்ணும் வாழ்வில் ஒரு பாகமென்று
உணர்ந்து அது இன்பத்தில் திளைக்கவேண்டும்

# பரிசில்களை வெல்லுங்கள்!

பேரன்புக்குரிய இளவேனில் வாசகர்களே!
உங்கள் வாசிப்பு அனுபவங்களை எங்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள். அவற்றை வாசிக்க நாங்கள் ஆவலோடு காத்திருக்கிறோம். அதுமட்டுமல்ல, தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த வாசகர் அனுபவப் பகிர்வுகளுக்கு பரிசில்களும் காத்திருக்கின்றன. நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் ஒன்றுதான். இளவேனிலின் ஆக்கங்களை ஆர்வத்தோடு வாசியுங்கள். அவை உங்களுக்குக் கொடுக்கும் அனுபவத்தை எங்களுக்கு எழுதி அனுப்புங்கள். ஆசிரியர் குழு தேர்ந்தெடுக்கும் வெற்றியாளர்களுக்கு பொங்கல் வெளியீட்டில் பரிசில்கள் வழங்கப்படும்.

# THE MANGO TREE

*Tantalizing your Taste Buds*

## We are Catering for Every Occasion



BIRTHDAY PARTIES, ANNIVERSARIES
WEDDINGS, PUBERTY CEREMONIES
& SPECIAL OCCASIONS



**Special Rates availablef for "ARANGETRAM" FUNCTIONS**
**WE CAN MATCH ANY GENUINE QUOTE! !**

CALL US

**(03) 9791 1111 - 0403 058 808**

12 CLOW STREET, DANDENONG